# தமிழ் ஹிந்துஸ்தானி

தமிழ் படிக்க எழுதத் தெரிந்த அனைவரும் சுலபமாக
இந்துஸ்தானியை உச்சரிப்பு தோஷமின்றி
பேசுவதற்கு மட்டும் கற்கக்கூடியது.

ஆசிரியர் :

பண்டித. க. ம. சிவராம சர்மா "விஸாரத்"

வெளியிட்டவர்கள் :

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்,

நெ. 57, வெங்கட்ராமய்யர் தெரு,

சென்னை—1.

காபிரைபிட்] 1954 விலை ரு. 1—4—0.

# நான்முகம்

உலகத்தில் பல்வேறு பாஷைகள் பேசப்பட்ட போதிலும் ஆங்கிலம் ஒன்று மட்டும் தெரிந்திருந்தால் எவ்விதக் கஷ்டமுமின்றி வெற்றிகரமாக உலகப்பிரயாணத்தை முடிக்கலாம். அதைப்போலவே இந்தியாவில் பல்வேறு பாஷைகள் பேசப்பட்டு வந்தபோதிலும் ஹிந்துஸ்தானி மட்டும் தெரிந்திருந்தாலே போதும்; இந்தியா பூராவும் யாதொரு இடையூறுமின்றி யாத்திரை செய்யலாம்.

இந்தியாவில் ஆங்கிலம் அறிந்தவர்கள் வெகு சிலரே. ஹிந்துஸ்தானி புரிந்து கொள்ளக் கூடியவர்களும், பேசக்கூடியவர்களும்தான் அநேகர். ஆகையால் இந்தியா பூராவும் பிரயாணம் செய்பவர்களுக்கு ஆங்கிலம் உள்பட வேறெந்த பாஷை தெரிந்திருந்த போதிலும் கஷ்டந்தான். ஹிந்துஸ்தானி பேசத் தெரிந்திருந்தால்தான் எவ்விதக் கஷ்டமும் இருக்காது. ஆகையால், நம்தேசத்தில் பெரும்பாலோருக்கு (முப்பதுகோடி ஜனங்களுக்கு) தெரிந்திருக்கும் பாஷையாகிய ஹிந்துஸ்தானியை தென்னிந்தியர் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ளவேண்டியது மிக மிக அவசியம்.

ஹிந்துஸ்தானி பாஷையின் இலக்கிய இலக்கணத்தை பரிபூர்ணமாக அறிந்து கொள்வதுதான் நல்லது. ஆனால் அதற்கென அதிக உழைப்பும், நேரமும் தேவையாயிருக்கும். இந்நூல் எழுதப்பட்டதின் நோக்கம் அதுவல்ல என்று வெளிப்படுகிறது. ஹிந்துஸ்தானி பாஷையில் பேசுவதற்கு மட்டும் போதிய

ஞானத்தை, சொற்பகாலத்திலேயே உண்டாக்குவது தான் இந்நூலாசிரியரின் கருத்து எனத்தெரிகிறது.

நாகரி லிபியோ, பாரசிக அல்லது அராபி லிபியோ இல்லாமலே தமிழ் அக்ஷரங்களைக்கொண்டே ஹிந்துஸ்தானி பேசக்கற்றுக்கொடுக்க இந்நூலில் பெருமுயற்சி செய்யப்பட்டிருக்கிறது. இத்தகைய சிறந்த நூல் இதுவரையில் வெளிவந்ததாகக் காணப் படவில்லை. ஹிந்துஸ்தானீ பாஷையிலுள்ள சில பதங்களை தமிழ் மட்டும் அறிந்தவர்கள் சுத்தமாக உச்சரிப்பது சற்று கஷ்டமே. அப்பெருங்குறைமை நீக்க பல உன்னத முறைகளை இந்நூலாசிரியர் கையாண்டு ஓரளவுக்கு வெற்றிபெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பண்டித. ஸ்ரீ. கே. எம். சிவராம சர்மா "விசாரத்" இந்நூலை எழுதி தமிழ் நாட்டுக்கு உதவ முன்வந்ததைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறேன். இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பே மகாத்மா காந்தி மடிகளால் அலகாபாத்தில் பயிற்சியளிக்கப்பட்டு, தென்னிந்திய ஹிந்தி பிரசாரத்திற்கென்றே முதன் முதலாக சென்னைக்கு அனுப்பப்பட்டவர்களில் ஸ்ரீ. சிவராம சர்மா "விசாரத்" ஒருவராவர்.

இத்துறையில் பகீரதப் பிரயத்தனம் செய்து உருப்படியாக காரியத்தை நடத்திக்காட்டியவர்கள் ஸ்ரீ. பண்டித கே. எம். சிவராம சர்மா அவர்களும் ஸ்ரீ ஹரிஹர சர்மாவும் தான் என்பதை யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. இன்று தென்னிந்தியாவில் லக்ஷக்கணக்கானவர்கள் ஹிந்துஸ்தானியைக் கற்றுக்கொண்டிருப்பது அவர்களின் உண்மையான உழைப்பின் காரணந்தான்.

ஸ்ரீ சிவராம சர்மா அவர்கள் ஹிந்துஸ்தானி பாஷையில் விசேஷ பாண்டித்தியம் படைத்தவர். தென்னிந்தியர்களுக்கு ஹிந்துஸ்தானி கற்றுக் கொள்ள எத்தகைய புத்தகம் எழுதி வழங்குவது என்பது ஒரு பெருத்த புதிராயிருந்த சமயத்தில் தைரியமாக முன்வந்து ஒரு சிறந்த முறையைக் கையாண்டு வழிகாட்டியவர் அவரே. பிற்காலத்தில் தமிழ் நாட்டில் வெளிவந்த மற்ற ஹிந்தி வாசக புத்தகங்களுக்கெல்லாம் தாயகம் போன்றது அவர் எழுதிய முதல் புத்தகமேயாம்.

தமது இருபத்தைந்து வருட சிறந்த அனுபவத்தையும், நுட்பமான அறிவையும்கொண்டு இந்த உபயோககரமான புத்தகத்தை எழுதி வெளியிட்டது ஒரு சிறந்த தொண்டென்பதில் சற்றும் ஐயமில்லை. மிகவும் சிரத்தையுடன் வெளியிடப்பட்டுள்ள இந்நூலினால், ஹிந்திப் பேசும் படங்களை நன்றாக ரஸிக்கலாம். அது மட்டுமல்லாமல் உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், யாத்ரீகர்கள், மாணவ மாணவிகள் ஏனையோரும் அளவற்ற பலனடையலாம்.

வாலாஜாபேட்டை,<br>வடார்க்காடுஜில்லா<br>10-8-44

ஆக்கூர் அனந்தாச்சாரி.

# முன்னுரை

நமது தென்னிந்தியாவில் சென்ற இருபத்தைந்து வருஷ காலமாக ஹிந்தி பிரசாரம் நடந்து வருகிறது. காங்கிரஸ் அதிகாரிகள் ஹிந்தியை கட்டாயமாக கற்க வேண்டுமென்றார்கள். ராணுவ இலாகாவிலும் அதைச சார்ந்த பல அன்னிய இலாகாக்களிலும் ஹிந்தி கற்க வேண்டியது கட்டாயமாகும். எனவே நம் தேசத்துக்கு ஒரு பொது பாஷை தேவை என்றும் அதுதான் ஹிந்தி அல்லது ஹிந்துஸ்தானி என்றும் நன்கு விளங்கும்.

ஹிந்தி அல்லது ஹிந்துஸ்தானி என்கிறீர்களே இரண்டும் வெவ்வேறல்லவா? ராணுவத்தில் கற்பிப்பது ரோமன் உருது அல்லவா? நீங்கள் அதை ஹிந்தியென்று எப்படி சொல்லலாம் என்று சிலருக்கு சந்தேகம் உண்டாகலாம். உண்மையில் இம்மூன்றுக்கும் அதிக பேதமில்லை அடிப்படையான ஒரு பொதுத் தன்மை இம்மூன்றுக்கும் உண்டு; இதை சற்று விவரிப்போம்.

நம் நாட்டில் இயற்கையாய் தாய்மொழியாயிருந்தது ஹிந்தி. இது ஸம்ஸ்கிருதத்தினின்றும், பிராகிருதம், பாலி முதலிய மொழிகளினின்றும் பிறந்தது. பல நூற்றாண்டுகள் வரை நம் நாட்டில் முகம்மதியர்களுடைய ஆட்சி நடந்து வந்தது. இதனால் அவர்களுடைய தாய்மொழிகளாகிய அரபி பார்ஸீ பாஷைச் சொற்கள் பல நம் நாட்டு பாஷைகளிலும் முக்கியமாக ஹிந்தியிலும் கலந்துவிட்டன.

தற்காலத்தில் துரைமார்கள் கடைக்குச் சென்று பல ஆங்கில மொழிகளையும் ஒன்றிரண்டு தமிழ் சொற்களையும் பேசுவதை நாம் காண்கிறோம். இதே விதமாக புதிதாக வந்த முகம்மதியர்கள் பல பார்ஸீ அரபிச் சொற்களுடன் சில ஹிந்தி சொற்களைக் கலந்து பேசியிருப்பார்கள். இப்படிப்பட்ட கலப்பு பாஷைக்கு உருது என்று பெயர் வந்தது. முதலில் இது பேச்சு பாஷையாகவே இருந்தது. பிறகு இது ஒரு தனிச் சிறப்புப்பெற்றது. கோல்குண்டாவில் இதை நன்கு ஆதரித்து வளர்த்தார்கள். பார்ஸீ எழுத்தில் இதை எழுதி பார்ஸீ அரபி பாஷைகளின் பல விசேஷ குணங்களை இதில் கலந்தார்கள். இப்படி இருந்தும் பல ஸம்ஸ்கிருதச் சொற்கள் நீக்க முடியா வண்ணம் இதில் கலந்துதான் இருந்தன. இப்படி ஹிந்தி ஹிந்துக்களுடைய பாஷை என்றும் உருது முகம்மதியர்களுடைய பாஷை என்றும் கருதப்பட்டு வந்தது. உண்மையில் ஹிந்தியையும் பல முகம்மதிய அறிஞர்கள் ஆதரித்து வந்தார்கள். பல ஹிந்துக்களும் உருதுவை ஆதரித்து வந்தார்கள். இரண்டும் வட இந்தியாவில் பிறந்து வளர்ச்சி பெற்றுவந்த சகோதரி பாஷைகளே.

முகலாய அரசர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு ஆங்கில அரசாங்கத்தாரின் செல்வாக்கு வளர்ந்தது. பள்ளிக்கூடங்களில் புதிய முறையில் கற்பிப்பது ஆரம்பமாயிற்று. பாடசாலைகளில் போதிக்கத் தகுந்த வாசக புத்தகங்கள் பல பாஷைகளில் புதிதாக எழுதப்பட்டன. அப்பொழுது ஹிந்தி உருது புத்தகங்கள் விஷயமாக ஒரு சிலருக்கு ஒரு யோசனை தோன்றிற்று. உருதுவும் ஹிந்தியும் இலக்கிய சம்பந்தப்பட்ட வரை

யில் வெவ்வேருக யிருந்தாலும் பேச்சளவில் இரண்டுக்கும் பேதம் இல்லை. உருதுவை தாய் மொழியாகக் கொண்டவர்கள் பேச்சுக்கும், ஹிந்தியை தாய் மொழியாய்க் கொண்டவர்களுடைய பேச்சுக்கும் பேதம் மிகக் குறைவு; ஏன் இல்லையென்றே சொல்லலாம். எழுத்தாளர்களும் பேச்சுத்திறமை கொண்டவர்களும் உருதுக்கு அரபி பார்ஸி போர்வையையும், ஹிந்திக்கு ஸம்ஸ்கிருதப் போர்வையையும் போர்த்தாலும் ஸாதாரணமாய் பேசுகிறவர்கள் எப்பொழுதும் இப்போர்வைகளை போர்த்திருக்க முடியாது.

ஆகையால் போர்வையற்ற பொது நடையில் புத்தகங்கள் தயார்செய்து அவைகளையே ஹிந்தி எழுத்திலும் உருது எழுத்திலும் வெளியிடலாம் என்று கருதப்பட்டது. இப்பொழுது மொழிக்கு ஹிந்துஸ்தானி என்று பெயரிடப்பட்டது. இதுதான் இயற்கையானது.

ஹிந்தி, ஹிந்துஸ்தானி, உருது இம்மூன்றுக்கும் உள்ளபேதத்தை ஒரு சிறு உதாரணத்தால் நாம் நன்கு விளக்கலாம். தமிழில் "போஜனம் செய்து விட்டு நித்திரை செய்யுங்கள்" என்கிருர் ஒருவர். மற்ருெருவர் "சாப்பிட்டு விட்டு தூங்குங்கள்" என்கிருர். மூன்ருவது ஒருவர் "உண்டு விட்டு உறங்குங்கள்" என்கிருர். இம்மூவரும் வெவ்வேறு சொற்களை உபயோகித்தாலும் பாஷை வேறல்ல; மூன்றும் தமிழே. ஒன்றில் வடமொழி கலந்திருக்கிறது. இரண்டாவது இயற்கையானதும் எளிதானதுமான தமிழ். மூன்ருவது கடினமான தமிழ். இதே விதமாக ஹிந்தி, ஹிந்துஸ்தானி உருது இம்மூன்றினுள் ஹிந்துஸ்தானிதான் இயற்கையானதும் எளிதானதும்.

ராணுவ இலாகாக்காரர்கள் எழுத்துச் சண்டையி லிருந்து நீங்க விரும்பி ஹிந்துஸ்தானியை ஆங்கில எழுத்தில் எழுத ஆரம்பித்தார்கள். ஆங்கில எழுத் துக்கு ரோமன் எழுத்து என்று பெயர். ஆகையால் ரோமன் எழுத்தில் எழுதிய ஹிந்துஸ்தானியை அவர் கள் 'ரோமன் உருது' என்று பெயரிட்டார்கள். ஹிந்தி, ஹிந்துஸ்தானி, உருது என்ற மூன்றுக்கும் அதிக பேதமில்லை என்பது தெளிவு.

இப்பொழுது இந்த பாஷையை கற்க வேண்டி யது அவசியம் என்பதை விளக்கவேண்டாம். பலர் பலகாரணங்களைக்கொண்டு நாம் இந்த பாஷையை கற் காமல் போய் விட்டோமே என்று வருந்துகிறார்கள். சிலர் தமிழ் சினிமாக்களைக் காட்டிலும் ஹிந்தி சினி மாக்கள் நன்றாய் இருக்கின்றனவென்று நினைக்கிறார் கள். அவர்கள் நடிப்பைக் கண்டும், பாட்டையும் கேட்டு மட்டும் திருப்தியடையவேண்டி இருக்கிறதே ஒழிய கதையின் விசேஷ அம்சத்தை அறிந்து கொள்ள முடிவதில்லை.

மேலும் மதப்பற்றுதல் கொண்ட ஒவ்வொருவரும் பூரி, ஜகந்நாத், கயை, காசி, பிரயாகை, ஹரித்வார், வட மதுரா பிருந்தாவனம் துவாரகை, பண்டரிபுரம் முதலிய இடங்களுக்கு கட்டாயம் போக விரும்புவார் கள். ஹிந்துஸ்தானி பாஷை தெரியாவிட்டால் இந்த ஊர்களில் ஒன்றுமே செய்ய முடியாது.

தற்காலம் ராணுவத்தில் வேலைசெய்ய அநேகர் இந்தியாவில் பல இடங்களுக்கு சென்றிருக்கிறார்கள். அவர்கள் ஹிந்தி அறிந்தால் பல அனுகூலங்கள் பெற லாம். இதை அவர்களே அனுபவத்தில் உணர்கிறார்

கள். ஆகையால் ஹிந்தி கற்பது மிகவும் அவசிய மாகும்.

ஹிந்தி அல்லது உருது எழுத்தைக் கற்று அதற்குப் பிறகு சாஸ்திர முறைப்படிக்கு ஹிந்துஸ்தானி பாஷை கற்பதென்றால் காலம் அதிகமாகும். அதற்கு வேண்டிய வசதி கிடைப்பதும் கஷ்டம். முக்கியமாக பொது ஜனங்களுக்கு வேண்டியது தங்களுடைய எண்ணங்களை ஹிந்துஸ்தானியிலே எளிய நடையில் வெளியிடுவதும், ஹிந்துஸ்தானியில் பேசுகிறவர்கள் சொல்வதின் கருத்தை தெரிந்துகொள்வதும் தான். இதற்கென்றே இந்தப்புஸ்தகம் வெளியிடப்படுகிறது. இதில் தமிழ் எழுத்து மூலமாகவே எளிய முறையில் ஹிந்துஸ்தானி பேச கற்றுக்கொள்ளுமாறு பாடங்கள் எழுதப் பட்டிருக்கின்றன.

இந்தப் புஸ்தகத்தின் நடை ஸம்ஸ்கிருதச் சொற்கள் நிறைந்த ஹிந்தியும் அன்று, அரபி பார்ஸீ நிறைந்த உருதுவுமன்று, ஹிந்தி அன்பர்களும் இதை வரவேற்பார்கள்; உருது அன்பர்களும் இதை வரவேற்பார்கள்; இதை ஹிந்தி என்றாலும் தகும். உருது என்றாலும் தகும். தமிழ் எழுத்திலேயே இருப்பதால் இதை நாம் "தமிழ்-ஹிந்துஸ்தானி" என்கிறோம்.

பாடங்கள் சிறிதாக ஆரம்பமாகி பெரிதாக வளர்கின்றன. சிறுகுழந்தை அன்னியர்கள் பேசுவதை கேட்டு பன்முறை தான் தாறுமாறாகப் பேசியும் கடைசியில் சரியாகப்பேசவும் கற்றுக்கொள்கிறது. அக் குழந்தை பெரியவனாகி விஷயம் அறிந்து கொள்ளும் திறமை பெற்ற பிறகு தான் இலக்கணம் படிக்கிறான். புது பாஷைகளை இந்த முறையில் கற்பதுதான் சரி

என்பது பல அறிஞர்களின் அபிப்பிராயம். இந்தப் புஸ்தகத்திலிருக்கும் பாடங்களை தெளிவாக, உரக்கப் படிக்கவேண்டும். நண்பர்கள் கிடைப்பார்களாகில் சம்பாஷித்துக்கொள்ளலாம். ஒருவர் கேள்வி கேட்கலாம்; மற்றொருவர் விடை கூறலாம். நண்பர்கள் இல்லாவிடில் தானே உரக்க ஹிந்துஸ்தானியில் கேள்வி கேட்டு விடையையும் ஹிந்துஸ்தானியில் உரக்க சொல்லவேண்டும். ஒவ்வொரு பாடத்தையும் குறைந்தது இரண்டு, மூன்றுநாள் படிக்கவேண்டும். ஒரே நாளில் பல பாடங்களை படிக்க முயற்சி செய்வது தவறான முறையாகும்.

நாம் புது இடங்களுக்குச் சென்றால் அங்கு நாம் முக்கியமாக அறியவேண்டிய எல்லா விஷயங்களைக் குறித்தும் முதற் பகுதியில் பாடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பாடங்களையெல்லாம் நன்கு படித்த பிறகு இரண்டாம் பகுதியைப் படிக்கவேண்டும். இதில் ஹிந்துஸ்தானி இலக்கணத்தின் முக்கிய அம்ஸங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டாம் பகுதியைப்படித்த பிறகு மற்றொரு முறை முதற் பகுதியை கவனத்துடனும் நிதானமாயும் படிக்கவேண்டும். கூடுமானால் பாடங்களை மனப்பாடமாக்கிக்கொள்ளுதல் நலம். இவ்வாறு படிப்பதால் ஹிந்தி பாஷையின் நுட்பம் நன்கு விளங்குவது மட்டு மல்லாமல் சொற்களும் உறுதியாக நினைவிலிருக்கும். மூன்றாம் பகுதியில் நாம் அறியவேண்டிய பல சொற்கள் இனவாரியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆசிரியன்.

# எழுத்துப்பாடம்

## எழுத்துக்களின் உச்சரிப்பு

ஹிந்துஸ்தானியில் உள்ள பல எழுத்துக்களின் சரியான உச்சரிப்பைக் குறிப்பிடும் எழுத்துக்கள் தமிழில் இல்லை. முக்கியமாக உயிரெழுத்துக்களில் இக்குறை அதிகம்.

க - ங; ச - ஞ; ட - ண; த - ந; ப-ம இவைகளில் ஒவ்வொரு ஜதையின் மத்தியிலும் தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி ஆகிய பாஷைகளில் மூன்று மூன்று எழுத்துக்கள் உண்டு. இதை சாதாரணமாக ஒவ்வொரு ஜதையின் முதல் எழுத்துக்குப் பக்கத்தில் '1' என்ற இலக்கம் கொடுத்து அதை முதல் எழுத்தாகவும், '2' என்ற இலக்கம் கொடுத்து இரண்டாவது எழுத்தாகவும், '3' என்று கொடுத்து மூன்றாவது எழுத்தாகவும், '4' என்று கொடுத்து நான்காவதாகவும் கருதுவது வழக்கம். உதாரணமாக க-ங என்ற இரு எழுத்துக்களுக்கு மாறாக க ஒன்று, க இரண்டு, க மூன்று, க நான்கு என்று எண்கள் எழுதி வேற்றுமை காட்டுவது வழக்கம்.

இந்த வேறு பாடுகள் சரிவர அறிந்து கொள்ளாவிட்டால் உச்சரிப்பு மாறும். அதனால் அர்த்தமும் மாறிவிடும். உதாரணமாக "கானா" என்பதில் 'கா' வன்னா முதலாவதா யிருந்தால் அதை kana என்று உச்சரிக்கவேண்டும். அதற்கு அர்த்தம் ஒற்றைக் கண்ணன்; 'கா' வன்னா இரண்டாவதா யிருந்தால் உச்சரிப்பு Khana, என்று அர்த்தம்; உணவு என்றும்

ஆகும். 'கா' வன்று மூன்றாவதா யிருந்தால் அதன் உச்சரிப்பு Gana என்றும் அர்த்தம்; பாட்டு என்றும் ஆகும். 'கா' வன்று நான்காவதாயிருந்தால் அதன் உச்சரிப்பு Ghana என்று ஆகும்; இச் சொல்லுக்கு அர்த்தம் இல்லை.

ஆனால் பொது வழக்கத்தில் பேசும்பொழுது முதல் 'க' வுக்கும் மூன்றும் 'க' வுக்கும் உள்ள பேதம் நன்கு விளங்குமே யொழிய முதல் 'க' வுக்கும் இரண்டாம் 'க' வுக்கும் உள்ள பேதமும், மூன்றும் 'க' வுக்கும் நான்காம் 'க' வுக்கும் உள்ள பேதமும் நன்கு காணப்படாது. ஏகதேசமாய் இந்துஸ்தானி பேசக் கற்றுக்கொள்ளுவதே நமது நோக்கமாகையால், நாம் இரண்டாவது எழுத்தையும் நான்காம் எழுத்தையும் நீக்கி விட்டால் அதிக நஷ்டமோ கஷ்டமோ உண்டாகாது.

முதல் எழுத்தை அழுத்தமாய் அதிக மூச்சு விட்டு உச்சரிப்பதால் இரண்டாம் எழுத்தும், மூன்றும் எழுத்தை அழுத்தமாய் அதிக மூச்சு விட்டு உச்சரிப்பதால் நான்காம் எழுத்தும் உண்டாகும். இரண்டாவது எழுத்தையும் நான்காவது எழுத்தையும் நீக்கிய பிறகு, உள்ள எழுத்துக்களின் மாறுபாடுகளை நன்கு உணர்ந்து நேயர்கள் உச்சரித்தால் போதும். தக்க பயிர்ச்சி உண்டான பிறகு, ஹிந்தி எழுத்துக்களையோ அல்லது உருது எழுத்துக்களையோ கற்றுக்கொண்டு தம் அறிவை விருத்தி செய்துக்கொள்ளலாம். இவ்வாறு இரண்டாவது எழுத்தையும் நான்காம் எழுத்தையும் நீக்கிவிட்டால் க-ங; ச-ஞ; ட-ண; த-ந; ப-ம ஆகிய ஐந்து ஜதை எழுத்துக்களின் மத்தியில் ஒவ்வொரு எழுத்து தான் சேர்க்கவேண்டிவரும்.

அதிலும் க-ஞ; வுக்கு மத்தியில் ஜ இருப்பதால் இவ்வைந்து ஜதைகளின் மத்தியிலும் புதிதாக சேர்க்க வேண்டிய எழுத்துக்கள் நான்கேயாகும். அதற்கு நாம் க, ட, த, ப என்ற எழுத்துக்களை ஒரு குறியுமில்லாத எழுத்தையே ஒன்ருகவும், ' 1 ' என்ற குறியுள்ள எழுத்தை மற்ஜென்ருகவும் வைத்துக்கொள்ளுகிரேம்.

அதாவது க, க1 ங, ச, ஜ, ஞ, ட, ட1, ண, த, த1 ந, ப, ப1, ம என்று ஆகும். இவ் வெழுத்துக்களின் உச்சரிப்பை நன்கு விளக்க 16-வது பக்கத்தில் சக்கரம் அமைக்கப்பட்டிருக்கிறதை கவனிக்கவும்.

இப்பொழுது உதாரண மூலமாய் விளக்குகிரேம்:— இந்த உச்சரிப்பு பேதங்கள் இவ்வெழுத்துக்கள் ஹிந் துஸ்தானி பதங்களில் வரும்பொழுது மட்டும் தான் என்பது ஞாபக மிருக்கவேண்டும்.

"கண்ணன்" என்பதில் 'க' வை உச்சரிப்பது போலவே எப்பொழுதும் 'க' வை உச்சரிக்கவேண்டும்.

"மாக" என்பதில் 'க' வை உச்சரிப்பது போலவே 'க1' வை உச்சரிக்கவேண்டும்.

"தச்சன்" என்பதில் 'ச' வை உச்சரிப்பது போல வே 'ச' வை உச்சரிக்கவேண்டும்.

"வட்டம்" என்பதில் 'ட' வை உச்சரிப்பது போல வே 'ட' வை உச்சரிக்கவேண்டும்.

"வடம்" என்பதில் 'ட' வை உச்சரிப்பது போல வே 'ட1' வை உச்சரிக்கவேண்டும்.

"தச்சன்" என்பதில் 'த' வை உச்சரிப்பது போல வே 'த' வை உச்சரிக்கவேண்டும்.

"பதம்" என்பதில் 'த' வை உச்சரிப்பது போல வே 'த[1]' வை உச்சரிக்கவேண்டும்.

"பல்" என்பதில் 'ப' வை உச்சரிப்பது போல வே 'ப' வை உச்சரிக்கவேண்டும்.

"பழம்" என்பதில் 'ப' வை உச்சரிப்பது போலவே ப[1]' வை உச்சரிக்கவேண்டும்.

இவைகளைத் தவிர மற்றும் சில புதிய உச்சரிப்பு கள் உண்டு. ஆங்கில Z போன்ற உச்சரிப்பு ஹிந்து ஸ்தானியில் உண்டு. அதை நாம் இங்கு 'ஜZ' என்று கொடுத்திருக்கிறோம்.

ஆங்கில f போன்ற உச்சரிப்பும் உண்டு. அதற்கு ப' என்று கொடுத்திருக்கிறோம்.

ஹிந்தியில் 'ட' வை சில சமயங்களில் நாம் தமி ழில் உச்சரிப்பதுபோல் அழுத்தமாயும் மற்றும் சில சமயங்களில் அழுத்த மில்லாமல் நாக்கை உதறி லேசா கவும் உச்சரிப்பதுண்டு. இவ்விதம் லேசான உச்சரிப் பைக் குறிக்க 'ட' என்ற எழுத்துக்குக் கீழே ஒரு புள்ளி கொடுப்பது வழக்கம். இதுபோன்ற எழுத்து 'டே' என்று உருதுவிலும் உண்டு. உதாரணமாக "லட[1]கா" என்ற பதத்தில் 'ட்' க்குக் கீழே புள்ளி கொடுப்பார்கள். இந்த பதத்தை நாம் மேலே விவ ரித்த வண்ணம் உச்சரிப்பது சரியல்ல ; வட இந்தியர் கள் உச்சரிக்கும்பொழுது நமக்கு லடுகா என்கிறார் களோ அல்லது லள்கா என்கிறார்களோ என்று தோன்றும்.

லேசான உச்சரிப்பு உள்ள இந்த 'ட[1]' வுக்கு இந் தப் புஸ்தகத்தில் நாம் 'ள' என்று கொடுத்திருக்

கிறோம். ரோமன் உருவில் இதை R என்று எழுது கிறார்கள்.

சங்கரன் என்பதில், நாம் 'ச' வை "தச்சன்" என்பதில் வரும் ச வைப்போல் உச்சரிப்பதில்லை, ஸ வைப்போலும் உச்சரிப்பதில்லை. ஷ வைப்போலும் உச்சரிப்பதில்லை. இந்த 'சங்கரன்' என்பதில் இருக் கும் 'ச' வைப்போலவே நாம் "சரவண" "பேசு" முதலிய சொற்களிலுள்ள ச வை உச்சரிக்கிறோம். இச் 'ச' வை குறிக்க கிரந்த எழுத்தாகிய 'ஶ' வை இங்கு கொடுத்திருக்கிறோம்.

யாராவது நம்மைக் கூப்பிட்டால் நாம் உடனே 'ஏன்' என்கிறோம். படிக்கும்பொழுது நிதானமாக 'ஏ'—'ன்' இவ்விரண்டு எழுத்துக்களையும் தெளி வாக உச்சரிக்கிறோமே யொழிய பேசும்பொழுது 'ன்' தெளிவாக இருப்பதில்லை. இப்படி தெளிவற்ற 'ன்' உடைய உச்சரிப்புப் போல் ஹிந்துஸ்தானியிலும் உண்டு. இந்த உச்சரிப்பை குறிப்பிட நாம் 'ங்' என்று எழுதி இருக்கிறோம். இதை அழுத்திப் படிக்கக் கூடாது.

## இப்புஸ்தகத்தில் வரும் எழுத்துக்களும் அவைகளின் உச்சரிப்பும்.

| நெ. | தமிழ் | தெலுகு | ஹிந்தி | தமிழ்ச் சொற்கள் | ஹிந்தி சொற்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | க | క | क | கண் | கலம் (பேனா) |
| 2 | க$^{1}$ | గ | ग | யாகம் | க$^{1}$லத் (பிழை) |
| 3 | ச | చ | च | தச்சன் | சனா (கடலை) |
| 4 | ட | ట | ट | வட்டம் | கட்ஹல் (பலாபழம்) |
| 5 | ட$^{1}$ | డ | ड | வடம் | ட$^{1}$ர் (பயம்) |
| 6 | த | త | त | அத்தர் | தஸ்வீர் (படம்) |
| 7 | த$^{1}$ | ద | द | பதம் | த$^{1}$ரக்த் (மரம்) |
| 8 | ப | ప | प | பனி | பத்தா (இலை) |
| 9 | ப$^{1}$ | బ | ब | பயம் | ப$^{1}$ஹன் (ஸகோதரி) |
| 10 | ஶ | శ | श | சங்கரன் | ஶக்ல் (உருவம்) |
| 11 | ள | ళ | ड़ | படுவா | ஸளக் (சாலை) |
| 12 | ஜz | ౙ | ज़ | — | ஜ$^{1}$zமீன் (நிலம்) |
| 13 | பf | — | फ़ | — | ஆபfத் (ஆபத்து) |

# தமிழ் ஹிந்துஸ்தானி

## பாடம் ஒன்று—ஸப[1]க் ஏக்

ராம் ஆதா ஹை—ராமன் வருகிறான்.

ராம் யஹாங் ஆதா ஹை—ராமன் இங்கே வருகிறான்.

ரஹீம் காதா ஹை—ரஹீம் சாப்பிடுகிறான்; அல்லது தின்கிறான்.

ரஹீம் க்யா காதா ஹை—ரஹீம் என்ன தின்கிறான்?

ரஹீம் ஆம் காதா ஹை—ரஹீம் மாம்பழம் தின்கிறான்.

ஜோஸப்f பானீ பீதா ஹை—ஜோஸப் ஜலம் குடிக்கிறான்.

ஜோஸப்f க[1]ரம் பானீ பீதா ஹை—ஜோஸப் வெந்நீர் குடிக்கிறான்.

ஜோஷப்f தூ[1] த்[1] நஹீங் பீதா ஹை—ஜோஸப்f பால் குடிக்கிறதில்லை.

கோ[1]பால் கேல்தா ஹை—கோபால் விளையாடுகிறான்.

கோ[1]பால் க்யா கேல்தா ஹை?—கோபால் என்ன விளையாடுகிறான்?

கோ[1]பால் டென்னிஸ் கேல்தா ஹை—கோபால் டென்னிஸ் விளையாடுகிறான்.

க்யா வோ க்ரிகெட் கேல்தா ஹை?—அவன் கிரிக்கெட்டு விளையாடுகிறானா?

நஹீங், வோ க்ரி கெட் நஹீங் கேல்தா—அவன் கிரிக்கெட்டு விளையாடுவதில்லை.

வோ கஹாங் கேல்தா ஹை?—அவன் எங்கே விளையாடுகிறான்?

வோ மைதா[1]ன்மே கேல்தா ஹை—அவன் மைதானத்தில் விளையாடுகிறான்.

## பாடம் இரண்டு—ஸப[1]க் தோ[1]

யே ராம் ஹை—இவன் ராமன்

ராம் பட்தா ஹை—ராமன் படிக்கிறான்.

ராம் உர்து[1]பட்தா ஹை—ராமன் உருது படிக்கிறான்.

வோ ஸீதா ஹை—அவள் ஸீதை.

வோ க்யா கர்தீ ஹை?—அவள் என்ன செய்கிறாள்?

வோ லிக்தீ ஹை—அவள் எழுதுகிறாள்.

வோ ஸப[1]க் லிக்தீ ஹை—அவள் பாடம் எழுதுகிறாள்.

ஸீதா ஸ்கூல்மே பட்தீ ஹை—ஸீதை பள்ளிக்கூடத்தில் படிக்கிறாள்.

ராம்பீ[1] ஸ்கூல்மே பட்தா ஹை—ராமனும் பள்ளிக்கூடத்தில் படிக்கிறான்.

ராம் இண்டர் மீடி[1]யட் பள்தா ஹை—ராமன் இண்டர் மீடியட் படிக்கிறான்.

ஸீதா ஸ்கூல் பைனல் பள்தீ ஹை—ஸீதை ஸ்கூல் பைனல் படிக்கிறாள்.

ஸீதா ஸ்கூல் மே கா[1]னா ஸீக்தீ ஹை—ஸீதை பள்ளிக்கூடத்தில் பாட்டு கற்றுக்கொள்கிறாள்.

ராம் க[1]ர் மே கா[1]னா ஸீக்தா ஹை—ராமன் வீட்டில் பாட்டு கற்றுக் கொள்கிறான்.

---

## பாடம் மூன்று—ஸப[1]க் தீன்

யே ராம் ஹை, வோ ரகு[1] ஹை—இவன் ராமன் அவன் ரகு.

ராம் ஔர் ரகு[1] பா[1]யி பா[1]யி ஹைங்—ராமனும் ரகுவும் அண்ணன் தம்பிகள்.

யே தோ[1]னோங் யஹாங் ரஹ்தே ஹைங்—இவ்விருவரும் இங்கே வசிக்கிறார்கள்.

வே ரோஜ்z ஸவேரே ஜாக்[1]தே ஹைங்—அவர்கள் தினந்தோறும் காலையில் விழித்துக்கொள்ளுகிறார்கள்.

ராத்கோ ஜல்தீ[1]ஸோ தே ஹைங்—இரவில் சீக்கிரம் தூங்குகிறார்கள்.

ஹமாரே பா[1]ப் ப[1]ம்பா[1]ய்மே காம் கர்தே ஹைங்—எங்கள் தகப்பனார் பம்பாயில் வேலை செய்கிறார்.

உன்கா நாம் அஹமத்[1] ஹை—அவர் பெயர் அஹமத்.

ஸ்கூல் மே பஹுத் லள்கே பள்தே ஹைங்—பள்ளிக்கூடத்தில் அனேக பிள்ளைகள் படிக்கிறார்கள்.

ப[1]ஹுத் லள்கியாங் பீ[1] பள்தீ ஹைங்—அநேக பெண்களும் படிக்கிறார்கள்.

ஸ்கூல் மே கித்னி லள்கியாங் பள்தீ ஹைங்?—பள்ளிக் கூடத்தில் எத்தனைப் பெண்கள் படிக்கிறார்கள்.

வஹாங் தோ[1] ஸௌ லள்கியாங் பள்தீ ஹைங்—அங்கு இருநூறு பெண்கள் படிக்கிறார்கள்.

குச் லள்கியாங் க[1]ர் மே ஹி பள்தீ ஹைங்—சில பெண்கள் வீட்டிலேயே படிக்கிறார்கள்.

---

## பாடம் நான்கு—ஸப[1]க் சார்

யே கா[1]ய் ஹை—இது பசு.

மேரே க[1]ர் மே தோ[1] கா[1]யேங் ஹைங்—என் வீட்டில் இரண்டு பசுக்கள் இருக்கின்றன.

ஏக் கா[1]ய் ஸபேf த்[1] ஹை—ஒரு பசு வெள்ளை.

தூ[1]ஸ்ரீ காலி ஹை—மற்றொன்று கருப்பு.

கா[1]ய்கே சார் பைர் ஹைங்—பசுவுக்கு நான்கு கால்கள் உண்டு.

ஸப்[1] ஜான் வரோங் கே சார் பைர் ஹைங்—எல்லா மிருகங்களுக்கும் நான்கு கால்கள் உண்டு.

ஆத்[1]மீ கே தோ[1]பைர் ஹைங் — மனிதனுக்கு இரண்டு கால்கள் உண்டு.

கா$^1$ய் கீ பூஞ்ச் லம்பீ$^1$ ஹை—பசுவின் வால் நீளமா யிருக்கிறது.

கா$^1$ய் கே ஸிர் பர் தோ$^1$ ஸீங்க்$^1$ ஹைங்—பசுவின் தலைமேல் இரண்டு கொம்புகள் இருக்கின்றன.

ஆத்$^1$மீ கே ஸிர் பர் பா$^1$ல் ஹை—மனிதனின் தலையில் (மேல்) மயிர் இருக்கிறது.

கா$^1$ய் கே ஸிர் பர் பா$^1$ல் நஹீங் ஹை—பசுவின் தலைமேல் மயிர் இல்லை.

கா$^1$ய் கீ பூஞ்ச் மே பா$^1$ல் ஹை—பசுவின் வாலில் மயிர் இருக்கிறது.

கா$^1$ய் கா$^1$ஸ் பூஸ் காதீ ஹை—பசு புல்பூண்டு சாப்பிடுகிறது.

வோ பானீ பீதீ ஹை— அது ஜலம் குடிக்கிறது.

வோ ஹம்கோ தூ$^1$த்$^1$ தே$^1$தீ ஹை—அது நமக்கு பால் தருகிறது.

கா$^1$ய் கா தூ$^1$த்$^1$ ப$^1$ஹுத் அச்சா ஹை—பசு வின் பால் மிகவும் நல்லது.

ப$^1$ச்சே ரோஜ்z கா$^1$ய் கா தூ$^1$த்$^1$ பீதே ஹைங்—குழந்தைகள் தினந்தோறும் பசும்பால் குடிக்கின்றன.

கா$^1$ய் பை$^1$ல் கீ மா ஹை—பசு எருது அல்லது காளையினுடைய தாய்.

---

## பாடம் ஐந்து—ஸப$^1$க்' பாஞ்ச்

வோ டா$^1$க் வாலா ஹை—அவன் தபால் காரன்.

வோ சிட்டி லாதா ஹை—அவன் கடிதம் கொண்டு வருகிறான்.

வோ ரோஜ்z தஸ்$^1$ ப$^1$ஜே சிட்டி லாதா ஹை—அவன் தினந்தோறும் பத்து மணிக்கு கடிதம் கொண்டு வருகிறான்.

பா$^1$ரா ப$^1$ஜே ஏக்து$^1$ஸ் ரா டா$^1$க் வாலா ஆதா ஹை—பன்னிரண்டு மணிக்கு மற்றொரு தபால் காரன் வருகிறான்.

வோ ரிஜிஸ்டர் மணியார்ட$^1$ர் வகை$^1$ரா லாதா ஹை—அவன் ரிஜிஸ்டர் மணியார்டர் முதலியன கொண்டு வருகிறான்.

யே டாக்$^1$ வாலா மாமூலி டா$^1$க் லாதா ஹை—இந்த தபால் காரன் சாதாரண தபால் கொண்டு வருகிறான்.

வோ டா$^1$க் வாலா ஐத்வார்கோ நஹீங் ஆதா ஹை—அந்த தபால்காரன் ஞாயிற்றுக்கிழமை வருகிறதில்லை.

யே டா$^1$க் வாலா ரோஜ்z ஆதா ஹை—இந்த தபால்காரன் தினந்தோறும் வருகிறான்.

டா$^1$க் கா ன கஹாங் ஹை?—தபால் ஆபீஸ் எங்கே இருக்கிறது?

ப$^1$டா$^1$ டா$^1$க் கா ன யஹாங் பாஸ் ஹை—பெரிய தபால் ஆபீசு இங்கே சமீபத்தில் இருக்கிறது.

சோடே சோடே டா$^1$க் கானே ஜகா$^1$ ஜகா$^1$ பர் ப$^1$ஹுத் ஹைங்—சிறிய தபால் ஆபீசுகள் ஆங்காங்கு அநேகம் இருக்கின்றன.

க்யா டா$^1$க் கானேமே டிக்கட் மில்தா ஹை?—தபால் ஆபீஸில் டிக்கட் கிடைக்குமா?

நஹீங், டிக்கெட் ஸ்டேஷன்மே மில்தா ஹை—இல்லை, டிக்கட்டு ஸ்டேஷனில் கிடைக்கிறது.

வோ டிக்கட் நஹீங், கார்ட்[1] லிபா:பே பர் லகா[1]னே கா டிக்கட்—அந்த டிக்கட் டல்ல, கார்டு கவரில் ஒட்டும் ஸ்டாம்பு.

அச்சா, ஸ்டாம்ப்கா நாம் டிக்கட் ஹை?—நல்லது ஸ்டாம்பின் பெயர் டிக்கட்டா?

ஹாங் ஹாங், ஸ்டாம்ப்கா நாம் டிக்கட்ஹை—ஆமாம், ஸ்டாம்பின் பெயர் டிக்கட்.

---

## பாடம் ஆறு—ஸப[1]க் சே

மைங் ராம் ஹூங்—நான் ராமன்.

மைங் கோ[1]பால்கா லட்கா ஹூங்—நான் கோபாலனுடைய மகன்.

மைங் ஸ்கூல்மே பட்தா ஹூங்—நான் பள்ளிக் கூடத்தில் படிக்கிறேன்.

மைங் ஷார்ட் ஹாண்ட்[1] டயிப் ரயிடிங்பீ[1] ஸீக்தா ஹூங்—நான் ஷார்ட் ஹாண்டு டயிப் ரயிடிங்கும் கற்றுக்கொள்கிறேன்.

மைங் ஹாஸ்டல் மே ரஹ்தா ஹூங்—நான் ஹாஸ்டலில் வசிக்கிறேன்,

தும் கோன் ஹோ?—நீ யார்?

தும் க்யா கர்தே ஹோ?—நீ என்ன செய்கிறாய்?

தும் ராம் நஹீங் ஹோ?—நீ ராமனல்லவா?

தும் ஜூட் போ[1]ல்தே ஹோ—நீ பொய்பேசுகிறாய்.

தும் யஹாங் க்யோங் ஆதே ஹோ ?—நீ இங்கே ஏன் வருகிறாய் ?

தும் கூப்$^1$ கேல்தே ஹோ—நீ நன்றாக விளையாடுகிறாய்.

மைங் ஸீதா ஹூங்—நான் ஸீதை.

மைங் ஹிந்து$^1$ஸ்தானி ஸிகாதீ ஹூங்—நான் ஹிந்துஸ்தானி கற்பிக்கிறேன்.

மைங் ரோஜ்z ஷாம்கோ டென்னிஸ் கேல்தீ ஹூங்—நான் தினந்தோறும் சாயந்திரத்தில் டென்னிஸ் விளையாடுகிறேன்.

அப்$^1$மைங் க$^1$ர் ஜாதீ ஹூங்—இப்பொழுது நான் வீட்டுக்குப் போகிறேன்.

லலிதா, தும் கஹாங் ஜாதீ ஹோ ?—லலிதா, நீ எங்கே போகிறாய் ?

தும் ஹிந்து$^1$ஸ்தானி கஹாங் ஸீக்தி ஹோ ?—நீ ஹிந்துஸ்தானி எங்கே கற்றுக்கொள்கிறாய் ?

தும் அப்$^1$ஹம்கோ க்யாதே$^1$தீ ஹோ ?—இப்பொழுது நீ எங்களுக்கு என்ன கொடுக்கிறாய் ?

தும் தே$^1$ஷ்கீ ஸேவா கர்தீ ஹோ—நீ தேச ஊழியம் செய்கிறாய்.

ஆப் மேரே பிதாஜீ ஹைங்—தாங்கள் (அல்லது நீங்கள்) என் தகப்பனார்.

ஆப் முஜே பால்தே ஹைங்—தாங்கள் என்னை வளர்க்கிறீர்கள்.

ஆப் முஜே கானா ஔர் கபளா தே[1]தே ஹைங்—தாங்கள் எனக்கு சாப்பாடும் துணியும் கொடுக்கிறீர்கள்.

ஆப் மேரீ ப[1]ட[1] மத[1]த்[1] கர்தே ஹைங்—தாங்கள் எனக்கு பெரும் உபகாரம் செய்கிறீர்கள்.

ஆப் மேரீ மா ஹைங்—தாங்கள் என் தாயார்.

ஆப் முஜே ப[1]ஹுத்ப்யார் கர்தீ ஹைங்—தாங்கள் என்னை மிகவும் நேசிக் (அன்பு பாராட்டு) கிறீர்கள்.

ஆப் முஜே அச்சீ ஆத[1]தேங் ஸிகாதீ ஹைங்—தாங்கள் எனக்கு நற்பழக்கங்கள் கற்பிக்கிறீர்கள்.

ஆப் க[1]ர் கா ஸப்[1] காம் கர்தீ ஹைங்—தாங்கள் வீட்டு வேலைகள் எல்லாம் செய்கிறீர்கள்.

---

## பாடம் ஏழு—ஸப[1]க் ஸாத்

தும் கோன்ஹோ?—நீ யார்?

மைங் ரஹீம்கா பா[1]யீ ஹூங்—நான் ரஹீமுடைய சகோதரன்.

துமாரா நாம் க்யா ஹை?—உன் பெயர் என்ன?

மேரா நாம் ரஜாக் ஹை—என் பெயர் ரஜாக்.

தும் க்யா காம் கர்தே ஹோ?—நீ என்ன வேலை செய்கிறாய்.

மைங் கார்பரேஷன்மே காம் ஸீக்தா ஹூங்—நான் கார்பரேஷனில் வேலை கற்றுக் கொள்ளுகிறேன்.

தும் க்யா காம் ஸீக்தே ஹோ?—நீ என்ன வேலை கற்றுக் கொள்ளுகிறாய்?

மைங் பி[1]ஜ்லீகா காம் ஸீக்தா ஹூங்—நான் மின் சார வேலை கற்றுக் கொள்கிறேன்.

வஹாங் கித்னே லோக்[1] பி[1]ஜ்லீகா காம் ஸீக்தே ஹைங்?—அங்கு எத்தனை பேர்கள் மின்சார வேலை கற்றுக் கொள்கிறார்கள்?

வஹாங் சாலீஸ் லோக்[1] ஸீக்தே ஹைங்—அங்கு நாற்பது பேர்கள் கற்றுக் கொள்கிறார்கள்.

தும் கித்னே ரோஜ்zஸே காம் ஸீக்தே ஹோ?—நீ எத்தனை நாட்களாக வேலை கற்றுக் கொள்கிறாய்?

மைங் தீன் மஹீனேங்ஸே காம் ஸீக்தா ஹூங்—நான் மூன்று மாதங்களாக வேலைக்கற்றுக் கொள்ளுகிறேன்.

தும்ஹாரே பா[1]ப்கா நாம் க்யா ஹை—உன் தகப்பனாரின் பெயர் என்ன?

மேரே பா[1]ப்கா நாம் ஸையத்[1] மஹம்மத்[1] ஹை—என் தகப்பனாரின் பெயர் ஸையத் மகம்மது.

தும்ஹாரே கித்னே பா[1]யீ ஹைங்?—உனக்கு எத்தனை ஸகோதரர்கள்?

மேரே தீன் பா[1]யீ ஹைங்—எனக்கு மூன்று சகோதரர்கள்.

வே க்யா கர்தே ஹைங்?—அவர்கள் என்ன செய்கிறார்கள்?

மேரே ப[1]டே பா[1]யீ புலிஸ் இன்ஸ்பெக்டர் ஹைங்—என் அண்ணன் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

தோ[1] சோடே பா[1]யீ பள்தே ஹைங்—இரண்டு தம்பிகள் படிக்கிறார்கள்.

க்யா தும்ஹாரீ ஷாதீ[1] ஹோ க'யீ ?—உனக்கு கலியாணம் ஆய்விட்டதா ?

நஹீங், மேரீ ஷாதீ[1] நஹீங் ஹுயீ—இல்லை ஐயா எனக்கு கலியாணம் ஆகவில்லை.

க்யா தும்ஹாரே ப[1]டே[1] பா[1]யீகீ ஷாதீ[1] ஹோ க[1]யீ ?—உன் அண்ணனுக்குக் கலியாணம் ஆய்விட்டதா ?

ஜீ ஹாங் உன்கீ ஷாதீ[1] ஹோ க[1]யீ—ஆம் ஐய்யா; அவருக்குக் கலியாணம் ஆய்விட்டது.

க்யா உன்கே பா[1]ல் ப[1]ச்சே ஹைங் ?—அவருக்குக் குழந்தைக் குட்டிகள் உண்டா ?

ஜீ ஹாங், உன்கே தோ[1] லட்கே ஔர் ஏக் லட்கீ ஹைங்—ஆம் ஐய்யா, அவருக்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் உண்டு.

---

## பாடம் எட்டு—ஸப[1]க் ஆட்

ஆவோ பா[1]யீ ஆவோ—வாப்பா, வா.

இத[1]ர் பை[1]ட்டோ—இங்கே உட்காரு.

யே கிதாப்[1] பட[1]ோ—இந்த புஸ்தகம் படி.

இஸ்கோ டா[1]க்டர்கே பாஸ் லே ஜாவோ—இவனை வைத்தியனிடம் கூட்டிக் கொண்டு போ.

தோ[1] ஆம் கரீதோ[1] — இரண்டு மாம்பழங்கள் வாங்கு.

வக்த் பர் காம் கரோ—நேரத்தில் வேலை செய்.

ரோஜ்z ஷாம் கோ கேலோ — தினந்தோரும் மாலையில் விளையாடு.

தைர்னா ஸீகோ—நீந்தக் கற்றுக் கொள்.

லள்கோங்கே ஸாத் சலோ — பிள்ளைகளுடன் கூடப்போ.

ஜோzர்ஸே மத் போ[1]லோ—பலமாய் பேசாதே.

ஜூட் மத் போ[1]லோ—பொய் பேசாதே.

இத[1]ர் மத் பை[1]ட்டோ—இங்கு உட்காராதே.

தின் மே மத் ஸோவோ—பகலில் தூங்காதே.

ஆப் யஹாங் ஆயியே—தாங்கள் இங்கே வாருங்கள்.

கா[1] டீ[1] வாலே கோ பு[1]லாயியே—வண்டிக் காரனைக் கூப்பிடுங்கள்.

யே த[1]வா பீஜியே—இந்த மருந்து குடியுங்கள்.

ஆப் முஜே ஏக் ரூப்யா தீ[1]ஜியே—தங்கள் எனக்கு ஒரு ரூபாய் கொடுங்கள்.

ஹம் கோ ஹிந்து[1] ஸ்தானி ஸிகாயியே—எங்களுக்கு ஹிந்துஸ்தானி கற்பியுங்கள்.

யே கிதாப்[1] அச்சீ ஹை, லீஜியே—இந்த புஸ்தகம் நல்லது, வாங்குங்கள்.

ஹம்கோ ஏக் அச்சீ கஹானீ ஸுனாயியே—எங்களுக்கு ஒரு நல்ல கதை சொல்லுங்கள்.

ஆப் கீ க[1]டி[1] தி[1]காயியே—உங்கள் கடியாரத்தைக் காட்டுங்கள்.

ஹம்கோ ஸவேரே ஜகா[1]யே—எங்களை காலையில் எழுப்புங்கள்.

வோ கிதாப்[1] மேரே பா[1]யிகோ தீ[1]ஜியே—அந்த புஸ்தகத்தை என் சகோதரனுக்குக் கொடுங்கள்.

அப்[1] ஆப் க[1]ர் ஜாயியே—இப்பொழுது நீங்கள் வீட்டுக்குப் போங்கள்.

---

## பாடம் ஒன்பது—ஸப[1]க் நௌ

ராம் யஹாங் ஆய கா[1]—ராமன் இங்கு வருவான்.

வோ யஹாங் கல் ஆவே கா[1]—அவன் இங்கு நாளைக்கு வருவான்.

தோ[1] தீன் ரோஜ்z டஹரேகா[1]—இரண்டு மூன்று நாள் தங்குவான்.

உஸ்கே பா[1]த்[1] தி[1]ல்லி ஜாய கா[1]—அதற்குப் பிறகு டில்லிக்குப் போவான்.

க்யா வோ க்ரிகெட் கேலேகா[1]?—அவன் கிரிக்கெட் விளையாடுவானா?

மைங் நஹீங் ஜாந்தா—நான் அறியேன்.

க்யா உஸ்கே ஸாத் உஸ்கே பா[1]யீ பீ[1] ஆயங்கே[1]?—அவனுடன், அவனுடைய சகோதரர்களும் வருவார்களா?

ஹாங்; உஸ்கே தோ[1] பா[1]யீ உஸ்கே ஸாத் ஆயங்கே[1]—ஆம்; அவனுடைய இரண்டு சகோதரர்கள் அவனுடன் வருவார்கள்.

வே யஹாங் க்யா கரேங்கே[1]?—அவர்கள் இங்கு என்ன செய்வார்கள்?

அப்னே மாபா$^{1}$ப் கோதே$^{1}$ கேங்கே$^{1}$—தங்களுடைய தாய் தந்தைகளைப் பார்ப்பார்கள்.

உஸ்கே பா$^{1}$த்$^{1}$ பா$^{1}$யீ கேஸாத் தி$^{1}$ல்லீ ஜாயங்கே—அதற்குப் பிறகு சகோதரனுடன் டில்லிக்குப் போவார்கள்.

க்யா ஆப் பீ$^{1}$ உன்கே ஸாத் ஜாயங் கே$^{1}$—தாங்களும் அவர்களுடன் போவீர்களா?

ஜீ ஹாங், ஹம்*பீ$^{1}$ ஜாயங்கே$^{1}$—ஆமாம்; நானும் போவேன்.

ஆப் தி$^{1}$ல்லீமே கித்னே ரோஜ்$^{z}$ டஹரேங்கே$^{1}$—தாங்கள் டில்லியில் எத்தனை நாள் தங்குவீர்கள்.

ஹம் பீ$^{1}$ஸ் ரோஜ்$^{z}$ டஹரேங்கே$^{1}$—நான் இருபது நாள் தங்குவேன்.

ஆப் வஹாங்ஸே கஹாங் ஜாவேங் கே$^{1}$—அங்கிருந்து தாங்கள் எங்கு போவீர்கள்?

ஹம் வஹாங்ஸே பிரயாக்$^{1}$ ஜாயேங்கே$^{1}$—அங்கிருந்து நான் பிரயாகை போவேன்.

வஹாங் ஆப் ஜ்$^{z}$ரூர் த்ரிவேணீமே நஹாயங்கே$^{1}$—அங்கு தாங்கள் கட்டாயம் திரிவேணியில் குளிப்பீர்கள்.

க்யா ஆப் கல்கத்தா சலேங்கே$^{1}$?—நீங்கள் கல்கத்தா போவீர்களா?

---

* ஹம் என்பது, நாம் அல்லது நாங்கள் என்ற அர்த்தங் கொண்ட பன்மையாயினும் பழக்கத்தில் 'நான்' என்ற அர்த்தத்தில் வழங்கப்படுகிறது.

நஹீங், ஹம் இலாகாபா'த்'ஸே ஸீதே' மத'ராஸ் சலே ஆயங்கே'—இல்லை, நாங்கள் அலகாபாதிலிருந்து நேரே மதராஸ் வந்துவிடுவோம்.

தி'ல்லீ மே ஆப் மேரா ஏக் காம் கரேங்கே'?—டில்லியில் தாங்கள் எனக்கு ஒரு வேலை செய்வீர்களா?

ஹாங் ஹாங், ஜzரூர் கரேங்கே' போ'லோ க்யா காம்ஹை—ஆஹா, கட்டாயம் செய்வேன்; என்ன வேலை சொல்.

நஹீ, மைங் ஆப்கோ லிகூங்கா'—இல்லை, நான் உங்களுக்கு எழுதுவேன்.

மைங் அப்' கஞ்சீபுரம் ஜாவூங்கா'—நான் இப்பொழுது காஞ்சீபுரம் போவேன்.

வஹாங் மேரே சாசாஜீ ஸே மிலூங்கா'—அங்கு என் சிறிய (அல்லது பெரிய) தகப்பனைக் காண்பேன்.

உன்ஸே பூச்ரூங்கா' ஔர் பீர் ஆப்கோ லிகூங்கா'—அவரைக்கேட்டு பிறகு உங்களுக்கு எழுதுவேன்.

மைங் ஆப்கோ பசாஸ் ருப்யே பே'ஜூங்கா'—நான் உங்களுக்கு ஐம்பது ருபாய் அனுப்புவேன்.

க்யா ஆப் ஏக் ரேடி'யோ கரீ தே'ங் கே'?—தாங்கள் ஒரு ரேடியோ வாங்குவீர்களா?

ஹாங் கரீ தூ'ங்கா'—ஆஹா வாங்குவேன்.

ஆவோ பா'யீ மாத'வ், அப்' தும் க்யா கரோகே'?—வா அப்பா, மாதவா, இப்பொழுது நீ என்ன செய்வாய்?

மைங் ஸப$^1$க் லிகூங் கா$^1$—நான் பாடம் எழுதுவேன்.

க்யா தும் ஸினிமா சலோ கே$^1$?—நீ ஸினிமா போவாயா?

நஹீங், மைங் நஹீங் சலூங்கா$^1$—இல்லை, நான் போக மாட்டேன்.

க்யோங் நஹீங் சலோ கே$^1$?—ஏன் போகமாட்டாய்?

மைங் ஜாவூங்கா$^1$ தும்மேரே ஸாத் ஆவோ—நான் போவேன்; நீ என்னுடன் கூட வா.

அச்சா தோ மைங் சலூங்கா$^1$—நல்லது, அப்படியானல் நான் வருகிறேன்.

---

## பாடம் பத்து—ஸப$^1$க் த$^1$ஸ்

யே ஹமாரா ஜிஸ்ம் ஹை—இது நம் சரீரம்.

இஸ்கே தீன் ஹிஸ்ஸே ஹைங்—இதற்கு மூன்று பாகங்கள் உண்டு.

ஸிர், த$^1$ட்$^1$ ஔர் ஹாத் பைர்—தலை, உடல், கைகால்.

ஸிர்பர் பா$^1$ல் ஹை—தலையில் மயிர் இருக்கிறது.

தோ$^1$ ஆங்கேங் ஹை—இரண்டு கண்கள் இருக்கின்றன.

ஹம் ஆங்கோ ஸே தே$^1$க்தே ஹைங்—நாம் கண்களால் பார்க்கிறோம்.

ஹமாரே தோ[1] கான் ஹைங்—நமக்கு இரண்டு காதுகள் இருக்கின்றன.

சிடி[1]யோங்கே ஔர் ஸாம்ப்கே கான் நஹீங் ஹைங்—பறவைகளுக்கும் பாம்புக்கும் காது இல்லை.

ஹம் கான் ஸேஸுந்தே ஹைங்—நாம் காதால் கேட்கிறோம்.

ஹம் நாக்ஸே ஸூங்க்[1]தே ஹைங்—நாம் மூக்கால் முகர்கிறோம்.

ஹம் நாக்ஸே ஸான்ஸ் பீ[1] லேதே ஹைங்—நாம் மூக்கால் மூச்சும் விடுகிறோம்.

குச் லோக்[1] முஹ்ஸே ஸான்ஸ் லேதே ஹைங்—சில ஜனங்கள் வாயால் மூச்சு விடுகிறார்கள்.

ஹாதீ கீ நாக் ப[1] ஹுத் லம்பீ[1] ஹை—யானையின் மூக்கு மிகவும் நீண்டது.

உஸ்கா நாம்ஸூண்ட்[1] ஹை — அதன் பெயர் துதிக்கை.

ஹமாரே முஹ்கே அந்த[1]ர் த[1]ாந்த் ஔர் ஜீப்[1] ஹைங் — நம் வாய்க்குள் பற்களும் நாக்கும் இருக்கின்றன.

ஜீப்[1] ஸே ஹம் ஸ்வாத்[1] லேதே ஹைங்—நாக்கால் நாம் ருசி பார்க்கிறோம்.

ஜீப்ஸே ஹம் போ[1]ல்தே பீ[1] ஹைங்—நாக்கால் நாம் பேசவும் செய்கிறோம்.

தா[1]ந்த்ஸே ஹம் சபா[1]தே ஹைங—பல்லால் நாம் மென்றுகிறோம்.

ஹமேஷா கானு சபா[1] கர் காவோ—எப்பொழுதும் ஆகாரத்தை (உணவை) மென்று சாப்பிடு.

ஹம் தா[1]ந்த்ஸே காட்தே ஹைங்—நாம் பல்லால் கடிக்கிறோம்.

ஹமாரே ஸிர்மே தோ[1]கான், நாக், தோ[1] ஆங்கேங் ஔர் ஏக்முஹ் ஹை—நாம் தலையில் இரண்டு காதுகள், மூக்கு, இரண்டு கண்கள், ஒரு வாய் இருக்கின்றன.

ஸிர்கே ஔர் ஹிஸ்ஸே பீ[1] ஹைங்—தலையின் மற்ற பாகங்களும் உண்டு.

கோபடீ[1], மாதா, கா[1]ல், ஔர் டுட்[1]டீ[1]—மண்டை, நெற்றி, மோவாய்கட்டை.

த[1] ட்[1] கே தோ[1] ஹிஸ்ஸே ஹைங்—உடலில் இரண்டு பாகங்களுண்டு.

சாதீ ஔர் பேட்—மார்பும் வயிறும்.

சாதீ ஔர் பேட்கே பீசே பீட் ஹை—மார்புக்கும் வயிற்றுக்கும் பின்னால் முதுகு இருக்கிறது.

சாதீகே பா[1]ஜூமே ஹாத் ஹை—மார்புக்கு பக்கத்தில் கை இருக்கிறது.

பேட் கே நீசே பைர் ஹைங்—வயிற்றுக்கு கீழ் கால்கள் இருக்கின்றன.

ஹம் ஹாதோன்ஸே காம் கர்தே ஹைங்—நாம் கைகளால் வேலை செய்கிறோம்.

பைரோன்ஸே சல்தே ஹைங்—கால்களால் நடக்கிறோம்.

ஹர் ஹாத் ஔர் பைர்மே பாஞ்ச் பாஞ்ச் உங்க[1] லியாங் ஹைங்—ஒவ்வொரு கையிலும் காலிலும் ஐந்து விரல்கள் இருக்கின்றன.

குஹனீ ஔர் கலயீ ஹாத்கே ஹிஸ்ஸே ஹைங்—முழங்கையும் மணிக்கட்டும் கையின் பாகங்கள்.

ஹாத்கா ஊபரீ ஹிஸ்ஸா கந்தா[1]ஹை—கையின் மேல் பாகம் புஜம்.

ஜாங்க்[1] கு[1]ட்னா, ஏண்டி[1] ஔர் பர்வ் பைர் கே ஹிஸ்ஸே ஹைங்—துடை, முழங்கால், குதிக்கால், பாதம் இவைகள் காலின் பாகங்கள்.

ஹம் ரோஜ்z தோ[1] தோ[1]கர் ஜிஸ்ம்கோ ஸாப்f ரக்தே ஹைங்—நாம் தினந்தோறும் தேய்த்துத் தேய்த்து உடலை சுத்தமாக வைக்கிறோம்.

மைலே ஜிஸ்ம்மே போடே[1] புன்ஸி ஜல்தி[1] ஆதி ஹைங்—அழுக்கு உடலில் புண் சீக்கிரம் வந்து விடும்.

இஸ்லியே ஜிஸ்ம் கோ ஸாப்f ரகோ—ஆகையால் உடலை சுத்தமாக வை.

---

## பாடம் பதினொன்று—ஸப[1]க் க்[1]யாரா

ஆஜ் *சுட்டி ஹை, சலோ ஸைர் கர்னே ஜாயங் கே[1]—இன்று விடுமுறை; ஊரைச் சுற்றி பார்க்கப் போவோம் வா.

இஸ்ஷஹர் கா நாம் க்யா ஹை?—இந்த நகரின் பெயரென்ன?

இஸ்கா நாம் மது[1]ரா ஹை—இதன் பெயர் மதுரை.

வோ தே¹கோ ப¹ஹுத் ப¹டா¹ தீ¹க்தா ஹை—அதோபார்; மிகவும் பெரிதாகக் காணப்படுகிறது.

வோ மந்தி¹ர் ஹை—அது கோவில்.

த¹க்ஷின் பா¹ரத்மே வோ ஸப்¹ஸே ப¹டா¹ ஔர் கூப்¹ஸூரத் மந்தி¹ர் ஹை—தென் இந்தியாவில் அது எல்லாவற்றைக் காட்டிலும் பெரிதும் அழகானதுமான கோவில்.

வோ ஷஹர் கே பீ¹ச் மே ஹை—அது நகரத்தின் மத்தியில் இருக்கிறது.

மந்தி¹ர்கே சாரோங் ஓர் சார் ஸட¹கேங் ஹைங்—கோயிலின் நாலு பக்கங்களிலும் நான்கு சாலைகள் இருக்கின்றன.

இன் சாரோங் ஸட¹கோங்கே சாரோங் ஓர் ஔர் சார் ஸட¹கேங் ஹைங்—இந்த நான்கு சாலைகளுக்கு நான்கு பக்கத்திலும் இன்னும் நான்கு சாலைகள் இருக்கின்றன.

உன்கே சாரோங் ஓர் பீ¹ ஔர் சார் ஸட¹கேங் ஹை—அவைகளுக்கு நாலு பக்கத்திலும் கூட மற்றும் நான்கு சாலைகள் இருக்கின்றன.

பா¹ஹர் கீ ஸட¹கோங்கே நாம் பூர்வி பா¹ஹரீ ஸட¹க்¹ தக்ஷிணீ பா¹ஹரீ ஸட¹க், பச்சிமீ பா¹ஹரீ ஸட¹க், ஔர் உத்தரி பாஹரி ஸடக் ஹைங்—வெளியே இருக்கும் சாலைகளுக்கு கிழக்கு வெளி, தெற்கு வெளி, மேற்கு வெளி, வடக்கு வெளி வீதிகள் என்று பெயர்.

பச்சிமீ பா¹ஹரி ஸட¹க்கே பச்சிம் மே ரேல் ஸ்டேஷன் ஹை—மேற்கு வெளி வீதியின் மேற்கில் ரயில்வே ஸ்டேஷன் இருக்கிறது.

இஸீ ஸட$^1$க் பர் ஸ்டேஷன்கே ஸாம்னே மங்கம்மாகீ தர்மசாலா ஹை—இதே சாலையில் ஸ்டேஷனுக்கு எதிரில் மங்கம்மா சத்திரம் இருக்கிறது.

உத்தரீ பா$^1$ஹரீ ஸட$^1$க்கே உத்தர்மே குச் தூர்பர் வைகை நதீ ஹை—வடக்கு வெளி வீதிக்கு வடக்கில் சற்று தூரத்தில் வைகையாறு இருக்கிறது.

இன் ப$^1$டீ$^1$ ஸட$^1$கோங்கே பீ$^1$ச் பீ$^1$ச் மே கயீ சோடீ சோடீ க$^1$லியாங் ஔர் ஸட$^1$கேங் ஹைங்—இந்த பெரிய சாலைகளுக்கு இடை இடையே பல சிறு சந்துக்களும் தெருக்களும் இருக்கின்றன.

பூர்வீ பா$^1$ஹரீ ஸட$^1$க்கே பூரப்$^1$மே கரீப்$^1$ தீன் மைல் பர் ஏக் ப$^1$ஹுத் ப$^1$டா$^1$ தாலாப்$^1$ ஹை—கிழக்கு வெளி வீதியின் கிழக்கில் சுமார் மூன்றுமைல் தூரத்தில் மிகப் பெரிய குளம் ஒன்று இருக்கிறது.

வோ தே$^1$க்னே லாயக் ஹை—அது பார்க்கத் தக்கது.

உஸ்கே சாரோங் ஓர் பக்கீ பத்தர் கீ ஸீடி$^1$யாங் ஹைங்—அதற்கு நான்கு பக்கத்திலும் உறுதியான கல்படிகள் இருக்கின்றன.

தாலாப்$^1$கே பீ$^1$ச்மே ஏக் மண்ட$^1$ப் ஹை—குளத்தின் மத்தியில் ஒரு மண்டபம் இருக்கிறது.

உஸ்மே ஏக் ப$^1$கீ$^1$சா ஹை—அதில் ஒரு தோட்டம் இருக்கிறது.

ஸீடி$^1$யோன்ஸே மண்ட$^1$பதக் நாவ் சல்தீ ஹை—படி கட்டிலிருந்து மண்டபத்துக்கு படகு போகிறது.

தகஷிணீ பா[1]ஹரி ஸட[1]க்கே பாஸ் திருமலை நாயக் மஹல் ஹை—தெற்கு வெளி வீதிக்குப் பக்கத்தில் திருமலை நாயக்கர் மஹால் இருக்கிறது.

யே தே[1]க்னே லாயக் ஹை—இது பார்க்கத் தக்கது.

யஹாங் அதா[1]லதேங் ஹைங்—இங்கு கோர்ட்டுகள் இருக்கின்றன.

க்யா இன் ஸப்[1] ஜக[1]ஹோங்கோ ஹம் பைத்[1]ல் ஹீ சலேங்கே[1] ?— இந்த இடங்களுக்கெல்லாம் நாம் கால் நடையாகவே போவோமா ?

நஹீங், யஹாங் லாரீ சல்தி ஹை—இல்லை இங்கு பஸ் போகிறது.

ஹம் சாஹே கோ[1]டா[1] கா[1] டீ[1] கர்லேங்—நாம் வேணுமானல் குதிரை வண்டி வைத்துக் கொள்வோம்.

மது[1]ராகீ ஆப்[1] ஹவா கைஸீ ஹை ?—மதுரையின் சீதோஷ்ண ஸ்திதி எப்படி ?

க[1]ரம் ஹீ கஹனு சாஹியே—சூடென்றே சொல்ல வேண்டும்.

ஆஸ்பாஸ் கீ ஜமீன் ப[1]ஹுத் உபஜாவூ ஹை—அக்கம் பக்கத்து நிலம் மிகவும் செழிப்பானது.

தூ[1]த்[1] த[1]ஹீ கூப்[1]மில்தா[1] ஹை—பால் தயிர் நிறையக் கிடைக்கும்.

தர்காரியாங்பீ[1] கூப்[1] மில்தீ ஹைங்—காய் கறிகளும் நிறையக் கிடைக்கின்றன.

மதுரா ப[1]ஹுத் புரானு ஷஹர் ஹை—மதுரை மிகப் பழைய நகரம்.

## பாடம் பன்னிரண்டு—ஸப[1]க் பா[1]ர

ஏக் கிஸான் தா—ஒரு குடியானவன் இருந்தான்.

உஸ்கே சார் லள்கே தே—அவனுக்கு நான்கு பிள்ளைகள்.

வே ஹமேஷா லள்தே தே—அவர்கள் எப்பொழுதும் சண்டையிட்டு வந்தார்கள்.

ஏக் ரோஜ்z பா[1]ப்னே பேடோங்கே அப்னே பாஸ் பு[1]லாயா—ஒருநாள் தகப்பனார் பிள்ளைகளை தன் அருகே கூப்பிட்டார்.

ப[1]டே[1] பே[1]டே ஸே கஹா பே[1]டா, வோ க[1]டீ லாவோ—பெரிய மகனிடம் சொன்னார்: மகனே, அந்த சுமையைக் கொண்டு வா.

வோ லக்ளியோங்கா க[1]ட்டா தா—அது கட்டைகளின் சுமை (ஆக இருந்தது).

லள்கா உஸ்கோ லாயா—பையன் அதைக் கொண்டு வந்தான்.

பா[1]ப் னே கஹா "இஸ் க[1]ட்டேகோ தோடோ[1]"—தகப்பனார் சொன்னார்: "இந்தச் சுமையை ஒடி."

லள்கேனே கோஷிஷ் கீ—பையன் முயற்சி செய்தான்.

மக[1]ர் தோட்[1]நஹீங் ஸகா—ஆனால் ஒடிக்க முடியவில்லை.

ஏக் ஏக் கர்கே ஸப்[1] லள்கோனே கோஷிஷ் கீ—ஒவ்வொருவராக எல்லாப்பிள்ளைகளும் முயற்சி செய்தார்கள்.

மக1ர் கோயி நஹீங் தோட்1 ஸகா—ஆனால் ஒரு வரும் ஒடிக்க முடிய வில்லை.

பா1ப்னே க1ஹா ரஸ்ஸி தோடோ1—தகப்பனர் சொன்னர்: கயிறை அற.

ஏக் லட்கேனே ரஸ்ஸீ தோடீ—ஒரு பையன் கயிறை அறுத்தான்.

பா1ப்னே கஹா "தும் சாரோங் ஏக் ஏக் லக்டீ உடாகர் தோடோ1"—தகப்பனர் சொன்னர்: "நீங்கள் நால்வரும் ஒவ்வொரு கட்டையை எடுத்து ஒடியுங்கள்."

ஹர் ஏக்னே ஏக் ஏக் லக்டீ உடாகர் தோட்1 டா1லீ—ஒவ்வொருவனும் ஒவ்வொரு கட்டையாக எடுத்து ஒடித்து விட்டார்கள்.

பா1ப் னே பூச்சா "தும்பஹலே தோட்1 நஹீ ஸகே—தகப்பனர் கேட்டார்: "நீங்கள் முதலில் ஒடிக்க முடியவில்லை."

அப்1 கைஸே தோட்1 ஸகே?—இப்பொழுது எப்படி ஒடிக்க முடிந்தது?

பஹலே லக்டி யோ மே மேல் தா—முதலில் கட்டைகளில் ஒற்றுமை இருந்தது.

உன்கே ஊபர் ரஸ்ஸீ தீ—அவைகளின் மேல் கயிறு இருந்தது.

தும் லோகோ1மே அப்1 மேல் நஹீ ஹை—உங்களுக்குள் இப்பொழுது ஒற்றுமை இல்லை.

துமாரே ஊபர் முஹப்1ப1த் கீ ரஸ்ஸீ நஹீ ஹை—உங்கள் மீது அன்பு என்ற கயிறு இல்லை.

இஸ்லியே கோயீ பீ1 தும்கோ ஆஸானீ ஸே தோட்1 ஸக்தா ஹை—ஆகையால் எவனும் உங்களை எளிதில் ஒடிக்கலாம்,

அக1ர் தும் பீ1 மேல் ஸே ரஹோ தோ தும் கோ கோயி தோட்1 நஹீ ஸக்தா—"நீங்களும் ஒற்றுமையாயிருந்தால் உங்களை ஒருவரும் ஒடிக்க முடியாது"

தப்1ஸே லள்கோனே லள்ஞ சோட்1 தி1யா—அதுமுதல் பிள்ளைகள் சண்டை செய்வதை நிறுத்தினார்கள்.

வே மேல் ஸே ரஹ்னே லகே1—அவர்கள் ஒற்றுமையுடன் இருக்கலானார்கள்.

கிஸான் ப1டா1 குஷ் ஹுவா—குடியானவன் மிக சந்தோஷ மடைந்தான்.

ஆபஸ்மே லள்ஞ ப1ஹுத் பு1ரா ஹை—ஒருவருக்கொருவர் சண்டையிடுவது கெட்டது.

---

## பாடம் பதின்மூன்று—ஸப1க் தேரா

கல் ராத் கோ தும்மாரே க1ர்மே கோயி மோடர்மே ஆயே தே—நேற்றிரவு உன் வீட்டுக்கு யாரோ ஒருவர் மோட்டாரில் வந்திருந்தார்.

வோ கோன் தே?—அவர் யார் (ஆக இருந்தார்)?

வோ டா1க்டர் ஸாப்1 தே—அவர் டாக்டர் (ஆக இருந்தார்).

டா1க்டர் ஸாஹப்1 க்யோங் ஆயே தே? க்யா கோயீ பீ1மார் ஹை?—டாக்டர் ஏன் வந்திருந்தார்? யாராகிலும் நோயா யிருக்கிறார்களா?

ஹாங் மேரே லள்கேகே பைர்மே போடா[1] ஹோக[1]யா—ஆம்; என் மகனின் காலில் கட்டி.

க்யா தும்ஹாரா லள்கா சல் பிர் நஹீ ஸக்தா?—உன் பிள்ளை நடமாட முடியாதா?

நஹீ பா[1]யீ[1], உஸ்கா பாவ் ப[1]ஹுத் பூல் க[1]யா ஹை—இல்லை அப்பா, அவன் கால் மிகவும் வீங்கி இருக்கிறது.

டா[1]க்டர் னே க்யா கஹா?—டாக்டர் என்ன சொன்னார்?

உன்ஹோனே ஆபரேஷன் கியா—அவர் ஆபரேஷன் செய்தார்.

தும்ஹாரா லள்கா கிதனே தி[1]னோமே அச்சா ஹோகா[1]?—உன் மகன் எத்தனை நாளில் சரியாவான்?

அப்[1] வோ சார் பாஞ்ச் ரோஜ்z மே அச்சா ஹோ ஜாயகா[1]—இப்பொழுது நாலைந்து நாட்களில் சரியாய் விடுவான்.

கல் ராத்கோ கூப்[1] ஸோயா—நேற்றிரவு நன்றாகத் தூங்கினான்.

மேரீ பீ[1]பீ[1] கோ கானா ப[1]ராப[1]ர் நஹீ பச்தா—என் மனைவிக்கு சாப்பாடு சரிவர ஜீரணமாவதில்லை.

ப[1]ார் ப[1]ார் கை கர் தே[1] தீ ஹை—அடிக்கடி வாந்தி செய்துவிடுகிறாள்.

தஸ்த் பீ[1]பரா ப[1]ர் நஹீங் லக்[1]தீ—வெளிக்கும் சரிவர போவதில்லை.

க்யா தும்ஹாரே டா[1]க்டர் த[1]வா தே[1]ங் கே[1]? — உன் வைத்தியர் மருந்து கொடுப்பாரா?

தே1ங்கே1 க்யோங் நஹீங் ? — கொடுக்காமல் என்ன ?

லேகின் மேரி ஸலாஹ் ஹை தும் தூ1ஸ்ரே வைத்1யகே பாஸ் ஜாவோ—ஆனால் என் யோசனை யாதெனில் நீ வேறொரு வைத்தியரிடம் போ.

யே டா1க்டர் அச்சே ஸர்ஜன் ஹைங்—இந்த டாக்டர் நல்ல ஸர்ஜன்.

லேகின் இன்கீ த1வாயேங் ப1ஹுத் பாfய்தா1 நஹீங் கர்தீங்—ஆனால் இவருடைய மருந்துகள் அதிக நன்மை செய்வதில்லை.

அச்சா, தும்ஹாரே டா1க்டர் கித்னா பீfஸ் லேதே ஹைங்?—உன்னுடைய டாக்டர் என்ன பீஸ் வாங்குகிறார்?

க1ர் ஆனேகே பாஞ்ச் ரூப்யே ஔர் ஆபரேஷன் கே பாஞ்ச் ரூப்யே—வீட்டுக்கு வர ஐந்து ரூபாய்; ஆபரேஷன் செய்ய ஐந்து ரூபாய்.

க்யா வைத்1ஜீ பீ1 ப1ஹுத் மாங் கேங்கே1?—வைத்தியரும் அதிகம் கேட்பாரா?

நஹீ; நஹீ; தோ1 ரூப்யேமே தும்ஹாரே ஸப்1 காம் ஹோஜாயங்கே1—இல்லை; இல்லை; இரண்டு ரூபாயில் உன் வேலையெல்லாம் முடிந்துவிடும்?

க்யா த1வா பீ1 உஸீமே ஆஜாயகீ1?—மருந்தும் அதிலேயே வந்து விடுமா?

ஹாங் ஹாங், டா1க்டர் கா1 பீfஸ் ஔர் த1வா கா தா1ம் தோ1 ரூப்யே ஸே கம் ஹீ ஹோகா1—ஆமாம், டாக்டர் பீசும் மருந்தின் விலையும் இரண்டு ரூபாய்க்கு குறைவாகவே இருக்கும்.

அப்$^1$ மேரே ஸிர்மே த$^1$ர்த்$^1$ ஹை—இப்பொழுது என் தலை வலிக்கிறது.

க்யா கருங்—என்ன செய்யட்டும்.

மேரே பாஸ் அம்ருதாஞ்ஜன் ஹை—என்னிடம் அமிர்தாஞ்சனம் இருக்கிறது.

லகா$^1$வோ—போட்டுக் கொள்.

மேரே பா$^1$யிகே கான்மே த$^1$ர் த்$^1$ ஹை—என் சகோதரனின் காதில் வலி.

க்யா தும்ஹாரே டா$^1$க்டர் இலாஜ் கரேங்கே—உன் டாக்டர் சிகிச்சை செய்வாரா?

கூப்$^1$ கரேங்கே—நன்றாகச் செய்வார்.

---

## பாடம் பதினான்கு—ஸப$^1$க் சௌதா$^1$

கல்கத்தா$^1$ ப$^1$ம்ப$^1$யீ தேஹ்லீ மதராஸ் வகை$^1$ரா ஹிந்துஸ்தான் கேஸப்$^1$ ஸே ப$^1$டே$^1$ ஷஹர் ஹைங்—கல்கத்தா, பம்பாய், டில்லி, சென்னைப் பட்டணம் முதலியன இந்தியாவின் மிகப்பெரிய நகரங்கள்.

மது$^1$ரா, திர்ச்சிநாபல்லி, ராஜமஹேந்திரவர், ஹைதராபா$^1$த்$^1$, நாக்$^1$பூர், லக்னோ, கான்பூர், காசி, பாட்னா, க$^1$யா, லாஹோர் வகை$^1$ரா பீ$^1$ ப$^1$டே$^1$ ப$^1$டே$^1$ ஷஹர் ஹைங்—மதுரை, திருச்சிராப்பள்ளி, ராஜமகேந்திரவரம், ஹைதராபாத், நாக்பூர், லக்னோ, கான்பூர், காசி, பாட்னா, கயா, லாகூர் முதலியவையும் பெரிய பெரிய நகரங்கள்.'

கல்கத்தாமே தோ$^1$ ப$^1$டே ஸ்டேஷன் ஹைங்—கல்கத்தாவில் இரண்டு பெரிய ஸ்டேஷன்கள் இருக்கின்றன.

ஏக் கா நாம் ஹப்[1]டா[1] ஔர் தூ[1]ஸ்ரே கா ஸியால்தா[1] ஹை—ஒன்றின் பெயர் ஹப்டா; மற்றொன்றின் பெயர் ஸியால்தா.

ஹப்[1] டா[1] கோ ஹம் ஹௌரா கஹ்தே ஹைங்—ஹப்டாவை நாம் ஹௌரா என்கிறோம்.

கல்கத்தே ஸே பூரப்[1] கோ ஏக் ரேல் கா[1]டி[1] அஸ்ஸாம் ஔர் டா[1]ர்ஜீலிங் கோ ஜாதீ ஹை—கல்கத்தாவிலிருந்து கிழக்கே ஒரு ரயில் வண்டி அஸ்ஸாமுக்கும் டார்ஜீலிங்குக்கும் போகிறது.

ஏக் கா[1] டி[1]தே[1] ஹலி ஜாதீ ஹை—ஒரு வண்டி டில்லி போகிறது.

கல்கத்தே ஔர் தே[1]ஹலீ கே பீ[1]ச்மே மூக[1]ல்ஸராய் ஏக் ஸ்டேஷன் பள்தா ஹை—கல்கத்தாவுக்கும் டில்லிக்கும் நடுவில் மூகல்சராய் என்று ஒரு ஸ்டேஷன் வருகிறது.

கல்கத்தே ஸேமூக[1]ல் ஸராய் தக்[1] தோ ரேல் லாயின் ஹைங்—கல்கத்தா முதல் மூகல் ஸராய் வரையில் இரண்டு இருப்புப் பாதைகள் இருக்கின்றன.

ஏக் மேன் லாயின் ஹை ஔர் தூ[1]ஸ்ரா கார்ட்[1] லாயின் ஹை—ஒன்று மெயின் லயன், மற்றொன்று கார்ட் லயன்.

ஏக் லாயின்மே க[1]யா ஸ்டேஷன் பள்தா ஹை—ஒரு லயனில் கயா ஸ்டேஷன் வருகிறது.

தூ[1]ஸ்ரேமே பாட்னா பள்தா ஹை—மற்றொன்றில், பாட்னா இருக்கிறது.

மொக[1]ல் ஸராய் ஸே ரேல் கா[1]டி[1] அலஹா பா[1]த்[1] கான்பூர், டுண்ட்[1]லா வகை[1]ரா ஸே ஹோகர்[1]

தே$^1$ஹலி பஹுஞ்சதீ ஹை—மொகல் ஸராயிலிருந்து ரயில் வண்டி அலஹாபாத், கான்பூர், டுண்டலா முதலிய ஸ்டேஷன்கள் மூலமாய் டில்லிபோய் சேருகிறது.

தே$^1$ஹ்லீஸே ஹர்த்$^1$வார், லாஹோர், ஸிம்லா வகை$^1$ரா கோ ரேல் கா$^1$டி$^1$ சல்தீ ஹை—டில்லியிலிருந்து ஹரித்வார், லாகூர், ஸிம்லா முதலிய இடங்களுக்கு ரயில் வண்டி போகிறது.

மொக$^1$ல் ஸராய் ஸே ஏக் லாயன் உத்தர்கோ க$^1$யீ ஹை—மூக$^1$ல் ஸராயிலிருந்து ஒரு லயன் வடக்கே போகிறது.

இஸ் லாயின் மே மூக$^1$ல் ஸராய் கா அக$^1$லா ஸ்டேஷன் காசீ ஹை—இந்த லயனில் முகல் சராயிக்கு அடுத்த ஸ்டேஷன் காசி.

அலஹாபா$^1$த்$^1$ ஸே காசிகோ ஏக் சோடி லாயன் பீ$^1$ ஜாதீ ஹை—அலகாபாதிலிருந்து காசிக்கு ஒரு சிறு லயனும் போகிறது.

கல்கத்தே ஸே ஏக் லாயன் ப$^1$ம்பா$^1$ய் கோ ஜாதீ ஹை—கல்கத்தாவிலிருந்து ஒரு லயன் பம்பாயிக்குப் போகிறது.

யே நாக்$^1$பூர்ஸே ஹோகர் ஜாதீ ஹை—இது நாகபூர் வழியாகச் செல்கிறது.

கல்கத்தே ஸே ஏக் ரேல் கா$^1$டி$^1$ அலாஹா பா$^1$த்$^1$ ஸே ஹோகர் பீ$^1$ சல்தி ஹை—கல்கத்தாவிலிருந்து ஒரு ரயில் வண்டி அலகாபாத் வழியாகவும் போகிறது.

இஸீ ராஸ்தேமே ஜப$^1$ல்பூர் பன்தா ஹை—இந்த வழியில் தான் ஜப்பல்பூர் இருக்கிறது.

கல்கத்தே ஸே ஏக் கா[1]டி[1] மத்[1]ராஸ் சல்தீ ஹை—கல்கத்தாவிலிருந்து ஒரு வண்டி மதராஸ் போகிறது.

ப[1]ம்ப[1]ாய் ஸே ஏக் லாயன் மத[1]ராஸ் கோ ஔர் தோ[1] லாயின் கல்கத்தேகோ சல்தீ ஹைங்—பம்பாயிலிருந்து ஒரு லயன் மதராஸுக்கும், இரண்டு லயன்கள் கல்கத்தாவுக்கும் போகின்றன.

தே[1]ஹ லீகோ பீ[1]தோ[1] லாயின் ஜாதீ ஹைங்—டில்லிக்கும் இரண்டு லயன்கள் போகின்றன.

ஏக் ஜீ. ஐ. பீ. கீ ஹை ஔர் தூஸ்ரீ பீ[1]: பீ[1]. ஸி. ஐ. கீ. ஹை—ஒன்று ஜீ. ஐ. பீ. உடையது. மற்றொன்று பீ. பீ. ஸி. ஐ உடையது.

ஜீ. ஐ. பீ. லாயின் மே இடார்ஸி, போ[1]பால், ஜ்ஹான்ஸீ, க்[1]வாலியர் ஆக[1]ரா வகை[1]ரா ஸ்டேஷன் ஹைங்—ஜீ. ஐ. பீ. லயனில் இடார்ஸீ, போபால், ஜான்ஸீ, குவாலியர், ஆக்ரா முதலிய ஸ்டேஷன்கள் இருக்கின்றன.

பீ[1]. பீ[1]. ஸி. ஐ. லாயின் மே ப[1]ரோடா, ரட்லம் வகை[1]ரா ஸ்டேஷன் பள்தே ஹைங்—பீ. பீ. ஸி. ஐ. லயனில் பரோடா, ரத்லாம் முதலிய ஸ்டேஷன்கள் இருக்கின்றன.

ப[1]ரோடா[1] ஸே ஏக் லாயின் ஆமதா[1]பா[1]த்[1] கோ ஔர் வஹாங் ஸே கராச்சிகோ க[1]யீ ஹை—பரோடாவிலிருந்து ஒரு லயன் அஹமதா பாதுக்கும் அங்கிருந்து கராச்சிக்கும் போய்க் கொண்டிருக்கிறது.

---

## பாடம் பதினைந்து—ஸப1க் பந்த்1ரா

இஸ் ஸப1க் மே ஹம் மத1ராஸ் கீ ரேல் கா1டி1 யோங்கே பா1 ரேமே ஸீகேங்கே1—இந்த பாடத்தில் நாம் மதராஸ் ரயில் வண்டிகளைப்பற்றி கற்றுக்கொள்வோம்.

மத1ராஸ் மே தோ1 ப1டே1 ஸ்டேஷன் ஹைங்—சென்னையில் இரண்டு பெரிய ஸ்டேஷன்கள் இருக்கின்றன.

ஏக் ஸெண்ட்ரல் ஸ்டேஷன் ஹை; ஔர் தூ1ஸ்ரா ஏக்1மோர்—ஒன்று ஸெண்டிரல் ஸ்டேஷன்; மற்றொன்று எழும்பூர்.

ஸெண்ட்ரல் ஸ்டேஷன்ஸே ப1டீ1 லாயின் கீ கா1டி1யாங் ஔர் எக்1மோர் ஸே சோடீ லாயன் கீ கா1டி1யாங் சல்தீ ஹைங்—ஸெண்டிரல் ஸ்டேஷனிலிருந்து பெரிய லயன் வண்டிகளும், எழும்பூரிலிருந்து சின்ன லயன் வண்டிகளும் செல்கின்றன.

ஸெண்ட்ரல் ஸ்டேஷன்ஸே ரேல்கா1டி1 கல்கத்தா, ப1ம்பா1ய், தே1ஹ்லி, பே1ங்களூர், கொச்சி, மங்க1ளூர், நீலகி1ரி வகை1ராகோ ஜாதீ ஹை—ஸெண்டிரல் ஸ்டேஷனிலிருந்து ரயில்வண்டி கல்கத்தா, பம்பாய், டில்லி, பெங்களூர், கொச்சி, மங்களூர், நீலகிரி முதலியவைகளுக்குப் போகிறது.

கல்கத்தா கீ லாயன் கூ1டூ1ர், பெ1ஜவாடா1, ராஜமஹேந்திர வரம், வால்டேர் வகை1ரா ஸே ஹோகர் சல்தீஹை—கல்கத்தா லயன் கூடூர், பெஜவாடா, ராஜமஹேந்திர வரம், வால்டேர் முதலியவைகள் வழியாகப் போகிறது.

ப$^{1}$ம்பாய் கீ லாயன் ரேணிகு$^{1}$ண்டா, கு$^{1}$ண்டகல் வகை$^{1}$ராஸே சல்தீஹை—பம்பாய் லயன் ரேணிகுண்டா, குண்டகல் முதலியவை வழியாகப் போகிறது.

பெ$^{1}$ங்க$^{1}$ளூர் கீ கா$^{1}$டி$^{1}$ அரக்கோணம், காட்பாடி, ஜோலார்பேட் வகை$^{1}$ராஸே ஹோகர் சல்தீஹை—பெங்களூர் வண்டி அரக்கோணம், காட்பாடி, ஜோலார்பேட்டை முதலியவைகள் வழியாகப்போகிறது.

காட்பாடி$^{1}$ஸே ஏக் சோடி லாயின் ரேணிகு$^{1}$ண்டா ஸே ஹோகர் கூ$^{1}$டூ$^{1}$ர் தக் க$^{1}$யீ ஹை—காட்பாடியிலிருந்து ஒரு சிறிய லயன் ரேணிகுண்டா வழியாக கூடூருக்குப் போகிறது.

இஸீ லாயின்மே சித்தூர், திருபதி, காளஹஸ்தி, வெங்கடகி$^{1}$ரீ வகை$^{1}$ரா பன்தே ஹைங்—இந்த லயனில் தான் சித்தூர், திருப்பதி, காளஹஸ்தி, வெங்கடகிரீ முதலியன இருக்கின்றன.

மத$^{1}$ராஸ்ஸே ஸேலம், கோயம்ப$^{1}$த்தூர் ஜானே வாலி கா$^{1}$டி$^{1}$ ஜோலார்பேட் ஸே ஹோகர் சல்தீஹை—சென்னையிலிருந்து சேலம், கோயமுத்தூர் போகும் வண்டி ஜோலார்பேட்டை வழியாகப் போகிறது.

கோயமுத்தூர் ஸே ஆகே$^{1}$ மேட்டுபாளயம் ஹை—கோயம்பத்தூரைத் தாண்டி மேட்டுப்பாளையம் இருக்கிறது.

யஹாங்ஸே நீலகி$^{1}$ரிகீ ரேல் கா$^{1}$டி$^{1}$ சல்தீஹை—இங்கிருந்து நீலகிரி ரயில்வண்டி போகிறது.

கோயம்ப$^{1}$த்தூர் ஸே பச்சிம் ஜானே வாலி கா$^{1}$டி$^{1}$ கொச்சி ஔர் மங்க$^{1}$ளூர் கோ ஜாதீ ஹை—கோயம்பத்

ஊரிலிருந்து மேற்கே போகும் வண்டிகள் கொச்சிக்கும் மங்களூருக்கும் போகின்றன.

மத[1]ராஸ் எக்[1]மோர் ஸே சோடீ லாயன் கீ கா[1]டி[1]யாங் ஜாதீ ஹைங் — சென்னை எக்மோரிலிருந்து சின்ன லயன் வண்டிகள் போகின்றன.

யஹாங் கீ ஸப்[1] கா[1]டி[1]யாங் வில்லுபுரம் தக் ஜாதீ ஹைங்—இங்கிருந்து எல்லா வண்டிகளும் விழுப்புரம் வரையில் போகின்றன.

வில்லுபுரம்ஸே திருச்சிகே தோ[1] ராஸ்தே ஹைங்—விழுப்புரத்திலிருந்து திருச்சிக்கு இரண்டு பாதைகள் இருக்கின்றன.

ஏக் கா நாம் மெயின் லாயன் ஹை—ஒன்றின் பெயர் மெயின் லைன்.

இஸ் லாயன் மே சித[1]ம்ப[1]ரம், மாயவரம், கும்ப[1]கோணம், தஞ்சாவூர் வகை[1]ரா ஹைங்—இந்த லயனில் சிதம்பரம், மாயவரம், கும்பகோணம், தஞ்சாவூர் முதலியன இருக்கின்றன.

இஸ் ராஸ்தேஸே திருச்சி வில்லுபுரம் ஸே கரீப்[1] ஔஸசாலீஸ் மீல் ஹை—இந்தபாதையில் திருச்சி விழுப்புரத்திலிருந்து சுமார் 140 மைல்.

தூ[1]ஸ்ரீ லாயன் கார்ட்[1] லாயன் ஹை—மற்றொரு லயன் கார்ட் லைன்.

இஸ்மே விருத்[1]தா[1]சலம், லால்கு[1]டி[1], ஸ்ரீரங்க[1]ம் வகை[1]ரா பள்தே ஹைங்—இதில் விருத்தாசலம், லால்குடி, ஸ்ரீரங்கம் முதலியவைகள் இருக்கின்றன.

இஸ் ராஸ்தே ஸே திருச்சி, வில்லுபுரம் ஸே கரீப்1 ஸௌமீல் ஹை—இந்த வழியில் விழுப்புரத்திலிருந்து திருச்சி சுமார் நூறு மைல்.

திருச்சிஸே ஏக் லாயன் மானாமது1ராகோ, ஏக் லாயன் மது1ராகோ ஔர் ஏக் லாயன் ஈரோட்1கோ க1யீ ஹை—திருச்சியிலிருந்து ஒரு லயன் மானாமதுரைக்கும் ஒரு லயன் மதுரைக்கும் மற்றொன்று ஈரோடுக்கும் போகிறது.

இன்மே ஈரோட்1கீ லாயன் ப1டீ1ஹை, பா1கீ ஸப்1 சோடீ ஹைங்—இவைகளில் ஈரோடு லயன் பெரியது. மற்றவை யெல்லாம் சிறியவை.

மத1ராஸ்ஸே ஏக் கா1டி1 மானாமது1ராகோ ஔர் ஏக் விருது1நக1ர்கோ ஜாதீஹை—மதுரையிலிருந்து ஒரு வண்டி மானாமதுரைக்கும் மற்றொன்று விருது நகருக்கும் போகிறது.

மானாமது1ராஸே த1னுஷ்கோடிகோ ஏக் லாயன் க1யீ ஹை—மானாமதுரையிலிருந்து தனுஷ்கோடிக்கு ஒரு லயன் போகிறது.

இஸ்மே ராமனாத்புரம், மண்ட1பம், பாம்ப1ன், வகை1ரா ஸ்டேஷன் பள்தே ஹைங்—இதில் ராமனாதபுரம், மண்டபம், பாம்பன் முதலிய ஸ்டேஷன்கள் இருக்கின்றன.

மண்ட1பம் ஔர் பாம்ப1ன் கே1பீ1ச்மே ஸமுத்1ரபர் புல் ப1னா ஹை—மண்டபத்துக்கும் பாம்பனுக்கும் நடுவில் கடல் மீது பாலம் இருக்கிறது.

அச்சா, அக[1]ர் ஆப் லைப்f பாலிஸீ லேங் தோ ஜீzந்த[1] கீ[1] ப[1]ர் ஆப்கோ ஹர்ஸால் சத்தீஸ் ரூப்யே தே[1]னே படே[1]ங்கே[1]—நல்லது, நீங்கள் லைப் பாலிஸீ எடுத்தால் ஆயுள் பரியந்தம் ஒவ்வொரு வருஷமும் முப்பத்தியாறு ரூபாய் கொடுக்கவேண்டும்.

ஆப்கே மர்னேகே பா[1]த் ஆப்கே வா்ர்ஸ்கோ ஏக் ஹஜாzர் ரூப்யே மிலேங்கே[1]—நீங்கள் இறந்த பிறகு உங்கள் வாரிஸுக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்கும்.

இஸ்மே ஆப்கோ கம் கர்ச் படே[1]கா—இதில் உங்களுக்குக் குறைந்த செலவாகும்.

ஆப்கே பா[1]த் ஆப்கே பா[1]ல்ப[1]ச்சோங்கோ பக்கீ ரகம் மிலேகீ[1]—உங்களுக்குப் பிறகு உங்கள் குழந்தை குட்டிகளுக்கு நல்ல தொகை கிடைக்கும்.

தூ[1]ஸ்ரீ பாலிஸீ கைஸீ ஹை ?—இரண்டாவது பாலிஸீ எப்படி ?

இஸ்மே ஆப் கோ பந்த்[1]ரா ஸால் யா பீ[1]ஸ் ஸால் யா பசீஸ் ஸால்பா[1]த் ரூப்யே மிலேங்கே[1]—இதில் உங்களுக்கு பதினைந்து வருஷம், இருபது வருஷம் அல்லது இருபத்தைந்து வருஷம் பிறகு ரூபாய் கிடைக்கும்.

பf்ர்ஜ் கீஜியே கி மைங் பீ[1]ஸ் ஸால் பா[1]த் ரூப்யே சாஹ்தா ஹூங்—நான் இருபது வருஷங்களுக்குப் பிறகு பணம் விரும்புவதாக வைத்துக் கொள்ளுங்கள்.

ஆப்கோ ஹர் ஸால் சௌராஸீ ரூப்யே தே¹னே படே¹ங்கே¹—நீங்கள் ஒவ்வொரு வருஷமும் எண்பத்தி நாலு ரூபாய் கொடுக்கவேண்டும்.

பீ¹ஸ் ஸால் பா¹த்¹ ஆப்கோ குச் நஹீ தே¹னா படே¹கா¹—இருபது வருஷங்களுக்குப் பிறகு நீங்கள் ஒன்றும் கொடுக்கவேண்டாம்.

ஆப் கோ தப்¹ ஏக் ஹஜாzர் ரூப்யே மிலேங்கே ஔர் ஆப்கே மர்னே கே பா¹த்¹ ஆப்கே வார்ஸ்கோ ஏக் ஹஜாzர் ரூப்யே மிலேங்கே¹—உங்களுக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்கும். தாங்கள் இறந்த பிறகு உங்கள் வாரிசுக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்கும்.

இஸ்மே ஆப் பீ¹ உமர் சட்¹னே பர் ரூப்யே பாயங்கே¹ ஔர் ஆப் கே மர்னேகே பா¹த்¹ ஆப்கே பா¹ல் ப¹ச்சோங்கோ பீ¹ ரூப்யே மிலேங்கே¹—இதில் நீங்களும் வயது சென்ற பிறகு பணம் பெறுவீர்கள். நீங்கள் இறந்த பிறகு உங்கள் குழந்தை குட்டிகளுக்கும் பணம் கிடைக்கும்.

அக¹ர் மைங் பீ¹ஸ் ஸால்ஸே பஹலே மருங்?—நான் இருபது வருஷங்களுக்கு முன் இறந்தால்?

தோ ஆப்கே வார்ஸ் கோ ஏக் ஹஜாzர் ஔர் பா{ய் தே¹கீ ரகம் மிலே கீ¹—அப்படியானல் உங்கள் வார்ஸுக்கு ஆயிரம் ரூபாயும் லாபத் தொகையும் கிடைக்கும்.

பா{ய்தே¹ கீ ரகம் க்யா ஹை?—லாபத்தொகை என்ருல் என்ன?

ஹர் ஸால் ஹம் குச் பாலிஸியோங்கே ஸாத் பா{ய் தே¹ கீ ரகம் ஜோட்¹ தே ஜாதே ஹைங்—ஒவ்வொரு

வருஷமும் நாங்கள் சில பாலிஸிகளில் லாபத் தொகை சேர்த்துக்கொண்டே போகிறோம்.

அகர் மைங் ஜிZந்தா ரஹூங் தோ க்யா பா[ய் தே கீ ரகம் நஹீங் மிலே கீ?—நான் உயிரோடு இருந்தால் லாபத்தொகை கிடைக்காதா?

க்யோங் நஹீங், ஜZரூர் மிலே கீ—ஏன் இல்லாமல் கட்டாயம் கிடைக்கும்.

அச்சா, ஆப் பர்ஸோங் ஆயியே, மைங் ஸோச் கர் ஜவாப் தூங்கா—சரி நீங்கள் நாளை பொருத்து வாருங்கள், நான் யோசித்து பதில் தெரிவிக்கிறேன்.

---

## பாடம் முப்பது—ஸப்க் தீஸ்

(யுத்தம்)

ஆஜ் கல் துனியாமே ஏக் படீ லடாயீ சல் ரஹீ ஹை—இப்பொழுது உலகத்தில் ஒரு மிகப் பெரிய சண்டை நடக்கிறது.

இஸ்மே ப்ரிடென், அமெரிகா, ரூஸ் ஔர் சீன் ஏக் தரப்f ஹைங். ஔர் தூஸ்ரீ தரப்f ஜர்மனீ ஔர் ஜப்பான்—இதில் பிரிட்டன், அமெரிக்கா, ரஷியா, சைனு இவைகள் ஒரு பக்கம் இருக்கின்றன. ஜெர்மனியும் ஜப்பானும் மற்ருெரு பக்கத்தில் இருக்கின்றன.

ஔர் பீ கயீ முல்க் இஸ் ஜங்க் மே ஷாமில் ஹைங்—இன்னும் பல தேசங்கள் இந்த சண்டையில் கலந்துக் கொண்டிருக்கின்றன.

இஸ்மே ஏக் தில்லகீ ஹை—இதில் ஒரு வேடிக்கை யுண்டு.

ரூஸ் ஔர் ஜர்மனீ தோ து[1]ஷ்மன் ஹைங்—ரஷி யாவும் ஜர்மனியும் சத்ரு.

மக[1]ர் ரூஸ் ஔர் ஜபான் தோ[1]ஸ்த் ஹைங்—ஆனல் ரஷியாவும் ஜப்பானும் மித்திரர்கள்.

இஸ் லடாயீ கீ வஜா க்யா ஹை—இந்த சண்டைக்குக் காரணம் என்ன?

உன்னீஸ் ஸௌ சௌதா[1]ஸே உன்னீஸ் ஸௌ அடாரா தக் ஏக் ப[1]டீ[1] லடாயீ சலீ—ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினான்கு முதல் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினெட்டு வரை ஒரு பெரிய சண்டை நடந்தது.

உஸ்மே பீ[1] ஜர்மனீ, ப்[1]ரிடென், அமெரிகா ஔர் ரூஸ் கா துஷ்மன் தா—அதிலும் ஜர்மெனி, பிரிட்டென், அமெரிக்கா, ரஷ்யா இவைகளின் சத்துருவாய் இருந்தது.

உஸ்மே ஜர்மெனீ ஹார் க[1]யீ—அதில் ஜர்மெனி தோல்வி யடைந்தது.

உஸ்கே பா[1]த் ஸுலஹ் ஹுயீ—அதற்குப் பிறகு சமாதானம் நடந்தது.

ஜர்மனீ அப்னீ ஹார்கோ நஹீ பூ[1]லீ—ஜர்மெனி தன் தோல்வியை மறக்கவில்லை.

வஹ சுப் சாப் அப்னேகோ மஜ்பூ[1]த் ப[1]னாதீ ரஹீ—அது பேசாமல் தன்னை பலமாக்கிக் கொண்டிருந்தது.

உஸ்கா ஸியாஸி ட[1]ங்க்[1]பீ[1] ப[1]த[1]ல் க[1]யா—அதனுடைய அரசியல் முறையும் மாறிவிட்டது.

பஹலே ஜர்மனீபர் காய்ஸர் நாம்கா பா1த்1ஷா ஹுகும் கர்தா தா—முதலில் ஜர்மெனிமீது கைஸர் என்ற அரசன் ஆட்சி புரிந்து வந்தான்.

பிச்லீ லடாயீகே பா1த்1 ஜர்மனீ ரிபப்1லிக் ஹுயீ—பின் யுத்தத்துக்குப் பிறகு ஜர்மனீ (குடியரசு) ரிபப்ளிக் ஆயிற்று.

ஜப்1 ஹிட்லர் ஹுகூமத் சலானே லகா1 தப்1 ஆம் லோகோ1ங்கா கோயீ ஹக் நஹீ ரஹா—ஹிட்லர் ஆட்சி புரிய ஆரம்பித்த பிறகு பொது ஜனங்களுக்கு உரிமை இல்லாமல் போய் விட்டது.

நாம் கே வாஸ்தே சுனவ் ஹோதா தா—பேருக்குத் தேருதல் நடந்துக்கொண்டிருந்தது.

லேகின் ஸப்1 காம் ஏக் ஆத்1மீ கே இஷாரேபர் ஹோதா தா—ஆனல் எல்லா வேலைகளும் ஒரு ஆளின் விருப்பப்படி நடந்து வந்தது.

இத1ர் இடலீ மே பீ1 ஸியாஸி தரீகா ப1த1லா—இங்கு இத்தாலியிலும் அரசியல் முறை மாறுதலடைந்தது.

இடலி ஔர் ஜர்மனீ தோ1ஸ்த் ப1னீங—இத்தாலியும் ஜெர்மினியும் மித்திரர்கள் ஆனர்கள்.

ஜப்பான் பீ1 ஜர்மனீ ஔர் இடலீகா தோ1ஸ்த் ப1னா—ஜப்பானும் ஜர்மனியினுடையவும் இத்தாலியினுடையவும் நேச நாடாயிற்று.

ஜப்1 ஹிட்லர் காபீf மஜ்zபூ1த் ஹோ க1யா தப்1 வஹ் அப்னாராஜ் ப1டா1னே லகா1—ஹிட்லர் போதுமான பலமடைந்த பிறகு தன்ராஜ்யத்தை பெரிதாக்க ஆரம்பித்தான்.

பஹலே ஆஸ்ட்ரியா கோ பகளா—முதலில் ஆஸ்டிரியாவைப் பிடித்தான்.

பிர் ஜெZகோஸ்லாவியா பர் ஹாத் லகா[1]யா—பிறகு செக்கோ ஸ்லாவாகியா மீது கையை வைத்தான்.

தப்[1] ப்[1]ரிடென்னே எதராஜ்கியா—அப்பொழுது பிரட்டென் ஆக்ஷேபித்தது.

ப்[1]டென் ஔர் ஜர்மனீ கே பீ[1]ச்மே ஸம் ஜௌதா ஹுவா—பிரிட்டெனுக்கும் ஜர்மனிக்கும் ஒப்பந்தம் நடந்தது.

மக[1]ர் ப[1]ஹுத் தோடே[1] வக்த்கே பா[1]த்[1] ஹிட்லர்னே போலந்த்[1] பர் ஹம்லா கியா—ஆனால் கொஞ்ச நாளைக்கெல்லாம் ஹிட்லர் போலந்து மீது படை எடுத்தான்.

தப்[1] ப்[1]ரிடென் ஔர் ப்[1]ரான்ஸ்னே ஜர்மனீ பர் லடாயீ ஷுரூ கர் தீ[1]—அப்பொழுது பிரிட்டெனும் பிரான்சும் ஜெர்மெனி மீது சண்டை ஆரம்பித்தன.

உஸ் வக்த் ஜர்மனீ னே ரூஸ் ஸே ஸம்ஜௌதா கர்லியா—அச்சமயம் ஜர்மனி ரஷியாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது.

உஸ்னே ஸாரே போலண்ட் பர் கப்[1]ஜாZ கர் லியா ஔர் உஸ்மே ஆதா[1] ரூஸ் கோ தே[1] தி[1]யா—அது பூரா போலந்துமீது ஆக்கிரமித்துக் கொண்டு அதில் பாதியை ரஷியாவுக்குக் கொடுத்து விட்டது.

இத[1]ர் ஜர்மனீனே ப்[1]ரான்ஸ் கோ ஹரா தி[1]யா—இங்கு ஜர்மெனி பிரான்ஸை தோற்கடித்து விட்டது.

ப்[1]ரிடென் கோ ரஹ்ற கர் லள்னே கோ யூரப் மே ஜகா[1] நஹீ ரஹீ—பிரிட்டனுக்கு தங்கி சண்டை செய்ய ஐரோப்பாவில் இடமில்லாமல் போய் விட்டது.

ஸப்[1] லோக்[1] ஸமஜ்னே லகே[1]கி அப்[1] ஜர்மனீ கோ ஜீத்னு மும்கின் நஹீ—இப்பொழுது ஜெர்மனியை ஜெயிப்பது சாத்தியமில்லை என்று எல்லோரும் கருதினார்கள்.

அசானக் ஜர்மெனீ னே ரூஸ்பர் ஹம்லா கியா—திடீரென்று ஜர்மனீ ரஷியாவைத் தாக்கிற்று.

இக[1]ர் அமெரிகா பீ[1] ப்ரிடென் ஸே மில் க[1]யா—இங்கு அமெரிக்காவும் பிரிட்டனுடன் சேர்ந்தது.

அப்[1] தோ[1] தீன் ஸால் ஸே ஜர்மனீ ஹார் பர் ஹார்கா ரஹீ ஹை—இப்பொழுது இரண்டு மூன்று வருஷங்களாக ஜர்மெனி தோல்விமேல் தோல்வியே அடைந்து வருகிறது.

ரூஸ் அப்[1] ஜர்மெனீ கே அந்த[1]ர் பஹுஞ்ச் ரஹீ ஹை—ரஷியா இப்பொழுது ஜர்மனிக்குள் போய்க் கொண்டிருக்கிறது.

இடலீகா பௌனு ஹிஸ்ஸா ஹமாரே காபூ[1] மே ஆக[1]யா—இத்தாலியில் முக்கால் பங்கு நம் கைவசமாய் விட்டது.

அப்[1] அங்க[1]ரேஜ்z ஔர் அமெரிகன் பௌஜ் யூரப்மே பஹுஞ்ச் கர் ப்[1]ரான்ஸ் மே லள் ரஹீ ஹை—இப்பொழுது ஆங்கிலேய படையும் அமெரிக்கப் படையும் ஐரோப்பாவை அடைந்து பிரான்சில் சண்டை செய்துக் கொண்டிருக்கின்றன.

பாரிஸ் கோ பீ[1] பகள் லியா—பாரிஸையும் பிடித்து விட்டார்கள்.

அப்[1] ஜர்மனீ ப[1]டீ ஆபfத் மே ஹை—இப்பொழுது ஜர்மெனி பெரும் ஆபத்தில் இருக்கிறது.

வஹ் ஜீத் நஹீ ஸக்தீ—அது ஜயிக்க முடியாது.

ப[1]க[1]வான் கரே மஹ் லளாயீ ஜல்தீ[1] கதம் ஹோ ஜாய் ஔர் ஸாரீ து[1]னியா அகின் சைன் ஸே ரஹே—இந்த சண்டை சீக்கிரம் முடிந்து உலக முழுவதும் அமைதியுடன் இருக்குமாறு கடவுள் அருள் புரிவாராக.

# இலக்கண விவரங்கள்

ஹை என்பதற்கு இருக்கிறது, இருக்கிறான், இருக்கிறாள் என்று அர்த்தம். ஆங்கில "IS" போன்றது இது.

ஹோ என்ற வினைப் பகுதியின் நிகழ்காலம்.

ஸீதா ஹை = ஸீதை இருக்கிறாள்.

குத்தா ஹை = நாய் இருக்கிறது.

ஜாதா ஹை, லிக்தா ஹை, போ[1]ல்தா ஹை என்பவை நிகழ்கால வினைகள். (Present tense) இவ் வினைகளில் "தா ஹை" என்றது எல்லாவற்றிலும் வருவதைக் காணலாம்.

"வருகிறான்" "எழுதுகிறான்" "பேசுகிறான்" முதலிய வினைகளில் "கிறான்" எல்லா வற்றிலும் வருவதைப்போல். இந்தப் பொது பாகம் நீங்க மிகுதி வினைப்பகுதி,—(Root) ஜா, லிக், போ[1]ல் முதலியன வினைப்பகுதிகள்.

ஹை என்பது "ஹோ" என்ற வினைப் பகுதியின் நிகழ்காலம், பன்மையில் "ஹைங்" என்று மாறும்.

ஹம் ஹைங் = நாம் அல்லது நாங்கள் இருக்கிறோம்.

ஆப் ஹைங் = தாங்கள் இருக்கிறீர்கள்.

வே ஹைங் = அவர்கள் இருக்கிறார்கள், அவைகள் இருக்கின்றன.

"தும்" உடன் சேரும்பொழுது வினைச்சொல்லின் நிகழ்கால உருவம் "ஹோ" என்றே இருக்கும்.

தும் ஹோ=நீ இருக்கிறாய்.

"மைங்" உடன் சேரும் பொழுது "ஹூங்" என்று இருக்கும்.

மைங் ஹூங்=நான் இருக்கிறேன்.

ஜாதா ஹை, லிக்தா ஹை முதலியன ஆண்பால் ஒருமை. பன்மையில் ஜாதே ஹைங், லிக்தே ஹைங், போ¹ல்தே ஹைங் என்று மாறும். இதே விதமாக மற்றெல்லா வினைகளும் மாறுகின்றன. பெண்பால் ஒருமையில் ஜாதீ ஹை, லிக்தீ ஹை போ¹ல் தீ ஹை என்றும், பெண்பால் பன்மையில் ஜாதீ ஹைங், லிக்தீ ஹைங், போ¹ல்தீ ஹைங் என்று மாறும்.

முதல் பாடத்தில் ஆண்பால். ஒருமை வினைச் சொற்களும், இரண்டாம் பாடத்தில் பெண்பால் ஒருமை வினைச் சொற்களும் கொடுக்கப்பட் டிருக்கின்றன.

வோ என்றால்=அவன், அவள், அது.

யே என்றால்=இவன், இவள், இது.

உருதுவிலும் ஹிந்தியிலும் எழுதும் வகையில் "வஹ்" என்றும் "யஹ்" என்றும் எழுதுவது வழக்கம். ஹிந்தியில் "ஹ" வை பல இடங்களில் பலமாக உச்சரிக்கக் கூடாது. உதாரணமாக "ஜகஹ்" என்பதை ஜகா¹ என்றும், "க்யாரஹ்" "பா¹ரஹ்" முதலியவைகளை "க்¹யாரா" "பா¹ரா" என்றும் தான் உச்சரிக்க வேண்டும். அதே விதமாக "வஹ்" என்று எழுதுவதை சாதாரணமாக "வோ" என்றும் "யஹ்" என்பதை "யே" என்றுமே உச்சரிப்பது வழக்கம். இப்புத்தகத்தில் உச்சரிப்பு முறைப்படிக்கே பதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

"வோ" வின் பன்மை "வே."

"யே" யின் பன்மையும் "யே" தான்.

இது ஹிந்தியிலும் உருதுவிலும் "யே" என்றே எழுதப்படும்.

மை = நான்.

ஹம் = நாம், நாங்கள்.

தும் = நீ.

ஆப் = நீங்கள், தாங்கள்.

வோ = அவன், அவள், அது.

வே = அவர்கள், அவைகள்.

யே = இவன், இவள், இது, இவர்கள், இவைகள்.

ஒருவன் தன்னைக் குறித்துப் பேசிக்கொள்ளும் பொழுது "ஹம்" என்று சாதாரணமாக சொல்லிக் கொள்ளுவான். இது கர்வமோ, பெருமையோ அல்ல.

"தூ" என்று ஒரு சொல் உண்டு. இதற்கு நீ என்றுதான் அர்த்தம். ஆனால் மிகவும் தாழ்ந்தவர்களுடன் பேசும் பொழுதோ, சண்டையிடும் பொழுதோ அல்லது கடவுளைக் குறித்தோ உபயோகப்படுத்தப் படும். நாம் இங்கு இதைபற்றி கவனிக்க வேண்டியதில்லை.

"தும்" "ஆப்" இரண்டும் இலக்கணத்தில் பன்மை. ஆங்கில You போல், இவைகளை ஒருவனிடம் பேசும் பொழுதும் உபயோகிக்கலாம். பலரிடம் பேசும் பொழுதும் உபயோகிக்கலாம். 'தும்' என்றால் 'நீ' என்றிருப்பதால் அது ஒருமை என்றும், 'ஆப்' என்

ரூல் நீங்கள் அல்லது தாங்கள் என்று இருப்பதால் அதுதான் பன்மை யென்றும் நினைக்கக்கூடாது. மரியாதையாய் நாம் யாரைத் தமிழில் 'நீங்கள்' அல்லது 'தாங்கள்' என்கிறோமோ அவர்களிடம் பேசும் பொழுது 'ஆப்' என்றும், மற்ற யாரிட மெல்லாம் நாம் தமிழில் 'நீ' என்கிறோமோ அவர்களிடமெல்லாம் 'தும்' என்றும் வழங்க வேண்டும்.

ஒரு உபாத்தியாயர் மாணவனைப் பார்த்து "தும் க்யா லிக்தே ஹோ" என்பார். பல மாணவர்களாயிருந்தால் பன்மை காட்டுவதற்கு 'தும்' உடன் 'லோக்[1]' என்று சேர்த்து "தும் லோக்[1] க்யா கர்தே ஹோ?" என்பார். இதே விதமாக மரியாதையாக ஒருவரை 'ஆப்' என்றும். பலரை "ஆப் லோக்[1]" என்றும் சொல்லுவார்கள்.

மைங் ஹூங்=நான் இருக்கிறேன்.

ஹம் ஹைங்=நாம் இருக்கிறோம்; நாங்கள் இருக்கிறோம்.

தும்ஹோ=நீ இருக்கிறாய்.

ஆப் ஹைங்=நீங்கள் இருக்கிறீர்கள்; தாங்கள் இருக்கிறீர்கள்.

வோ ஹை=அவன் இருக்கிறான்; அவள் இருக்கிறாள்; அது இருக்கிறது.

வே ஹைங்=அவர்கள் இருக்கிறார்கள்; அவை இருக்கின்றன.

யே ஹை=இவன் இருக்கிறான்; இவள் இருக்கிறாள்; இது இருக்கிறது.

யே ஹைங்—இவர்கள் இருக்கிறார்கள் ; இவைகள் இருக்கின்றன.

மைங் கர்தா ஹூங்=நான் செய்கிறேன்.

ஹம் கர்தே ஹைங்=நாம் செய்கிறோம்; நாங்கள் செய்கிறோம்.

தும் கர்தே ஹோ=நீ செய்கிறாய்; நீங்கள் செய்கிறீர்கள்.

ஆப் கர்தே ஹைங்=தாங்கள் செய்கிறீர்கள்.

வோ கர்தா ஹை=அவன் செய்கிறான்; அது செய்கிறது.

வே கர்தே ஹைங்=அவர்கள் செய்கிறார்கள்; அவைகள் செய்கின்றன.

மேற் கண்ட நிகழ்கால வினைச் சொற்களில் இரண்டு விஷயங்கள் கவனிக்கவேண்டும். வினைப்பகுதியுடன் "தாஹை" என சேர்க்கப்படுகிறது என்று முன்பே கூறியுள்ளோம். இதில் 'தா' என்பது பன்மையில் 'தே' என்று மாறுகிறது.

2. 'வோ கர்தா ஹை'=என்பதற்கு அவன் செய்கிறான் என்று மட்டும் அர்த்தம் கொடுக்கிறது. அவள் என்று கொடுக்கவில்லை.

ஹிந்தியில் பெண் பால் சம்பந்தமான மாறுதல்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய எல்லாவற்றிலும் உண்டாகும். தமிழில் ஆண் பெண் எல்லோரும் "நான் போகிறேன்" என்றுதான் சொல்லுவார்கள். ஆனல் ஹிந்தியில் ஆண் இருந்தால் (மைங் ஜாதா ஹூங்) என்பான். பெண் (மைங் ஜாதீ ஹூங்) என்

யாள். பல ஆண்கள் (ஹம் ஜாதே ஹைங்) என்பார்கள். பல பெண்கள் (ஹம் ஜாதீ ஹைங்) என்பார்கள். அதே விதமாக நாம் ஒரு ஆணை (தும் போ[1]ல்தே ஹோ) என்று சொல்லலாம். ஒரு பெண்ணுக இருந்தால் (தும் போ[1]ல்தீ ஹோ) என்று சொல்ல வேண்டும். எனவே பெண்பாலில் நிகழ்கால வினைகள் இவ்வாறு இருக்கும்.

மைங் கர்தீ ஹூங்=நான் செய்கிறேன்.

ஹம் கர்தீ ஹைங்=நாம் செய்கிறோம், நாங்கள் செய்கிறோம்.

தும் கர்தீ ஹோ=நீ செய்கிறாய்.

ஆப் கர்தீ ஹைங்=நீங்கள் செய்கிறீர்கள், தாங்கள் செய்கிறீர்கள்.

வோ கர்தீ ஹை=அவள் செய்கிறாள், அது செய்கிறது.

வே கர்தீ ஹைங்=அவர்கள் செய்கிறார்கள், அவைகள் செய்கின்றன.

யே கர்தீ ஹை=இவள் செய்கிறாள், இது செய்கிறது.

யே கர்தீ ஹைங்=இவர்கள் செய்கிறார்கள் இவைகள் செய்கின்றன.

'ஹோ' என்ற வினைச் சொல்லுக்கு நிகழ்காலம் 'ஹை' என்று 101-வது பக்கத்தில் கூறி யுள்ளோம். 'ஹோ' என்ற இவ்வினைச் சொல்லுக்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. 1. இருக்க. 2. ஆக. 'இருக்க' என்ற அர்த்தங் கொண்டபொழுது அதனுடைய நிகழ்கால உருவங்கள் இப்படி இருக்கும்.

ஹூங்=இருக்கிறேன்.

ஹோ=இருக்கிறாய்.

ஹை=இருக்கிறான், இருக்கிறது, இருக்கிறாள்.

ஹைங்=இருக்கிறார்கள், இருக்கின்றன.

'ஆக' என்ற அர்த்தங்கொண்ட பொழுது அதன் நிகழ்கால உருவங்கள் இப்படி இருக்கும்.

## ஆண்பால்

மைங் ஹோதா ஹூங்=நான் ஆகிறேன்.

ஹம் ஹோதே ஹைங்=நாம் அல்லது நாங்கள் ஆகிறோம்.

தும் ஹோதே ஹோ=நீ ஆகிறாய்.

ஆப் ஹோதே ஹைங்=நீங்கள் அல்லது தாங்கள் ஆகிறீர்கள்.

வோ ஹோதா ஹை=அவன் ஆகிறான், அது ஆகிறது.

வே ஹோதே ஹைங்=அவர்கள் ஆகிறார்கள், அவைகள் ஆகின்றன.

## பெண்பால்

மைங் ஹோதீ ஹூங்=நான் ஆகிறேன்.

ஹம் ஹோதீ ஹைங்=நாம் அல்லது நாங்கள் ஆகிறோம்.

தும் ஹோதீ ஹோ=நீ ஆகிறாய்.

ஆப் ஹோதீ ஹைங்=நீங்கள் அல்லது தாங்கள் ஆகிறீர்கள்.

வோ ஹோதீ ஹை=அவள் ஆகிருள், அது ஆகிறது.

வே ஹோதீ ஹைங்=அவர்கள் ஆகிருர்கள்; அவைகள் ஆகின்றன.

... ... ... ...

வினைப்பகுதியுடன் 'ஞ' என்று சேர்த்தால் 'செய்ய' 'போக' முதலியனபோல் ஆகும். ஜாஞ= போக. கேல்ஞ=விளையாட. இதை ஆங்கிலத்தில் Infinitive என்பார்கள். அகராதிகளில் வினைச் சொற்களின் இந்த உருவம் தான் கொடுக்கப்படும்.

ஹிந்துஸ்தானியில் ஆண்பால், பெண்பால் என்ற இரண்டு பால்தான் உண்டு. இதனுல் நமக்கு கஷ்டமாய் விடுவதுண்டு. உயிர் உள்ள பிராணிகளின் பெயரைக்கொண்டே இன்னபால் என்று கூறிவிடலாம். சுவர், கால், புத்தகம், துணி என்ற சொற்களின் பால் ஆணு பெண்ணு என்று கூறுவது கஷ்டமே. இதற்கு இலக்கணத்தில் சில நியமங்கள் கூறுவார்கள். அப்படி இருந்தும் பல விலக்குகள் வரும். இப்புத்தகத்தில் வரும் பல சொற்களின் பால் இன்னதென்று கடைசியில் கண்டிருக்கிறேம். பெயர்ச் சொற்களின் பக்கத்தில் (ஆ) என்று எழுதி இருப்பதெல்லாம் ஆண்பால் சொற்களென்றும் (பெ) என்று இருப்பதெல்லாம் பெண்பால் சொற்களென்றும் அறியவேண்டும். புதிதாக கற்றுக்கொள்ளும் சொற்களின் பாலை அனுபவத்தால் அறிய வேண்டும். சந்தேகமாயிருக்கு மிடத்தில் ஆண்பாலாகவே கருத வேண்டும். (கா[1]ய் தா[1]த் தே[1] தா ஹை) என்று பலர் சொல்வதுண்டு.

ஹிந்துஸ்தானி இலக்கண எண்ணிலும் ஒருமை பன்மை என்ற இரண்டு பேதங்கள்தான். ஹிந்தியில்

ஆண்பாலா யிருக்கும் எல்லா சொற்களும் ஒருமை பன்மை இரண்டிலும் ஒரே விதமாயிருக்கும். உதாரணம் :—

| | | |
|---|---|---|
| ஆத்[1]மீ | மனிதன் | மனிதர்கள் |
| ஹாதீ | யானை | யானைகள் |
| ஹிரன் | மான் | மான்கள் |
| ஷேர் | சிங்கம் | சிங்கங்கள் |
| த[1]ரக்த் | மரம் | மரங்கள் |
| மகான் | வீடு | வீடுகள் |

இந்த விதிக்கு ஒரு விலக்கு உண்டு. பல ஹிந்துஸ்தானி சொற்கள் "ஆ" வில் முடியும். அவை ஸமஸ்கிருதச் சொற்களா யில்லா விட்டால் பன்மையில் 'ஆ' என்பது 'ஏ' என்று மாறும். உதாரணமாக ராஜா, வக்தா (பேசுகிறவன்) நேதா (தலைவன்) க[1]தா[1] (கழுதை) கபடா[1] (துணி) பத்தா (இலை) முதலிய பதங்கள் 'ஆ' வில் முடியும் ஆண்பால் சொற்கள்.

இவைகளில் ராஜா, 'வக்தா' 'நேதா' என்பவை ஸம்ஸ்கிருதச் சொற்கள். இவைகள் ஒருமையானாலும் பன்மையானாலும் ஒரே விதமாயிருக்கும். அதாவது ராஜா என்றால் ஒரு அரசன் அல்லது பல அரசர்கள். ஆனால், ஸம்ஸ்கிருத மில்லாத க[1]தா[1], கபடா[1], பத்தா என்ற சொற்கள் பன்மையில் க[1]தே[1], கபடே[1], பத்தே என்று மாறும்.

சாசா, என்றால் "தகப்பனுருடன் பிறந்தவர்" என்று அர்த்தம். இது ஸம்ஸ்கிருத சொல்லல்ல ஆனால் இதன் பன்மை 'சாசே' என்று அல்ல. 'ஸாலா' என்றால் "மனைவியுடன் பிறந்தவன்"

என்று அர்த்தம். இதன் பன்மை 'ஸாலே' தான். இந்த விதமாக பே$^1$டா வின் பன்மை பே$^1$டே.

பெண்பால் சொற்கள் எல்லாம் பன்மையில் மாறுதல் அடையும்.

'அ' வில் முடியும் சொற்களுடைய கடைசி எழுத்துடன் பன்மையில் 'ஏங்' என்று சேரும்.

| | |
|---|---|
| கிதாப்$^1$ | புத்தகம் |
| கிதாபே$^1$ங் | புத்தகங்கள் |
| கா$^1$ய் | பசு |
| கா$^1$யேங் | பசுக்கள் |
| ஸளக் | சாலை |
| ஸளகேங் | சாலைகள் |
| ஆங்க் | கண் |
| ஆங்கேங் | கண்கள் |

'ஆ' விலும் 'உ' விலும் முடியும் சொற்களுடன் கடைசியில் 'யேங்' அல்லது 'வேங்' என்று சேர்க்கப்படும். 'ஊ' வில் முடியும் சொற்களில் முதலில் 'ஊ' குறுகி 'உ' வாகமாறும். பிறகு "வேங்"[2] சேர்க்கப்படும்.

த$^1$வா = மருந்து.
த$^1$வாயேங் = மருந்துகள்.
மாலா = மாலை.
மாலாயேங் = மாலைகள்.
வஸ்து = வஸ்து, பண்டம்.
வஸ்துவேங் = வஸ்துக்கள்.
ப$^1$ஹூ = நாட்டுப் பெண்.
ப$^1$ஹுவேங் = நாட்டுப் பெண்கள்.

'இ' யில் முடியும் சொற்களுடன் 'யாங்' என்றுஞ் 'ஈ' யில் முடியும் சொற்களின் கடைசி 'ஈ' யை இ ஆக மாற்றி பிறகு "யாங்" என்றும் சேர்க்க வேண்டும்.

க[1]தி = போக்கு.

க[1]தியாங் = போக்குகள்.

லள்கீ = பெண்.

லள்கியாங் = பெண்கள் முதலியன.

ஹிந்துஸ்தானியிலும் வேற்றுமைகள் உண்டு. முதல் வேற்றுமை எழுவாயாகும். எழுவாயுடன் வேறு உருபு சேர்ப்பதில்லை. சில சமயங்களில் எழுவாயுடன் 'னே' யோ அல்லது 'கோ' வோ சேர்க்கவேண்டி வரும். இதைக் குறித்து பிறகு விவரிக்கப்படும்.

இரண்டாம் வேற்றுமை உருபு 'கோ' இதற்கு 'ஐ' என்று அர்த்தம். நான்காம் வேற்றுமையிலும் 'கோ' உருபு உண்டு; அப்பொழுது அதற்கு 'க்கு' என்று அர்த்தம். எனவே 'ராம்கோ' என்றால் ராமனை அல்லது ராமனுக்கு என்று அர்த்தம். சந்தர்ப்பத்தைக்கொண்டு ராமனையா அல்லது ராமனுக்கா என்று எளிதில் கண்டு கொள்ளலாம்.

தமிழில் பல இடங்களில் 'ஐ' யும் 'க்கு'வும் தொக்கி நிற்பதுண்டு. "பழத்தைத் தின்றேன்" என்பதை "பழம் தின்கிறேன்" என்றும், "மைசூருக்குப் போகிறேன்" என்பதை "மைசூர் போகிறேன்" என்றும் சொல்வதுண்டு. எங்கெல்லாம் 'ஐ' அல்லது 'க்கு' தமிழில் தொக்கி நிற்கக் கூடுமோ அங்கெல்லாம் ஹிந்துஸ்தானியிலும் 'கோ' தொக்கி நிற்கக்கூடும்.

மூன்ரும் வேற்றுமை இருபு 'ஸே'. இதற்கு ஆல், என்று அர்த்தம்.

"ஸே" என்பதை 'ஒடு' 'உடன்' என்ற அர்த்தத்தில் உபயோகிப்பதில்லை. 'யமுனை கங்கையுடன் கலக்கிறது' என்று சொல்வதை ஹிந்துஸ்தானியில் 'யமுனை கங்கையில் கலக்கிறது' என்றே சொல்வார்கள். "யமுனா கங்காமே மில்தீ ஹை" என்பார்களே யொழிய "யமுனா கங்காஸே மில்தீ ஹை" என்று சொல்லமாட்டார்கள்.

இந்த "மில்தா ஹை" என்பதற்கு 'காண்கிருன்' 'சந்திக்கிருன்' என்று ஒரு அர்த்தமுண்டு. "பாதன் ராமனை சந்தித்தான்" என்பதில் நாம் 'ராமனை' என்று இரண்டாம் வேற்றுமையில் சொல்லுகிறோம். ஹிந்துஸ்தானியில் "பாத்ராம் ஸே மிலா" என்று "ராம்" உடன் ஐந்தாம் வேற்றுமை உருபாகிய "ஸே" சேர்ப்பார்கள்.

ஆங்கில With என்பதற்கு ஆல், ஒடு, உடன், என்ற அர்த்த மிருப்பதாலும் "ஸே" வுக்கு With என்று ஆங்கில அர்த்தம் கூறுவதாலும் "ஸே" ஒடு, உடன் என்ற அர்த்தமும் கொண்ட தென்று கூறுவர் சிலர். இது தப்பு. ஒடு, உடன் என்பதற்கு "கே ஸாத்" என்று சொல்லவேண்டும். "நான் ராமனுடன் போகிறேன்" என்பதற்கு "மைங் ராம்கே ஸாத் சல்தா ஹூங்" என்றுதான் சொல்லவேண்டும். "மைங் ராம் ஸே சல்தா ஹூங்" என்று சொல்லக்கூடாது. "ராமனுக்குச் சொல்" "ராமனைக்கேள்" என்பதை ஹிந்துஸ்தானியில் "ராம் ஸே போலோ" (அல்லது ராம்ஸே கஹோ) "ராம் ஸே பூசோ" என்று மூன்ரும் வேற்றுமை "ஸே" சேர்த்து சொல்லவேண்டும்.

நான்காம் வேற்றுமை உருபு "கோ" என்று முன்னமே சொன்னோம். இத்துடன் "கேலியே" என்று மற்றொரு உருபு உண்டு. இதில் இயற்கையா யுள்ளது 'லியே' என்பதுதான். இதற்கு "பொருட்டு" அல்லது "ஆக" என்று அர்த்தம். நாம் தமிழில் ஒரு பெயர்ச் சொல்லுடன் 'பொருட்டு' என்று சேர்க்கும் பொழுது அப்பெயர்ச்சொல்லுடன் "இன்" என்று சேர்க்கிறோம். ராமன் + இன் + பொருட்டு என்று "ராமனின் பொருட்டு" என்கிறோம். 'ஆக' என்று சேர்க்கும் பொழுது ராமன்+க்கு+ஆக=ராமனுக்காக என்கிறோம். இதே விதமாக 'லியே' சேர்ப்பதற்கு முன் பெயர்ச்சொல்லுடன் ஹிந்துஸ்தானியில் 'கே' என்று சேர்க்கவேண்டும். லியே என்ற அர்த்தம் கொண்ட "வாஸ்தே" என்று ஒருபதம் உண்டு. அதற்கு முன்பும் "கே" சேர்க்கவேண்டும். அதுவும் நான்காம் வேற்றுமை உருபே.

'ஸே' என்பதே ஐந்தாம் வேற்றுமை உருபும் ஆகும். இதற்கு "இலிருந்து" "காட்டிலும்" என்று அர்த்தம்.

ஆறும் வேற்றுமை உருபு "கா" இதற்கு "உடைய" என்று அர்த்தம். இது சில சமயங்களில் 'கே' என்றும், சில சமயங்களில் 'கீ' என்றும் மாறும். இந்த மாறுபாடுகளைப் பற்றி பிறகு விவரிக்கப்படும்.

ஏழாம் வேற்றுமை உருபுகள் "மே" "பர்" மே என்பதற்கு "இல்" என்றும், 'பர்' என்பதற்கு 'மேல்' என்றும் அர்த்தம்.

எட்டாம் வேற்றுமை உருபு அழைக்கும் வகை யைக் குறிப்பிடும் 'ஹோ' என்றும் 'ரே' என்றும்

சாதாரணமாக பெயர்ச்சொல்லுக்கு முன் சேர்ப்பது வழக்கம். "ரே ராம்" "ஹே ராம்." இதில் 'ரே' என்பது தமிழில் 'அடே' என்று அழைப்பதற்குச் சமமாகும். சாதாரணமாக ஒருவரை மரியாதையாக அழைப்பதாயிருந்தால் ஹே, ரே, இவ்விரண்டுமேயில்லாமல் குரலிலேயே தெரியும் வண்ணம் கூப்பிடுவது வழக்கம்.

பெயர்ச் சொற்களுடன் வேற்றுமை உருபுகள் சேரும்பொழுது சில மாறுபாடுகள் உண்டாகும். அவைகளை கீழே விவரிக்கிறோம்.

"ஆ" வில் முடியும் சில ஆண்பால் சொற்களின் கடைசி 'ஆ' பன்மையில் 'ஏ' என்று மாறும் என்று முன்னே கூறியுள்ளோம். அவைகளைத் தவிர மற்ற எல்லா பெயர்ச் சொற்களுடனும் (ஆண்பாலானாலும் சரி பெண்பாலானாலும் சரி) வேற்றுமை உருபு சேர்க்கும்பொழுதும் ஒருமையில் மாறுதல் இருக்காது. உதாரணம் :—ராம்+கோ=ராம்கோ. ராஜா+ஸே= ராஜாஸே. ஆத்[1]மீ+கா=ஆத்[1]மீகா. லள்கீ+கோ= லள்கீ கோ. த[1]வா+மே=த[1]வா மே முதலியன.

பன்மையில் முடிவு 'ஆ' வை 'ஏ' என மாற்றிக் கொள்ளும் 'ஆ' வில் முடியும் ஆண்பால் ஒருமைச் சொற்களுடன் வேற்றுமை உருபு சேர்ந்தால் ஒருமையிலேயே அந்த ஆ—ஏ ஆக மாறும். உதாரணம் :— க[1]தா[1]+கோ=க[1]தே[1] கோ, பத்தா+பர்=பத்தே பர், க[1]டா[1]=கா=க[1]டே[1]கா முதலியன.

பன்மையில் எல்லா பெயர்ச் சொற்களும் மாறுதல் அடையும்.

மெய்யெழுத்தில் முடியும் சொற்களுடனும், (ஆண்பாலானாலும் சரி பெண்பாலானாலும் சரி) பன்மையில் 'ஏ' என்ற முடிவு பெறும். 'ஆ' வில் முடியும் ஆண்பால் சொற்களுடனும் வேற்றுமை உருபு சேர்ந்தால் பன்மையில் கடைசி எழுத்துடன் 'ஓங்' என்று சேர்க்க வேண்டும். உதாரணம்:—ராம்+பன்மை+கோ=ராமோங்கோ, ஸட[1]க் +பன்மை+மே=ஸட[1]கோமே, ப[1]ச்சே+கோ=ப[1]ச் சோங்கோ, முதலியன.

இ—ஈ,யில் முடியும் சொற்களுடன் பன்மையில் 'யோங்' என்று சேர்க்கவேண்டும். நெடில் ஈ குறிகிவிடும். யதி (ஸன்யாசி), பன்மை + கோ=யதியோங்கோ, ஆத்[1]மீ+பன்மை+ஸே=ஆத்[1]மி யோங்ஸே, மதியாங் +கா=மதியோங்கா. ராவியாங்+கோ ராவியோங்கோ முதலியன.

உ—ஊ, வில் முடியும் சொற்களுடன் பன்மையில் வேற்றுமை உருபு சேர்க்கும் பொழுது "ஓங்" என்று சேர்க்கவேண்டும். குரு+பன்மை+கோ=குருவோங்கோ ப[1]ஹூ வேங்+கோ=ப[1]ஹுவோங்கோ முதலியன. நெடில் 'ஊ' குறிகியதை கவனிக்கவும்.

நன்கு அறிந்துக்கொள்வதற்கு ஒவ்வொரு பெயர்ச்சொல்லின் மாறுபாடுகளும் எல்லா வேற்றுமைகளிலும் கொடுக்கிறோம். இவைகளைப் போலவே மற்ற பெயர்ச்சொற்களும் என்று அறியவும். இவைகளை மனப்பாடம் செய்துக்கொள்வது நலம்.

## மெய்யெழுத்தில் முடியும் ஆண்பால்

ராம்

| | ஒருமை. | பன்மை. |
|---|---|---|
| முதல் வேற்றுமை | ராம். | ராம். |
| இரண்டாம் ,, | ராம்கோ. | ராமோங்கோ. |
| மூன்றாம் ,, | ராம்ஸே. | ராமோங்ஸே. |
| நான்காம் ,, | ராம்கோ, ராம் கேலியே. | ராமோங்கோ, ராமோங்கேலியே. |
| ஐந்தாம் ,, | ராம்ஸே. | ராமோங்ஸே. |
| ஆறாம் ,, | ராம்கா. | ராமோங்கா. |
| ஏழாம் ,, | ராம்மே, ராம்பர். | ராமோங்மே, ராமோங்பர். |
| எட்டாம் ,, | ரே ராம், ஹே ராம். | ரே ராமோ, ஹே ராமோ |

## மெய்யெழுத்தில் முடியும் பெண்பால்

கா$^{1}$ய்=பசு.

| | | |
|---|---|---|
| முதல் வேற்றுமை | கா$^{1}$ய். | கா$^{1}$யேங். |
| இரண்டாம் ,, | கா$^{1}$ய் கோ. | கா$^{1}$யோங்கோ. |
| மூன்றாம் ,, | கா$^{1}$ய்ஸே. | கா$^{1}$யோங்ஸே |
| நான்காம் ,, | கா$^{1}$ய்கோ, கா$^{1}$ய் கேலியே. | கா$^{1}$யோங்கோ, கா$^{1}$யோங்கேலியே. |
| ஐந்தாம் ,, | கா$^{1}$ய்ஸே. | கா$^{1}$யோங்ஸே |
| ஆறாம் ,, | கா$^{1}$ய்கா. | கா$^{1}$யோங்கா |
| ஏழாம் ,, | கா$^{1}$ய்மே, கா$^{1}$ய் பர். | கா$^{1}$யோமே, கா$^{1}$யோங்பர் |
| எட்டாம் ,, | ரீகா$^{1}$ய், ஹே கா$^{1}$ய், | ரீகா$^{1}$யோ, ஹே கா$^{1}$யோ. |

## ஒருமையில் ஆவில் முடிந்து பன்மையில் ஏவில் முடியும் ஆண்பால் சொற்கள்

குத்தா=நாய்.

| | | | |
|---|---|---|---|
| முதல் வேற்றுமை | | குத்தா. | குத்தே. |
| இரண்டாம் | ,, | குத்தேகோ. | குத்தோங்கோ. |
| மூன்றாம் | ,, | குத்தேஸே. | குத்தோங்ஸே. |
| நான்காம் | ,, | குத்தேகோ, குத்தேகேலியே. | குத்தோங்கோ, குத்தோங்கேலியே. |
| ஐந்தாம் | ,, | குத்தேஸே. | குத்தோங்ஸே. |
| ஆறாம் | ,, | குத்தேகா. | குத்தோங்கா. |
| ஏழாம் | ,, | குத்தேமே, குத்தேபர். | குத்தோமே, குத்தோம்பர். |
| எட்டாம் | ,, | ரே குத்தே, ஹேரே, குத்தே. | குத்தோ, ஹேகுத்தோ. |

## 'ஆ'வில் முடியும் அன்னிய ஆண்பால் சொற்கள்

ராஜா=அரசன்

| | | | |
|---|---|---|---|
| முதல் வேற்றுமை | | ராஜா. | ராஜா. |
| இரண்டாம் | ,, | ராஜாகோ. | ராஜாவோங்கோ. |
| மூன்றாம் | ,, | ராஜாஸே. | ராஜாவோங்ஸே. |
| நான்காம் | ,, | ராஜாகோ, ராஜாகேலியே. | ராஜாவோங்கோ, ராஜாவோங்கேலியே. |
| ஐந்தாம் | ,, | ராஜாஸே. | ராஜாவோங்ஸே. |
| ஆறாம் | ,, | ராஜாகா. | ராஜாவோங்கா. |
| ஏழாம் | ,, | ராஜாமே, ராஜாபர். | ராஜாவோமே, ராஜாவோங் பர். |
| எட்டாம் | ,, | ரே ராஜா, ஹே ராஜா. | ரேராஜாவோ, ஹேராஜாவோ. |

## ஆவில் முடியும் பெண்பால் சொற்கள்

த$^{1}$வா=மருந்து

| | | |
|---|---|---|
| முதல் வேற்றுமை | த$^{1}$வா. | த$^{1}$வாயெங். |
| இரண்டாம் ,, | த$^{1}$வாகோ. | த$^{1}$வாவோங்கோ. |
| மூன்றாம் ,, | த$^{1}$வாஸே | த$^{1}$வாவோங்ஸே. |
| நான்காம் ,, | த$^{1}$வாகோ, த$^{1}$வாகேலியே. | த$^{1}$வாவோங்கோ, த$^{1}$வாவோங்கேலியே. |
| ஐந்தாம் ,, | த$^{1}$வாஸே | த$^{1}$வாவோங்ஸே. |
| ஆறாம் ,, | த$^{1}$வாகா | த$^{1}$வாவோங்கா. |
| ஏழாம் ,, | த$^{1}$வாமே, த$^{1}$வாபர். | த$^{1}$வாவோமே, த$^{1}$வாவோங்பர். |
| எட்டாம் ,, | ரீத$^{1}$வா, ஹேத$^{1}$வா. | 'ரீத$^{1}$வாவோ, ஹேத$^{1}$வாவோ. |

## 'இ' யில் முடியும் சொற்கள்

மதி=புத்தி

| | | |
|---|---|---|
| முதல் வேற்றுமை | மதி. | மதியாங். |
| இரண்டாம் ,, | மதிகோ. | மதியோங்கோ. |
| மூன்றாம் ,, | மதிஸே. | மதியோங்ஸே. |
| நான்காம் ,, | மதிகோ, மதிகேலியே. | மதியோங்கோ, மதியோங்கேலியே. |
| ஐந்தாம் ,, | மதிஸே. | மதியோங்ஸே. |
| ஆறாம் ,, | மதிகா. | மதியோங்கா. |
| ஏழாம் ,, | மதிமே, மதிபர் | மதியோங்மே, மதியோம்பர். |
| எட்டாம் ,, | ரீமதி, ஹேமதி. | ரீமதியோ, ஹேமதியோ. |

## 'ஈ' யில் முடியும் சொற்கள்

ஹாதீ=யானை.

| | | | |
|---|---|---|---|
| முதல் வேற்றுமை | | ஹாதீ. | ஹாதீ |
| இரண்டாம் | ,, | ஹாதீகோ. | ஹாதியோங்கோ. |
| மூன்றாம் | ,, | ஹாதீஸே. | ஹாதியோங்ஸே. |
| நான்காம் | ,, | ஹாதீகோ, ஹாதீ கேலியே | ஹாதியோங்கோ, ஹாதியோங்கேலியே |
| ஐந்தாம் | ,, | ஹாதீஸே. | ஹாதீயோங்ஸே. |
| ஆறாம் | ,, | ஹாதீகா. | ஹாதீயோங்கா. |
| ஏழாம் | ,, | ஹாதீமே, ஹாதீ பர். | ஹாதீயோமே, ஹாதியோம்பர். |
| எட்டாம் | ,, | ரேஹாதீ, ஹே ஹாதீ. | ரேஹாதியோ, ஹே ஹாதியோ. |

## 'உ' வில் முடியும் சொற்கள்

கு$^1$ரு=ஆசிரியர்

| | | | |
|---|---|---|---|
| முதல் வேற்றுமை | | கு$^1$ரு. | கு$^1$ரு. |
| இரண்டாம் | ,, | கு$^1$ருகோ. | கு$^1$ருவோங்கோ. |
| மூன்றாம் | ,, | கு$^1$ருஸே. | கு$^1$ருவோங்ஸே. |
| நான்காம் | ,, | கு$^1$ருகோ, குரு கேலியே. | கு$^1$ருவோங்கோ, கு$^1$ருவோங்கேலியே. |
| ஐந்தாம் | ,, | கு$^1$ருஸே. | கு$^1$ருவோன்ஸே. |
| ஆறாம் | ,, | கு$^1$ருகா. | கு$^1$ருவோங்கா |
| ஏழாம் | ,, | கு$^1$ருமே, கு$^1$ரு பர். | கு$^1$ருவோமே, கு$^1$ருவோம்பர். |
| எட்டாம் | ,, | ரேகு$^1$ரு, ஹே கு$^1$ரு$^1$ | ரேகு$^1$ருவோ, ஹே கு$^1$ருவோ. |

## ‘ ஊ ’ வில் முடியும் சொற்கள்

ப$^1$ஹூ=நாட்டுப்பெண்

| | | | |
|---|---|---|---|
| முதல் வேற்றுமை | | ப$^1$ஹூ. | ப$^1$ஹூஏங். |
| இரண்டாம் | ,, | ப$^1$ஹூகோ. | ப$^1$ஹூவோங்கோ. |
| மூன்றும் | ,, | பஹூஸே. | ப$^1$ஹூவோன்ஸே. |
| நான்காம் | ,, | ப$^1$ஹூகோ,ப$^1$ஹூகேலியே | ப$^1$ஹூவோங்கோ. பஹூவோங்கேலியே. |
| ஐந்தாம் | ,, | ப$^1$ஹூஸே. | ப$^1$ஹூவோன்ஸே. |
| ஆறும் | ,, | ப$^1$ஹூகா. | ப$^1$ஹூவோங்கா. |
| ஏழாம் | ,, | ப$^1$ஹூமே, ப$^1$ஹூபர். | ப$^1$ஹூவோமே,ப$^1$ஹூவோம்பர். |
| எட்டாம் | ,, | ரீப$^1$ஹூ,ஹேப$^1$ஹூ. | ரீப$^1$ஹூவோ, ஹே ப$^1$ஹூவோ. |

பிரதிப் பெயர்ச் சொற்களுடன் வேற்றுமை உருபு சேரும்பொழுது அச்சொற்கள் மாறுதல் அடையும். அவைகள் கீழே கொடுக்கப்பட் டிருக்கின்றன.

பிரதிப் பெயர்ச்சொற்களில் இரண்டு சொற்களைக் குறித்து இங்கு விவரமாய் கூறுதல் அவசியம். அவை ‘ஆப்’ ‘ஜோ’ என்பனவாகும்.

‘ஆப்’ என்பதற்கு ‘நீங்கள்’ அல்லது ‘தாங்கள்’ என்று அர்த்தம். இதற்கே ‘தான்’ என்று மற்றொரு அர்த்தம். அதாவது மற்ற பிரதிப் பெயர்ச் சொற்களுக்கு மாறாக இது வரும். உதாரணமாக “மை ஆப் ஜாதா ஹூங்” என்றால் ‘நானே போகிறேன்’ என்று அர்த்தம். அதே விதமாக ‘தும் ஆப் ஜாவோ’ ‘வோ ஆப் ஜாதா ஹை’ என்றும் சொல்லலாம். அப்படிச் சொல்வதற்கு ‘நீயே போ,’

அவனே போகிறான் என்று அர்த்தம். 'ஆப்' என்பது இந்த பிரதிபெயர்ச் சொல்லுக்கு பதிலாக வரும் பொழுது வேற்றுமை உருபு கூடுங்கால் வேறு வித மான மாறுபாடு உண்டாகும். பிரதிபெயர் சொல்லுக் குப் பதிலாக வரும் இச் சொல்லுக்கு ஆங்கிலத்தில் (Reflexive Pronoun) என்று பெயர்.

'எவன்' அல்லது 'யார்' என்பது இரு வகையில் வழங்கும். 'எவன் வருகிறான்' என்று சொன்னால் ஒரு கேள்வியாகும். 'எவன் வருகிறானோ அவன் வீரன்' என்று சொன்னால் 'எவன்' என்பது ஒரு கேள்வி யாகாது. கேள்வியாகிய 'எவன்' என்பதற்கு தான் 'கோன்' என்று சொல்லவேண்டும். மற்றொரு 'எவன்' என்பதற்கு 'ஜோ' என்று சொல்லவேண்டும். இதே விதமாக 'எத்தனை' 'எப்படி' 'எங்கு' முதலியவை யும் கேள்வியாகவும் கேள்வியில்லாமலும் வழங்கும். இவைகளுக்கு முறையே கேள்வியானால் 'கித்னே' 'கைஸே' 'கஹாங்' என்றும், கேள்வி இல்லாவிட் டால் 'ஜித்னே', 'ஜைஸே', 'ஜஹாங்' என்றும் ஹிந்துஸ்தானியில் சொல்ல வேண்டும்.

பிரதிபெயர்ச் சொற்களுடன் எட்டாம் வேற்றுமை உருபுகள் சேரா. பெயர்ச்சொல்லைக் கூறியே ஒருவனை அழைக்க முடியுமே யொழிய பிரதி பெயர்க்களைக் கொண்டு ஒருவரையும் அழைக்க முடியாது. எட்டாம் வேற்றுமை அழைப்பதைக் குறிக்கும் என்று முன் னமே கூறியுள்ளோம். எனவே பிரதிபெயர்ச் சொல் லுக்கு எட்டாம் வேற்றுமை இல்லை.

மைங் = நான். ஹம் = நாம், நாங்கள்.

| | | | |
|---|---|---|---|
| முதல் வேற்றுமை | | மைங். | ஹம். |
| இரண்டாம் | ,, | முஜே, முஜ்கோ. | ஹம்கோ, ஹமேங். |
| மூன்றும் | ,, | முஜ்ஸே | ஹம்ஸே. |
| நான்காம் | ,, | முஜே, முஜ்கோ, மேரேலியே. | ஹமேங், ஹம்கோ, ஹமாரேலியே. |
| ஐந்தாம் | ,, | முஜ்ஸே. | ஹம்ஸே. |
| ஆறும் | ,, | மேரா. | ஹமாரா. |
| ஏழாம் | ,, | முஜ்மே, முஜ்பர். | ஹம்மே, ஹம்பர். |

தும் = நீ. ஆப் = நீங்கள், தாங்கள்.

| | | | |
|---|---|---|---|
| முதல் வேற்றுமை | | தும். | ஆப். |
| இரண்டாம் | ,, | தும்கோ, தும்ஹேங். | ஆப்கோ. |
| மூன்றும் | ,, | தும்ஸே. | ஆப்ஸே. |
| நான்காம் | ,, | தும்கோ, தும்ஹேங், தும்ஹாரேலியே. | ஆப்கோ, ஆப்கேலியே. |
| ஐந்தாம் | ,, | தும்ஸே. | ஆப்ஸே. |
| ஆறும் | ,, | தும்ஹாரா. | ஆப்கா. |
| ஏழாம் | ,, | தும்மே, தும்பர். | ஆப்மே, ஆப்பர். |

வோ = அவன், அவள், அது. வே = அவர்கள், அவைகள்.

| | | | |
|---|---|---|---|
| முதல் வேற்றுமை | | வோ. | வே. |
| இரண்டாம் | ,, | உஸ்கோ, உஸே. | உன்கோ, உன்ஹேங். |
| மூன்றும் | ,, | உஸ்ஸே. | உன்ஸே. |

| | | |
|---|---|---|
| நான்காம் ,, | உஸ்கோ, உஸே, உஸ்கேலியே. | உன்கோ, உன்ஹேங், உன்கேலியே. |
| ஐந்தாம் ,, | உஸ்ஸே. | உன்ஸே. |
| ஆரும் ,, | உஸ்கா. | உன்கா. |
| ஏழாம் ,, | உஸ்மே, உஸ்பர். | உன்மே, உம்பர். |

**கோன் = யார்**

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| முதல்வேற்றுமை | கோன். | கோன். |
| இரண்டாம் ,, | கிஸ்கோ, கிஸே. | கின்கோ, கின்ஹேங் |
| மூன்ரும் ,, | கிஸ்ஸே. | கின்ஸே |
| நான்காம் ,, | கிஸ்கோ, கிஸே, கிஸ்கேலியே. | கின்கோ, கின்ஹேங், கின்கேலியே. |
| ஐந்தாம் ,, | கிஸ்ஸே. | கின்ஸே. |
| ஆரும் ,, | கிஸ்கா. | கின்கா. |
| ஏழாம் ,, | கிஸ்மே, கிஸ்பர். | கின்மே, கின்பர். |

க்யா என்பது முதல் வேற்றுமைத்தவிர, மற்ற வேற்றுமைகளில் 'கோன்' போலவே இருக்கும்.

ஜோ = { எவன் அல்லது எது } கேள்வியல்லாதது.

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| முதல்வேற்றுமை | ஜோ. | ஜோ. |
| இரண்டாம் ,, | ஜிஸ்கோ, ஜிஸே, | ஜின்கோ, ஜின்ஹேங். |

| | | |
|---|---|---|
| மூன்ரும் ,, | ஜிஸ்ஸே. | ஜின்ஸே. |
| நான்காம் ,, | ஜிஸ்கோ, ஜிஸே, ஜிஸ்கேலியே. | ஜின்கோ, ஜின்ஹேங், ஜின்கேலியே. |
| ஐந்தாம் ,, | ஜிஸ்ஸே. | ஜின்ஸே. |
| ஆரும் ,, | ஜிஸ்கா. | ஜின்கா. |
| ஏழாம் ,, | ஜிஸ்மே, ஜிஸ்பர். | ஜின்மே. ஜின்பர் |

**யே=இவன், இவள், இது, இவைகள், இவர்கள்**

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| முதல்வேற்றுமை | யே | யே |
| இரண்டாம் ,, | இஸ்கோ, இஸே. | இன்கோ, இன்ஹேங். |
| மூன்ரும் ,, | இஸ்ஸே. | இன்ஸே. |
| நான்காம் ,, | இஸ்கோ, இஸே, இஸ்கேலியே | இன்கோ, இன்ஹேங், இன்கேலியே. |
| ஐந்தாம் ,, | இஸ்ஸே. | இன்ஸே. |
| ஆரும் ,, | இஸ்கா | இன்கா. |
| ஏழாம் ,, | இஸ்மே, இஸ்பர். | இன்மே, இன்பர். |

பிரதிப் பெயர்ச்சொல்லுக்கு மாருக வரும் 'ஆப்' இதன் உருவம் ஒருமையிலும் பன்மையிலும் ஒரே விதமாக இருக்கும்.

| | |
|---|---|
| முதல் வேற்றுமை | ஆப். |
| இரண்டாம் ,, | அப்னேகோ. |
| மூன்ரும் ,, | அப்னேஸே. |
| நான்காம் ,, | அப்னேகோ, அப்னேலியே. |

ஐந்தாம் வேற்றுமை அப்னேஸே.
ஆறும் ,, அப்னு.
ஏழாம் ,, அப்னேமே, அப்னேபர்.

இந்த அர்த்தத்தில் 'ஆப்' என்பதற்கு பதிலாக உருதுவில் 'குத்[1]' என்று சொல்வார்கள்.

வேற்றுமை உருபுகளில் ஆறும் வேற்றுமை உருபாகிய 'கா' சில வேளைகளில் 'கே' என்றும், சில வேளைகளில் 'கீ' என்றும் மாறும் என்று முன் கூறியுள்ளோம். இந்த 'கா'வுக்கு 'உடைய' என்று அர்த்தம். 'கா'வுக்கு பிறகு வரும் சொல் ஆண்பால் ஒருமையாய் உருபுகள் கூடாததாய் இருந்தால் 'கா' அப்படியே இருக்கும். பிறகு வரும் சொல் உருபு கூடிய ஆண் பால் ஒருமையாய் இருந்தாலும், உருபு கூடியோ கூடா மலோ, ஆண்பால் பன்மையாய் இருந்தாலும் 'கா' 'கே' என்று மாறும். 'கா' வுக்கு பிறகு வரும் சொல் பெண்பாலாய் இருந்தால், அது ஒருமையானாலும் பன்மையானாலும் வேற்றுமை உருபு கூடியதாயிருந்தாலும் கூடாததாய் இருந்தாலும் 'க' 'கீ' என்று மாறும்.

உதாரணம் :—

ராம்கா பா[1]யீ.
ராம்கே பா[1]யீகோ.
ராம்கே பா[1]யீ.
ராம்கே பா[1]யியோங்கோ.
ராம்கீ ப[1]ஹன்.

மேற்கண்ட வாக்கியங்களில் முதல் உதாரணத்தில் 'கா'வுக்குப் பிறகு வருவது 'பா[1]யீ' இது ஆண்பால் ஒருமையாய் இருப்பதால் 'கா' மாறுமல் அப்படியே

நிற்கிறது. 'ராம்' என்பதற்கு பதிலாக 'ஸீதா' என்றா லும் 'ஸீதா கா பா$^1$யீ' என்றுதான் இருக்கும். இரண் டாவது உதாரணத்தில் 'பா$^1$யீ' என்பது ஆண்பால் ஒருமையாயினும் அதனுடன் 'கோ' என்ற வேற்றுமை உருபு சேர்ந்திருப்பதால் 'கா' 'கே' என்று மாறி விட்டது.

மூன்றாவது உதாரணத்தில், 'பா$^1$யீ' என்பது பன்மையானதால் 'ராம்' உடன் சேரவேண்டிய 'கா' 'கே' என்று மாறி விட்டது. எண்களைப்பற்றி மேலே எழுதிய பொழுது பல ஆண்பால் சொற்கள் ஒருமை பன்மை இரண்டிலும் ஒரே விதமாய் இருக்குமென்று கூறியுள்ளோம். இந்த மூன்றாவது உதாரணம்போன்ற இடங்களில் 'கே' இருப்பதைக்கண்டு பிறகு வரும் சொல் ஆண்பால் பன்மை என்று அறிய வேண்டும்.

ஹிந்துஸ்தானியிலும் மரியாதையைக் குறிக்க பன்மை உபயோகிப்பது வழக்கம். எனவே 'ராம னுடைய தகப்பனார்' என்பதற்கு 'தகப்பனார்' என்ற சொல்லுக்கு மரியாதைக் குறிப்பிடவேண்டுமானால் 'ராம் கே பா$^1$ப்' என்று சொல்லவேண்டும். இதற்கு 'ராமனுடைய பல தகப்பனார்கள்' என்று அர்த்தமல்ல. 'ராம் கா பா$^1$ப்' என்றால் 'ராமனுடைய தகப்பன்' என்றுதான் அர்த்தமாகும். 'தகப்பன்' என்ற சொல் லுக்கு மரியாதை விளங்காது.

நான்காம் உதாரணத்தில், 'உடைய' வுக்குப் பிறகு வரும் சொல் ஆண்பால் பன்மையாயிருப்பதோடு வேற் றுமை உருபுடன் கூடி இருப்பதால் 'கா' 'கே' என்று மாறி இருக்கிறது.

ஐந்தாம் உதாரணத்தில், 'ப[1]ஹன்' பெண்பாலானதால் 'கா' 'கீ' என்று மாறி இருக்கிறது. இந்த ப[1]ஹன் ஒருமையானாலும், பன்மையானாலும், வேற்றுமை உருபுடன் கூடினாலும் கூடா விட்டாலும் 'கா' 'கீ' என்றுதான் மாறும்.

ஹிந்துஸ்தானியில், பெயர் உரிச்சொற்களில் (adjectives) பல 'ஆ' வில் முடிவும். அவைகள் வேற்றுமை உருபு இல்லாத ஆண்பால் ஒருமையின் குணத்தைக் காட்டும்பொழுது மட்டுமே அந்த 'ஆ' என்ற முடிவை பெற்று நிற்கும். எந்த பெயர்ச்சொல்லின் குணத்தை அவைகள் கூறுகின்றனவோ, அந்தப் பெயர்ச்சொல் வேற்றுமை உருபு கூடிய ஆண்பால் ஒருமையாகவோ அல்லது உருபு கூடியோ அல்லது கூடாமலோ இருக்கும் ஆண்பால் பன்மையாகவோ இருந்தால் அப்பெயர் உரிச்சொற்களின் 'ஆ' என்ற முடிவு 'ஏ' என்று மாறிவிடும். பெண்பால் பெயர்ச்சொற்களின் குணத்தைக் கூறும்பொழுது அப்பெயர் உரிச் சொற்களின் முடிவு 'ஈ' என்று மாறும்.

காலா காக[1]ஜ்z=கருப்புக் காயிதம்.

காலே காக[1]ஜ்zகோ=கருப்புக் காயிதத்தை.

காலே காக[1]ஜ்z=கருப்புக் காயிதங்கள்.

காலே காக[1]ஜோzங்கோ=கருப்புக் காகிதங்களை.

காலீ கிதாப்[1]=கருப்புப் புத்தகம்.

மேற்கூறிய ஐந்து உதாரணங்களிலும் 'காலா' என்ற பெயர் உரிச்சொல் காக[1]ஜ்z, கிதாப்[1], என்ற பெயர்ச் சொற்களின் குணத்தைக் குறிக்கிறது. முதல் உதாரணத்தில் 'காக[1]ஜ்z[1]' வேற்றுமையற்ற ஆண்பால்

ஒருமையாகையால் 'காலா' அப்படியே நிற்கிறது. இரண்டாவது உதாரணத்திலும் 'காக¹ஜ்z¹ ஒருமையே யாகினும் அதனுடன் வேற்றுமையுருபு சேர்ந்திருக்கிறது. ஆகையால் 'காலா' 'காலே' என்று மாறி விட்டது. மூன்றும் உதாரணத்தில் பெயர்ச்சொல் ஆண்பால் பன்மையானதாலும், நான்காம் உதாரணத்தில் வேற்றுமை உருபு கூடிய ஆண்பால் பன்மையானதாலும் 'காலா' 'காலே' என்று மாறி இருக்கிறது. ஐந்தாம் உதாரணத்தில் 'கிதாப்¹' பெண்பால் ஆனதால் 'காலா' காலீ என்று மாறி இருக்கிறது. இந்த 'கிதாப்¹' ஒருமையானாலும், பன்மை யானாலும் வேற்றுமை உருபு சேர்ந்தாலும் சேராவிட்டாலும் 'கா' 'கீ' என்றே மாறும்.

வோ, யே, கோன், ஜோ போன்ற பிரதி பெயர்ச்சொற்கள் பெயர் உரிச் சொற்களாகவும் இருக்கின்றன. உதாரணமாக 'வோ ஜாதா ஹை' என்ற இடத்தில் 'வோ' பிரதிப் பெயர்ச் சொல். 'ஆனல் வோ லள்கா ஜாதா ஹை' என்றால் அங்கு 'வோ' பிரதிப் பெயர்ச்சொல் ஆகாது. இது 'அந்தப் பையன்' என்ற அர்த்தம் கொண்டது. 'பையன்' என்ற சொல்லின் குணத்தைக் குறிப்பிடுகிறது. இது பெயர் உரிச்சொல். இதற்குப் பன்மை வே.

பெயர் உரிச்சொல்லாய் இருக்கும்பொழுது வோ, யே கோன், ஜோ என்பன, வேற்றுமை உருபு இல்லாத ஒருமைச் சொல்லின் (ஆண்பாலானாலும் சரி, பெண்பாலானாலும் சரி) குணத்தைக் கூறினல் மாறாமல் அப்படியே நிற்கும். வேற்றுமை உருபுடன் கூடிய ஒருமைப் பெயர்ச் சொற்களின் குணத்தைக் கூறினல்

அவைகள் முறையே உஸ், இஸ், கிஸ், ஜிஸ் என்று மாறுகின்றன.

1. வோ க$^1$ர் ப$^1$டா$^1$ ஹை=அந்த வீடு பெரியது.

உஸ் க$^1$ர்மே ராம் ஹை=அந்த வீட்டில் ராமன் இருக்கிறான்.

2. யே லள்கீ அச்சீ ஹை=இந்தப் பெண் நல்லவள்.

இஸ் லள்கீ கா நாம் ரமா ஹை=இந்தப் பெண்ணின் பெயர் ரமா.

3. கோன் ஆத்$^1$மீ க$^1$யா?=எந்த மனிதன் போனான்?

கிஸ் ஆத்$^1$மீ கோ பே$^1$ஜா=எந்த மனிதனை அனுப்பினாய்?

4. ஜோ ஆத்$^1$மீ ஜாதா ஹை வோ லாயகா$^1$=எவன் போகிறானோ அவன் கொண்டுவருவான்.

ஜிஸ் ஆத்$^1$மீ கோ பே$^1$ ஜா வோ லாயகா$^1$=எவனை அனுப்பினாயோ அவன் கொண்டு வருவான்.

மேற்கண்ட நான்கு உதாரணங்களில் முதல் வாக்கியங்களில் பெயர்ச்சொல்லுடன் வேற்றுமை உருபு இல்லை. இரண்டாம் வாக்கியங்களில் உருபு இருக்கிறது. ஆகையால், உரிச் சொற்கள் இரண்டாம் வாக்கியங்களில் மாறி இருக்கின்றன.

## எதிர்காலம்

எதிர் காலத்தில் வினைச்சொற்கள் அடையும் மாறு பாடுகளை விளக்க நான்கு வினைச்சொற்களின் மாறு பாடுகள் கொடுக்கப்படுகின்றன.

மற்ற வினைச் சொற்களும் இப்படியே மாறும் என்று அறியவும்.

### கர் = செய்

#### ஆண்பால்

மைங் கரூங்கா[1] = நான் செய்வேன்.

ஹம் கரேங் கே[1] = நாம் அல்லது நாங்கள் செய்வோம்.

தும் கரோகே[1] = நீ செய்வாய்.

ஆப் கரேங் கே[1] = தாங்கள் அல்லது நீங்கள் செய்வீர்கள்.

வோ கரேகா[1] = அவன் செய்வான், அது செய்யும்.

வே கரேங்கே[1] = அவைகள் செய்யும், அவர்கள் செய்வார்கள்.

#### பெண்பால்

மைங் கரூங்கீ[1] = நான் செய்வேன்.

ஹம் கரேங்கீ[1] = நாம் அல்லது நாங்கள் செய்வோம்

தும் கரோகீ[1] = நீ செய்வாய்.

அப் கரேங்கீ[1] = நீங்கள் அல்லது தாங்கள் செய்வீர்கள்.

வோ கரேகீ[1] = அவள் செய்வாள், அது செய்யும்

வே கரேங்கே[1] = அவர்கள் செய்வார்கள் அவைகள் செய்யும்.

---

## லா = கொண்டுவா.

ஆண்பால்

மைங் லாவூங் கா[1] = நான் கொண்டு வருவேன்.

ஹம் லாயேங்கே[1]
ஹம் லாயங்கே[1]
ஹம் லாவேங்கே[1]
} = நாம் அல்லது நாங்கள் கொண்டு வருவோம்.

தும் லாவோ கே[1] = நீ கொண்டு வருவாய்.

ஆப் லாயேங்கே[1]
ஆப் லாயங்கே[1]
ஆப் லாவேங்கே[1]
} = நீங்கள் அல்லது தாங்கள் கொண்டு வருவீர்கள்.

வோ லாயேகா[1]
வோ லாயகா[1]
வோ லாவேகா[1]
} = அவன் கொண்டு வருவான், அது கொண்டு வரும்.

வே லாயேங்கே[1]
வே லாயங்கே[1]
வே லாவேங்கே[1]
} = அவர்கள் கொண்டு வருவார்கள், அவைகள் கொண்டு வரும்.

பெண்பால்

மைங் லாவூங்கி[1] = நான் கொண்டு வருவேன்.

ஹம் லாயேங்கி[1]
ஹம் லாயங்கி[1]
ஹம் லாவேங்கி[1]
} = நாம் அல்லது நாங்கள் கொண்டு வருவோம்.

தும் லா வோ கி[1] = நீ கொண்டு வருவாய்.

ஆப் லாயேங்கி[1]
ஆப் லாயங்கி[1]
ஆப் லாவேங்கி[1]
} = நீங்கள் அல்லது தாங்கள் கொண்டு வருவீர்கள்.

| | |
|---|---|
| வோ லாயேகீ[1]<br>வோ லாமகீ[1]<br>வோ லாவேகீ[1] | =அவள் கொண்டு வருவாள், அது கொண்டு வரும். |
| வே லாயேங்கீ[1]<br>வே லாயங்கீ[1]<br>வே லாவேங்கீ[1] | =அவர்கள் கொண்டு வருவார்கள், அவைகள் கொண்டு வரும். |

## தே[1]=கொடு

### ஆண்பால்

மைங் தூ[1]ங்கா[1]=நான் கொடுப்பேன்.

ஹம் தே[1]ங்கே[1]=நாம் அல்லது நாங்கள் கொடுப்போம்.

தும் தோ[1] கே[1]=நீ கொடுப்பாய்.

ஆப் தே[1]ங்கே[1]=நீங்கள் அல்லது தாங்கள் கொடுப்பீர்கள்.

வோ தே[1] கா[1]=அவன் கொடுப்பான், அது கொடுக்கும்.

வே தே[1]ங்கே[1]=அவர்கள் கொடுப்பார்கள், அவைகள் கொடுக்கும்.

### பெண்பால்

மைங் தூ[1]ங்கீ=நான் கொடுப்பேன்.

ஹம் தே[1]ங்கீ[1]=நாம் அல்லது நாங்கள் கொடுப்போம்.

தும் தோ[1]கீ[1]=நீ கொடுப்பாய்.

ஆப் தே[1]ங்கீ[1]=நீங்கள் அல்லது தாங்கள் கொடுப்பீர்கள்.

வோ தே[1]கீ[1] = அவள் கொடுப்பாள், அது கொடுக்கும்.

வே தே[1]ங்கீ[1] = அவர்கள் கொடுப்பார்கள், அவைகள் கொடுக்கும்.

---

## ஹோ = ஆக அல்லது இருக்க

ஆண்பால்

மைங் ஹூங்கா[1] = நான் இருப்பேன் அல்லது நான் ஆவேன்.

ஹம் ஹோங்கே[1] = நாம் அல்லது நாங்கள் இருப்போம் அல்லது ஆவோம்.

தும் ஹோ கே[1] = நீ இருப்பாய் அல்லது ஆவாய்.

ஆப் ஹோங் கே[1] = நீங்கள் அல்லது தாங்கள் இருப்பீர்கள் அல்லது ஆவீர்கள்.

வோ ஹோகா[1] = அவன் இருப்பான் அல்லது ஆவான்; அது இருக்கும் அல்லது ஆகும்.

வே ஹோங்கே[1] = அவைகள் இருக்கும் அல்லது ஆகும்; அவர்கள் இருப்பார்கள் அல்லது ஆவார்கள்.

பெண்பால்

மைங் ஹூங் கீ[1] = நான் இருப்பேன் அல்லது ஆவேன்.

ஹம் ஹோங் கீ[1] = நாம் அல்லது நாங்கள் இருப்போம் அல்லது ஆவோம்.

தும் ஹோ கீ[1] = நீ இருப்பாய் அல்லது ஆவாய்.

ஆப் ஹோங்கீ[1] = நீங்கள் அல்லது தாங்கள் இருப்பீர்கள் அல்லது ஆவீர்கள்.

வோ ஹோ கீ[1] = அவன் இருப்பான் அல்லது ஆவான்.

வே ஹோங் கீ[1] = அவர்கள் இருப்பார்கள் அல்லது ஆவார்கள்; அவைகள் இருக்கும் அல்லது ஆகும்.

இறந்த காலம்

இறந்த காலத்தில் வினைச்சொற்கள் அடையும் மாறுபாடுகளை விளக்க சில வினைச்சொற்களின் மாறுபாடுகளை இங்கு கொடுக்கிறோம். மற்ற வினைச்சொற்களும் இப்படியே மாறுதலடையும் என்று அறியவும்.

பை[1]ட் = உட்காரு

ஆண்பால்

மைங் பை[1]டா—நான் உட்கார்ந்தேன்.

ஹம் பை[1]டே—நாம் அல்லது நாங்கள் உட்கார்ந்தோம்.

தும் பை[1]டே = நீ உட்கார்ந்தாய்.

ஆப் பை[1] டே = நீங்கள் அல்லது தாங்கள் உட்கார்ந்தீர்கள்.

வோ பை[1]டா = அவன் உட்கார்ந்தான். அது உட்கார்ந்தது.

வே பை[1]டே = அவர்கள் உட்கார்ந்தார்கள். அவைகள் உட்கார்ந்தன.

பெண்பால்

மைங் பை[1]டீ=நான் உட்கார்ந்தேன்.

ஹம் பை[1]டீங்=நாம் அல்லது நாங்கள் உட்கார்ந்தோம்.

தும் பை[1]டீங்=நீ உட்கார்ந்தாய்.

ஆப் பை[1] டீங்=நீங்கள் அல்லது தாங்கள் உட்கார்ந்தீர்கள்.

வோ பை[1] டீ=அவள் உட்கார்ந்தாள், அது உட்கார்ந்தது.

வே பை[1]டீங்=அவைகள் உட்கார்ந்தன, அவர்கள் உட்கார்ந்தார்கள்.

ஆ=வா

ஆண்பால்

மைங் ஆயா=நான் வந்தேன்.

ஹம் ஆயே=நாம் அல்லது நாங்கள் வந்தோம்.

தும் ஆயே=நீ வந்தாய்.

ஆப் ஆயே=நீங்கள் அல்லது தாங்கள் வந்தீர்கள்.

வோ ஆயா=அவன் வந்தான், அது வந்தது.

வே ஆயே=அவர்கள் வந்தார்கள், அவைகள் வந்தன.

பெண்பால்

மைங் ஆயீ=நான் வந்தேன்.

ஹம் ஆயீங்=நாம் அல்லது நாங்கள் வந்தோம்.

தும் ஆயீங்=நீ வந்தாய்.

ஆப் ஆயிங்=நீங்கள் அல்லது தாங்கள் வந்தீர்கள்.

வோ ஆயீ=அவள் வந்தாள், அது வந்தது.

வே ஆயீங்=அவர்கள் வந்தார்கள், அவைகள் வந்தன.

## ஜா=போ

### ஆண்பால்

மைங் க[1]யா=நான் போனேன்.

ஹம் க[1]யே=நாம் அல்லது நாங்கள் போனோம்.

தும் க[1]யே=நீ போனாய்.

ஆப் க[1]யே=நீங்கள் அல்லது தாங்கள் போனீர்கள்.

வோ க[1]யா=அவன் போனான், அதுபோயிற்று.

வே க[1]யே=அவர்கள் போனார்கள், அவைகள் போயின.

### பெண்பால்

மைங் க[1]யீ=நான் போனேன்.

ஹம் க[1]யீங்=நாங்கள் போனோம்.

தும் க[1]யீங்=நீ போனாய்.

ஆப் க[1]யீங்=நீங்கள் அல்லது தாங்கள் போனீர்கள்.

வோ க[1]யீ=அவள் போனாள், அது போயிற்று.

வே கயீங்=அவைகள் போயின, அவர்கள் போனார்கள்.

### ஹோ = இருக்க

ஆண்பால்

மைங் தா = நான் இருந்தேன்.

ஹம் தே = நாம் அல்லது நாங்கள் இருந்தோம்.

தும் தே = நீ இருந்தாய்.

ஆப் தே = நீங்கள் அல்லது தாங்கள் இருந்தீர்கள்.

வோ தா = அவன் இருந்தான், அது இருந்தது.

வே தே = அவர்கள் இருந்தார்கள், அவைகள் இருந்தன.

பெண்பால்

மைங் தீ = நான் இருந்தேன்.

ஹம் தீங் = நாம் அல்லது நாங்கள் இருந்தோம்.

தும் தீங் = நீ இருந்தாய்.

ஆப் தீங் = நீங்கள் அல்லது தாங்கள் இருந்தீர்கள்.

வோ தீ = அவள் இருந்தாள், அது இருந்தது.

வே தீங் = அவர்கள் இருந்தார்கள். அவைகள் இருந்தன.

### ஹோ = ஆக

ஆண்பால்

மைங் ஹுவா = நான் ஆனேன்.

ஹம் ஹுவே = நாம் அல்லது நாங்கள் ஆனோம்.

தும் ஹுவே = நீ ஆனாய்.

ஆப் ஹுவே = நீங்கள் அல்லது தாங்கள் ஆனீர்கள்.

வோ ஹு ஆ வா = அவன் ஆனான், அது ஆயிற்று.

வே ஹு ஆ வே = அவர்கள் ஆனார்கள், அவை ஆயின.

பெண்பால்

மை ஹு ஆ யீ = நான் ஆனேன்.

ஹம் ஹு ஆ யீங் = நாம் அல்லது நாங்கள் ஆனோம்.

தும் ஹு ஆ யீங் = நீ ஆனாய்.

ஆப் ஹு ஆ யீங் = நீங்கள் அல்லது தாங்கள் ஆனீர்கள்.

வோ ஹு ஆ யீ = அவள் ஆனாள், அது ஆயிற்று.

வே ஹு ஆ யீங் = அவைகள் ஆயின், அவர்கள் ஆனார்கள்.

நிகழ்காலமுற்று

'வந்திருக்கிறான்' 'போயிருக்கிறான்' என்ற சொற்கள் சமீபத்தில் முற்றுப் பெற்ற நிகழ்காலமே யாகும். இதை ஆங்கிலத்தில் Persent perfect tense என்பார்கள், ஹிந்தியில் ஸமீபத்தில் நிகழ்ந்த 'இறந்த காலம்' என்று அர்த்தம் கொண்ட 'ஆஸன்னபூ[1]த்கால்' என்பார்கள். இக்காலத்தில் வினைச்சொற்களின் இறந்த கால உருவத்துடன் 'ஹோ' என்ற வினைப்பகுதியின் நிகழ்கால உருவம் சேரும்.

உதாரணம் :—

ஜா = போ

ஆண்பால்

மைங் க[1]யா ஹூங் = நான் போய் இருக்கிறேன்.

ஹம் க¹யே ஹைங்=நாம் அல்லது நாங்கள் போய் இருக்கிறோம்.

தும் க¹யே ஹோ=நீ போய் இருக்கிறாய்.

ஆப் க¹யே ஹைங்=நீங்கள் அல்லது தாங்கள் போய்இருக்கிறீர்கள்.

வோ க¹யா ஹை=அவன் போய் இருக்கிறான்.

வே க¹யே ஹைங்=அவர்கள் போய் இருக்கிறார் கள், அவைகள் போய் இருக்கின்றன.

இறந்தகால முற்று

'வந்திருந்தான்' 'போயிருந்தேன்' முதலியன இறந்த காலத்தில் முற்றுப் பெற்றவை. இதை ஆங்கிலத்தில் past perfect Tense என்பார்கள். இக்காலத்தில் வினைச்சொற்களுடைய இறந்த காலத்துடன் 'ஹோ' என்ற வினைப் பகுதியின் இறந்த கால உருவம் சேர்க்கப்படும்.

ஆண்பால்

மைங் க¹யா தா=நான் போயிருந்தேன்.

ஹம் க¹யே தே=நாம் அல்லது நாங்கள் போய் இருந்தோம்.

தும் க¹யே தே=நீ போய் இருந்தாய்.

ஆப் க¹யே தே=நீங்கள் அல்லது தாங்கள் போய் இருந்தீர்கள்.

வோ க¹யா தா=அவன் போய் இருந்தான், அது போய் இருந்தது.

வே க¹யே தே=அவர்கள் போய் இருந்தார்கள், அவைகள் போய் இருந்தன.

பெண்பால்

மைங் க[1]யீ தீ=நான் போய் இருந்தேன்.

ஹம் க[1]யீ தீங்=நாம் அல்லது நாங்கள் போய் இருந்தோம்.

தும் க[1]யீ தீங்=நீ போயிருந்தாய்.

ஆப் க[1]யீ தீங்=நீங்கள் அல்லது தாங்கள் போய் இருந்திர்கள்.

வோ க[1]யீ தீ=அவள் போய் இருந்தாள், அது போய் இருந்தது.

வே க[1] யீ தீங்=அவர்கள் போய் இருந்தார்கள், அவைபோய் இருந்தன.

## சந்தேகத்தைக் குறிக்கும் இறந்தகால வினைகள்

'அவன் போய் இருப்பான்' 'நான் போய் இருப்பேன்' முதலியன சந்தேகத்தைக் குறிக்கும் இறந்த கால வினைகள். இதை ஆங்கிலத்தில் Doubtful past Tense என்பார்கள். இதில் வினையின் இறந்த காலத்துடன் 'ஹோ' என்ற வினைப்பகுதியின் எதிர்கால உருவம்சேர்க்கப்படும்.

ஆண்பால்

மைங் க[1]யா ஹூங்கா[1]=நான் போய் இருப்பேன்.

ஹம் க[1]யே ஹோங்கே[1]=நாம் அல்லது நாங்கள் போய் இருப்போம்.

தும் க[1]யே ஹோகே=நீ[1] போய் இருப்பாய்.

ஆப் க$^1$யே ஹோங்கே$^1$=நீங்கள் அல்லது தாங்கள் போய் இருப்பீர்கள்.

வோ க$^1$யா ஹோகா$^1$=அவன் போய் இருப்பான், அது போய் இருக்கும்.

வே க$^1$யே ஹோங்கே$^1$=அவர்கள் போய் இருப்பார்கள், அவைகள் போய் இருக்கும்.

பெண்பால்

மைங் க$^1$யீ ஹூங்கீ$^1$=நான் போய் இருப்பேன்.

ஹம் க$^1$யீ ஹோங்கீ$^1$=நாம் அல்லது நாங்கள் போய் இருப்போம்.

தும் க$^1$யீ ஹோகீ$^1$=நீ போய் இருப்பாய்.

ஆப் க$^1$யீ ஹோங்கீ$^1$=நீங்கள் அல்லது தாங்கள் போய் இருப்பீர்கள்.

வோ க$^1$யீ ஹோகீ$^1$=அவள் போய் இருப்பாள் அது போய் இருக்கும்.

வே க$^1$யீ ஹோங்கீ$^1$=அவர்கள் போய் இருப்பார்கள், அவைகள் போய் இருக்கும்.

முற்றுப்பெறாத இறந்த காலம்

'நான் போய்க்கொண்டு இருந்தேன்' 'அவன் போய்க்கொண்டு இருந்தான்' முதலியன முற்றுப்பெறாத இறந்த கால வினைகள். இதை ஆங்கிலத்தில் past imperfect Tense என்பார்கள். நிகழ்கால வினைச் சொற்களில் இருக்கும் 'ஹோ' என்ற வினைச் சொல்லின் நிகழ்கால உருவத்தை நீக்கி அதனுடைய இறந்த கால உருவத்தைச் சேர்ப்பதால் இந்த முற்றுப்பெறாத இறந்த காலமாகும்.

ஆண்பால்

மைங் ஜாதா தா=நான் போய்க்கொண்டிருந்தேன்.

ஹம் ஜாதே தே=நாம் அல்லது நாங்கள் போய்க்கொண்டு இருந்தோம்.

தும் ஜாதே தே=நீ போய்க்கொண்டு இருந்தாய்.

ஆப் ஜாதே தே=நீங்கள் அல்லது தாங்கள் போய்க்கொண்டு இருந்தீர்கள்.

வோ ஜாதா தா=அவன் போய்க்கொண்டு இருந்தான், அது போய்க்கொண்டு இருந்தது.

வே ஜாதே தே=அவர்கள் போய்க்கொண்டு இருந்தார்கள், அவைகள் போய்க்கொண்டு இருந்தன.

பெண்பால்

மைங் ஜாதீ தீ=நான் போய்க்கொண்டு இருந்தேன்.

ஹம் ஜாதீ தீங்=நாம் அல்லது நாங்கள் போய்க்கொண்டு இருந்தோம்.

தும் ஜாதீ தீங்=நீ போய்க்கொண்டு இருந்தாய்.

ஆப் ஜாதீ தீங்=நீங்கள் அல்லது தாங்கள் போய்க்கொண்டு இருந்தீர்கள்.

வோ ஜாதீ தீ=அவள் போய்க்கொண்டு இருந்தாள், அது போய்க்கொண்டு இருந்தன.

வே ஜாதீ தீங்=அவர்கள் போய்க்கொண்டிருந்தார்கள், அவைகள் போய்க்கொண்டு இருந்தன.

## நிபந்தனையைக் குறிக்கும் இறந்த காலம்

'பணம் கிடைத்தால் அவன் போய் இருப்பான்' என்பதற்கும், 'அவன் போய் இருப்பான்' என்பதற்கும் பேதம் உண்டு. முதல் வாக்கியத்தில் 'பணம் கிடைத்ததா' என்பதில் தான் சந்தேகம். அது கிடைத்திருந்தால் போய் இருப்பான். அதாவது போனானா இல்லையா என்பது பணம் கிடைத்ததா இல்லையா என்பதைத் தழுவி இருக்கும். 'கிடைத்திருந்தால் போய் இருப்பான்' என்பது நிபந்தனை (Condition) யைக் குறிக்கும். இரண்டாம் வாக்கியத்தில் (வெறும் 'போய் இருப்பான்' என்பதில்) போனானா இல்லையா என்பதே சந்தேகம். ஹிந்துஸ்தானியில் நிபந்தனையைக் குறிப்பிடும் இறந்த காலத்தின் உருவம் வேறாகவும், சந்தேகத்தைக் குறிக்கும் இறந்த காலத்தின் உருவம் வேறாகவும் இருக்கும். சந்தேகத்தைக் குறிக்கும் இறந்த காலத்தைப்பற்றி மேலே கூறி ஆய்விட்டது. இப்பொழுது நிபந்தனையைக் குறிக்கும் இறந்த காலத்தை விளக்குகிறோம். இதை ஆங்கிலத்தில் Conditional past Tense என்பார்கள். இதில் நிகழ்கால வினைகளுடன் வரும் 'ஹோ' என்ற வினைப் பகுதியின் நிகழ்கால உருவங்களை நீக்கிவிட வேண்டும்.

ஆண்பால்

மைங் ஜாதா=நான் போய் இருப்பேன்.

ஹம் ஜாதே=நாம் அல்லது நாங்கள் போய் இருப்போம்.

தும் ஜாதே=நீ போய் இருப்பாய்.

ஆப் ஜாதே=நீங்கள் அல்லது தாங்கள் போய் இருப்பீர்கள்.

வோ ஜாதா=அவன் போய் இருப்பான், அது போய் இருக்கும்.

வே ஜாதே=அவர்கள் போய் இருப்பார்கள், அவைகள் போய் இருக்கும்.

பெண்பால்

மைங் ஜாதீ=நான் போய் இருப்பேன்.

ஹம் ஜாதீங்=நாம் அல்லது நாங்கள் போய் இருப்போம்.

தும் ஜாதீங்=நீ போய் இருப்பாய்.

ஆப் ஜாதீங்=நீங்கள் அல்லது தாங்கள் போய் இருப்பீர்கள்.

வோ ஜாதீ=அவள் போய் இருப்பாள், அது போய் இருக்கும்.

வே ஜாதீங்=அவர்கள் போய் இருப்பார்கள், அவைகள் போய் இருக்கும்.

இறந்த கால வினைச்சொற்களைக் குறித்து கூறுகையில், இதுவரை நாம் செயப்படுபொருள் குன்றிய வினைகளையே உதாரணமாகக் கொடுத்து வந்ததை நேயர்கள் கவனிக்க வேண்டும். இதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. இதைக் குறித்து விளக்குவதற்கு முன் ஏவல் வினைச் சொற்களையும், நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் உள்ள சில விசேஷங்களையும் விவரிப்போம்.

ஏவல் சொல்லாவது கட்டளையிடுதல். நாம், நீ, நீங்கள் அல்லது தாங்கள் என்பதை எழுவாயாகக் கொண்டு தான் கட்டளை இடக்கூடும். 'நீ' என்பதற்கு

தும்' என்றும், 'நீங்கள்' அல்லது 'தாங்கள்' என்பதற்கு 'ஆப்' என்றும் கூறியுள்ளோம். மரியாதை இல்லாமல் நாம் யாரைத் தமிழில் 'நீ' என்கிறோமோ அவர்களுக்கு 'தும்' என்று சொல்லவேண்டும்; அப்படிப்பட்ட பலருக்கு 'தும் லோக்[1]' என்று சொல்ல வேண்டும். 'ஆப்' என்பது மரியாதைச் சொல். மரியாதையுடன் நாம யாரைத் தமிழில் 'நீங்கள்' அல்லது 'தாங்கள்' என்கிறோமோ அவர்களுக்கு 'ஆப்' என்று சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட பலரை 'ஆப்லோக்' என்று சொல்ல வேண்டும்.

'தும்' எழுவாயா இருந்தால் ஒருவராலும் பலராலும் ஏவலில் வினைப்பகுதியுடன் 'ஓ' சேர்க்க வேண்டும்.

தும் ஆவோ=நீ வா.

தும் லோக்[1] ஆவோ = நீங்கள் எல்லோரும் வாருங்கள்.

தும் கரோ=நீ செய்.

தும் லோக்[1] கரோ=நீங்கள் எல்லோரும் செய்யுங்கள்.

'தும் தே[1] வோ' 'தும் லேவோ' என்பவைகளை 'தும் தோ[1]' 'தும் லோ' என்பார்கள்.

'ஆப்' எழுவாயாய் இருந்தால் வினைப் பகுதியுடன் 'இயே' என்று சேர்க்கவேண்டும்.

ஆப் ஜாயியே = நீங்கள் அல்லது தாங்கள் போங்கள்.

ஆப் லோக்[1] ஜாயியே=நீங்கள் அல்லது தாங்கள் எல்லோரும் போங்கள்.

ஆப் தே[1]கியே = நீங்கள் அல்லது தாங்கள் பாருங்கள்.

ஆப் லோக்[1] தே[1] கியே=நீங்கள் அல்லது தாங்கள் எல்லோரும் பாருங்கள்.

கர், தே[1], லே, பீ, இவ்வினைப் பகுதிகளுடன் 'இயே' சேர்ந்தால் அவை முறையே கீஜியே, தீ[1]ஜியே, லீஜியே, பீஜியே என்று மாறும்.

'செய்யாதே' என்பதற்கு 'மத் கரோ' என்றும், மரியாதையாய் சொன்னால் 'மத் கீஜியே' என்றும் ஆகும்.

நிகழ் காலத்தில் இதுவரையில் நாம் கூறியது. சாதாரண நிகழ்காலம். 'பசு 'பால் கொடுக்கிறது' என்றால் அது பசுவின் பொது குணத்தைக் குறிக்கும். நம் முன் ஒரு பசு பால் கொடுத்துக் கொண்டிருந்தால் அது ஒரு குறித்த காலத்தில் நடக்கும் நிகழ் காலமாகும். இதை ஆங்கிலத்தில் (Present continouns) என்பார்கள். இது ஹிந்துஸ்தானியில் இப்படி இருக்கும்.

ஆண்பால்

மைங் ஜா ரஹா ஹூங்=நான் போய்க்கொண்டு இருக்கிறேன்.

ஹம் ஜா ரஹே ஹைங்=நாம் அல்லது நாங்கள் போய்க் கொண்டு இருக்கிறோம்.

தும் ஜா ரஹே ஹோ=நீ போய்க்கொண்டு இருக்கிறாய்.

ஆப் ஜா ரஹே ஹைங்=நீங்கள் அல்லது தாங்கள் போய்க்கொண்டு இருக்கிறீர்கள்.

வோ ஜா ரஹா ஹை=அவன் போய்க்கொண்டு இருக்கிறான்; அது போய்க்கொண்டு இருக்கிறது.

வே ஜா ரஹே ஹைங்=அவர்கள் போய்க்கொண்டு இருக்கிறார்கள், அவைகள் போய்க்கொண்டு இருக்கின்றன.

பெண்பால்

மைங் ஜா ரஹீ ஹூங்=நான் போய்க்கொண்டிருக்கிறேன்.

ஹம் ஜா ரஹீ ஹைங்=நாம் அல்லது நாங்கள் போய்க்கொண்டு இருக்கிறோம்.

தும் ஜா ரஹீ ஹோ=நீ போய்க்கொண்டு இருக்கிறாய்.

ஆப் ஜா ரஹீ ஹைங்=நீங்கள் அல்லது தாங்கள் போய்க்கொண்டு இருக்கிறீர்கள்.

வோ ஜா ரஹீ ஹை=அவள் போய்க்கொண்டு இருக்கிறாள். அது போய்க்கொண்டு இருக்கிறது.

வே ஜா ரஹீ ஹை=அவர்கள் போய்க்கொண்டு இருக்கிறார்கள், அவைகள் போய்க்கொண்டு இருக்கின்றன.

நிகழ் காலத்தில் மேல் கண்ட இரு பேதங்கள் இருப்பது போலவே முற்றுப்பெறாத இறந்த காலத்திலும் இரண்டு பேதங்கள் உண்டு.

'ஜாதா தா' 'ஜா ரஹா தா' என்ற இரண்டுக்கும் 'போய்க்கொண்டு இருந்தான்' என்றுதான் அர்த்தம். ஆனால் 'ஜாதா தா' என்பது இறந்த காலத்தில் நிகழ்ந்த ஒரு பழக்கத்தைக் குறிக்கும். அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்ந்துக்கொண்டு இருந்த

செய்தியைக் குறிக்கும். 'ஜா ரஹா தா' என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிகழ்ந்ததை மட்டும் குறிப்பிடும். இறந்த கால பழக்கத்தைக் குறிக்காது.

காஸி மேமைங் ரோஜ்z க[1]ங்கா[1] மே நஹாதா தா= காசியில் நான் தினந்தோறும் கங்கையில் ஸ்நானஞ் செய்து வந்தேன்.

இது ஒரு பழக்கத்தைக் குறிப்பதால் இங்கு "நஹாதா தா" என்பதற்கு "நஹா ரஹா தா" என்று வராது.

ஜப்[1] ராம் ஆயா தப்[1] மைங் கா ரஹா தா=ராமன் வந்த பொழுது நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். இது பழக்கமல்ல. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்ந்துகொண்டிருந்த செய்தியைக் குறிக்கிறது. எனவே, "கா ரஹா தா" என்றிருக்கின்றது. இதற்குப் பதிலாக "காதா தா" என்றும் சொல்லலாம்.

## நே, கோ விதி.

சில வினைச்சொற்களுக்கு செயப்படு பொருள் இருக்கும். சிலவற்றிற்கு இருக்கமாட்டாது. எவைகளுக்கு இருக்குமோ அவைகளில் 'லா' 'போ[1]ல்' 'பூ[1]ல்' போன்ற ஒருசில வினைச்சொற்களைத் தவிர, மற்றவை சாதாரண இறந்த காலத்திலோ அல்லது சாதாரண இறந்தகால உருவம் கூடிய மற்ற இறந்த காலத்திலோ இருந்தால் எழுவாயுடன் "நே" என்று ஒரு உருபு சேர்க்கவேண்டும். இந்த உருபுக்கு அர்த்தம் இல்லை. செயப்படுபொருள் தொக்கி நின்றாலும் வினைச்சொல் செயப்படு பொருள் பெறக்கூடியதாய் இறந்த கால உருவத்தில் இருந்தால் எழுவாயுடன் 'நே' சேர்க்க வேண்டும்.

லாயா = கொண்டு வந்தான்.

போ$^1$லா = சொன்னான், பேசினான்.

பூ$^1$லா = மறந்தான்.

இம்மூன்றும் மற்றும் ஒன்றிரண்டு வினைச் சொற்களும் செயப்படு பொருள் பெற்றிருந்தாலும் இவைகளின் இறந்த காலத்தில் எழுவாயுடன் 'நே' சேர்க்கக் கூடாது.

ராம் ஆம் லாயா=ராமன் மாம்பழம் கொண்டு வந்தான்.

ராம் ஜூட் போ$^1$லா=ராமன் பொய் பேசினான்.

ராம் ஹிந்தீ$^1$ பூ$^1$ல் க$^1$யா = ராமன் ஹிந்தி மறந்து போய்விட்டான்.

செயப்படு பொருள் இருக்கக்கூடிய மற்ற வினைச் சொற்களாக இருந்தால் "நே" சேர்க்கவேண்டும்.

ராம்னே ஆம் காயா = ராமன் மாம்பழம் சாப்பிட்டான்.

இங்கு 'காயா' என்ற வினைக்கு செயப்படுபொருள் இருப்பதாலும் அது இறந்த காலத்தில் இருப்பதாலும் எழுவாயுடன் "நே" சேர்க்கவேண்டும். இதே விதமாக.

ராம் னே ஆம் காயா ஹை=ராமன் மாம்பழம் சாப்பிட்டு இருக்கிறான்.

ராம் னே ஆம் காயா தா=ராமன் மாம்பழம் சாப்பிட்டு இருந்தான்.

ராம் னே ஆம் காயா ஹோகா$^1$=ராமன் மாம்பழம் சாப்பிட்டு இருக்கலாம்.

மேற்கண்ட இறந்த காலங்களிலும் எழுவாயுடன் 'நே' சேர்க்கவேண்டும். 'காதா தா' 'காதா' அல்லது 'கா ரஹா தா' என்ற இறந்த காலங்களில் "நே" சேராது. ஏனென்றால் மேற்கூறிய நியமத்தில் வினைச் சொல்லின் சாதாரண இறந்தகால உருவம் இருக்க வேண்டுமென்று கூறி இருக்கிறது.

சில சமயங்களில் எழுவாயுடன் "கோ" என்ற உருபு சேர்க்கவேண்டி வரும். அப்பொழுது அதற்கும் அர்த்தம் இல்லை.

"சாஹியே" என்றால் "வேண்டும்" என்று அர்த்தம்.

தும் கோ க்யா சாஹியே=உனக்கு என்ன வேண்டும்.

முஜே ஏக் ருப்யா சாஹியே=எனக்கு ஒரு ரூபாய் வேண்டும்.

வினைச்சொல்லுடன் 'சாஹியே' சேர்ந்தால் கட்டாயத்தை அல்லது பலவந்தத்தைக் காட்டும்.

ஜானா சாஹியே=போக வேண்டும்.

கானா சாஹியே=சாப்பிடவேண்டும் முதலியன.

இப்படிப்பட்ட கட்டாயம் அல்லது பலவந்தத்தைக் குறிக்கும் மற்ற இரு வகைகளும் உண்டு.

"ஜானா சாஹியே" என்பதற்கு பதிலாக "ஜானா ஹை" என்றாலும் "போக வேண்டும்" என்றே அர்த்தம். ஆனால் "ஜானா சாஹியே" வில் பலவந்தம், நிர்ப்பந்தம், அதிகம். "ஜானா ஹை" இல் குறைவு.

'சாஹியே' அல்லது 'ஹை'க்கு பதிலாக "பள்தா ஹை" என்று சேர்ப்பார்கள். "பள்தா ஹை" என்ற வினைச் சொல்லுக்கு 'விழுகிறது' என்று அர்த்தம் மற்ற வினைச்சொற்களுடன் வரும்பொழுது "வேண்டி இருக்கிறது" என்ற அர்த்தமாகும்.

ஜானு பள்தா ஹை = போகவேண்டி இருக்கிறது.

கட்டாயத்தைக் குறிக்கும் இம்மூன்று முறைகளி லும் எழுவாயுடன் "கோ" சேர்க்கவேண்டும்.

ராம் கோ ஜானு சாஹியே = ராமன் போக வேண்டும்.

ராம் கோ ஜானு,ஹை = ராமன் போக வேண்டும்.

ராம் கோ ஜானு பள்தா ஹை = ராமன் போக வேண்டி இருக்கிறது.

ராம் கோ ஜானு சாஹியே தா = ராமன் போய் இருக்கவேண்டும்.

ராம் கோ ஜானு தா = ராமன் போக வேண்டி இருந்தது.

ராம் கோ ஜானு பள்தா தா = ராமன் போக வேண்டி இருந்தது.

ராம் கோ ஜானு ஹோகா[1] = ராமன் போக வேண்டி இருக்கும்.

ராம் கோ ஜானே பளேகா[1] = ராமன் போக வேண்டி இருக்கும்.

இப்படி எழுவாயுடன் "நே" அல்லது "கோ" என்ற உருபை சில சமயங்களில் சேர்க்கவேண்டும் இப்

படி எழுவாயுடன் உருபு சேர்க்கும் முறையானது வேறு எந்த பாஷையிலும் கிடையாது.

எழுவாயுடன் வேற்றுமை உருபு சேர்ந்திருந்தால் வினைச் சொல்லின் அமைப்பு எழுவாயைப்போல் இருக்காது.

"காயா" என்பது ஆண்பால் அல்லவா? "சாப்பிட்டான்" என்று அல்லவா மேலே கூறியுள்ளோம். "ஸீதானே காயா" என்றும் வரும். அதாவது 'காயா' என்றால் "சாப்பிட்டாள்" என்ற பெண்பால் அர்த்தமும் விளங்கும். இதே விதமாக "காயீ" என்றால் "சாப்பிட்டான்" என்ற ஆண்பால் அர்த்தமும் வரும். ஆண்பால் பன்மை ஆகிய "காயே" என்பதற்கு "சாப்பிட்டான்" அல்லது "சாப்பிட்டாள்" என்ற ஒருமை அர்த்தமும் வரும்.

இதனால் தான் நாம் இறந்தகால வினைகளில் செயப்படு பொருள் இருக்கக்கூடிய வினைச்சொற்களை உதாரணமாக எடுத்துக்கொள்ள வில்லை. முக்கியமாக 'கர்' (செய்) என்றதின் இறந்த காலம் 'கியா' 'தே[1]' (கொடு) என்பதின் இறந்த காலம் "தி[1]யா" லே (எடு அல்லது வாங்கு) என்பதின் இறந்த காலம் 'லியா' இதையும் விளக்காமல் இருந்தோம்.

இப்பொழுது இவ்வினைச் சொற்களைப்பற்றி நாம் அறிய வேண்டியதாவது :—

காயா என்பது ஆண்பால் ஒருமை உருவம்.

காயே என்பது ஆண்பால் பன்மை உருவம்.

காயீ என்பது பெண்பால் ஒருமை உருவம்.

காயீங் என்பது பெண்பால் பன்மை உருவம்.

இதே விதமாக.

| | |
|---|---|
| கியா | ஆண்பால் ஒருமை உருவம். |
| கியே | ஆண்பால் பன்மை உருவம். |
| கீ | பெண்பால் ஒருமை உருவம். |
| கீங் | பெண்பால் பன்மை உருவம். |

இவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான எழுவாயுடனும் வரக்கூடும். "ராம்னே தி'யா" "ராம்னே தீ'" என்றும் வரும். "ஸீ தானே தி'யா" "ஸீ தானே தீங்" என்றும் வரும்.

ஆகையால் மேற் கூறிய இறந்த கால வேறுபாடு களை எழுதவேண்டுமென்றால் இவ்விதமாகும்.

இறந்த காலம்

கியா
கியே
கீ
கீங்

நான் செய்தேன், நாம் அல்லது நாங்கள் செய்தோம். நீ செய்தாய், நீங்கள் அல்லது தாங்கள் செய்தீர் கள். அவன் செய்தான், அவள் செய் தாள், அது செய்தது. அவர்கள் செய்தார்கள், அவை கள் செய்தன.

நிகழ்கால முற்று

கியா ஹை
கியே ஹைங்
கீ ஹை
கீ ஹைங்

நான் செய்திருக்கிறேன், நாம் அல்லது நாங்கள் செய்திருக்கிறோம். நீ செய்திருக்கிறாய், நீங்கள் அல்லது தாங்கள் செய்திருக்கிறீர்கள். அவன் செய்திருக்கிறான், அவள் செய்து இருக்கிறாள். அது செய்து இருக்கிறது. அவர்கள் செய்து இருக்கிறார் கள், அவைகள் செய்திருக்கின்றன.

இறந்த காலமுற்று

| | |
|---|---|
| கியா தா<br>கியே தே<br>கீ தீ<br>கீ தீங் | நான் செய்திருந்தேன், நாம் அல்லது நாங்கள் செய்திருந்தோம். நீ செய்திருந்தாய், நீங்கள் அல்லது தாங்கள் செய்திருந்தீர்கள். அவன் |

செய்திருந்தான், அவள் செய்திருந்தாள், அது செய்திருந்தது. அவர்கள் செய்திருந்தார்கள், அவைகள் செய்திருந்தன.

சந்தேகத்தைக் குறிக்கும் இறந்த காலம்

| | |
|---|---|
| கியா ஹோகா<br>கியே ஹோங்கே[1]<br>கீ ஹோகீ[1]<br>கீ ஹோங்கீ | நான் செய்து இருப்பேன், நாம் அல்லது நாங்கள் செய்து இருப்போம், நீ செய்து இருப்பாய், நீங்கள் அல்லது தாங்கள் செய்து இருப்பீர்கள். அவன் செய்து |

இருப்பான், அவள் செய்து இருப்பாள், அது செய்து இருக்கும். அவர்கள் செய்து இருப்பார்கள், அவைகள் செய்து இருக்கும்.

இப்படி மேற்கூறிய ஒவ்வொரு உருவத்துடனும் ஆண்பாலானலும் பெண்பாலானலும் ஒருமையானலும் பன்மையானலும் 'நே' உருபு கூடிய எழுவாய் சேரும். ஆனல் முற்றுப்பெருத இறந்த காலத்திலும் விபந்தனையைக் குறிக்கும்; இறந்த காலத்திலும் எழுவாயுடன் 'நே' சேராது. ஆகையால் அக்காலங்களில் உருவம் மற்ற வினைச்சொற்களுக்கு இருப்பது போலவே இருக்கும். அதாவது:—

## முற்றுப்பெருத இறந்த காலம்

ஆண்பால்

மைங் கர் தா தா = நான் செய்துக்கொண்டு இருந்தேன்.

ஹம் கர்தே தே=நாம் அல்லது நாங்கள் செய்துக் கொண்டு இருந்தோம்.

தும் கர்தே தே=நீ செய்துக்கொண்டு இருந்தாய்.

ஆப் கர்தே தே=நீங்கள் அல்லது தாங்கள் செய்துக்கொண்டு இருந்தீர்கள்.

வோ கர்தா தா=அவன் செய்துக்கொண்டு இருந்தான். அது செய்துக்கொண்டு இருந்தது.

வே கர்தே தே=அவர்கள் செய்துக்கொண்டு இருந்தார்கள், அவைகள் செய்துக்கொண்டு இருந்தன.

பெண்பால்

மைங் கர்தீ தீ=நான் செய்துக்கொண்டு இருந்தேன்.

ஹம் கர்தீ தீங்=நாம் அல்லது நாங்கள் செய்துக் கொண்டு இருந்தோம்.

தும் கர்தீ தீங்=நீ செய்துகொண்டு இருந்தாய்.

ஆப் கர்தீ தீங்=நீங்கள் அல்லது தாங்கள் செய்துக்கொண்டு இருந்தீர்கள்.

வோ கர்தீ தீ=அவள் செய்துக்கொண்டு இருந்தாள் அது செய்துக்கொண்டு இருந்தது.

வே கர்தீ தீங்=அவர்கள் செய்துகொண்டு இருந்தார்கள். அவைகள் செய்துக்கொண்டு இருந்தன.

இதே விதமாக நிபந்தனையைக் காட்டும் இறந்த காலங்களில் மேற் கூறிய உருவங்களில் உள்ள கடைசி தா, தே, தீ, தீங், என்பன மறைந்து விடும்.

இனி எழுவாயைத் தழுவி இரா வினைச் சொற்களின் உருவங்கள் எப்படி இருக்கும் என்று கவனிப்போம்.

எழுவாய் எதுவாயிருந்தாலும், செயப்படு பொருள் இல்லா விட்டால் (தொக்கி நின்றாலும்) அல்லது இன்ன 'பால்' என்று குறிப்பிடக் கூடாததாய் இருந்தாலும் வினைச்சொல் எப்பொழுதும் ஆண்பால் ஒருமையாய் இருக்கும்.

ஸீ தானே ஸுனா—ஸீதைக் கேட்டான்.

இதில் செயப்படுபொருள் எது என்று விளக்கமாய் இல்லை. ஆகையால் 'ஸுனா' ஆண்பாலாக இருக்கிறது.

' ஸீதா கோ ஜானே படா[1] '

இதில் செயப்படு பொருள் இல்லை. ஆகையால் " ஜானு படா[1] " என்று ஆண்பால் ஒருமையாகவே இருக்கிறது.

செயப்படுபொருள் இருந்து அத்துடன் அதனுடைய இரண்டாம் வேற்றுமை உருபு மறையாமல் நின்றால் வினைச்சொல் ஆண்பால் ஒருமையாகவே நிற்கும்.

தமிழில் செயப்படு பொருளின் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கி நிற்பதுண்டு. எங்கெல்லாம் தமிழில் அது தொக்கி இருக்கக்கூடுமோ அங்கெல்லாம் ஹிந்துஸ்தானியிலும் அது தொக்கி நிற்கலாம். எங்கு தமிழில் தொக்கி நிற்காதோ அங்கு ஹிந்துஸ்தானியிலும் தொக்கி நிற்காது. "புஸ்தகத்தை எழுதுகிறேன்" என்பதை "புஸ்தகம் எழுதுகிறேன்" என்று சொல்லலாம். ஆனால் "ராவணனைக் கொன்றான்" என்ற

இடத்தில் வேற்றுமை உருபு தொக்கி நிற்க முடியாது. இதே விதமாக ஹிந்துஸ்தானியிலும்.

*ஸீதா னே லலிதா கோ மாரா = ஸீதை லலிதையை அடித்தாள்.*

*ஸீதா கோ லலிதா கோ மார்ணு பள்தா ஹை = ஸீதை லலிதையை அடிக்கவேண்டி இருக்கிறது.*

இவ்விரண்டு வாக்கியங்களிலும் செயப்படு பொருளுடன் வேற்றுமை உருபு இருப்பதால், வினைச்சொல் ஆண்பால் ஒருமையாகவே இருக்கிறது.

செயப்படு பொருளின் இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து நின்றால் வினைச்சொல் செயப்படு பொருளைத் தழுவி வரும்; அதாவது வினைச்சொல்லின் 'பால்' 'எண்' இவ்விரண்டும் செயப்படு பொருளைப் போல் இருக்கும்.

*ராம்னே ரோடீ காயீ.*

*ராம்கோ ரோடீ கானீ சாஹியே.*

இவ்விரு வாக்கியங்களிலும் செயப்படு பொருளுடன் வேற்றுமை உருபு இல்லாததால், செயப்படு பொருளைப்போல் வினைச்சொல்லும் பெண்பால் ஒருமையாய் இருக்கிறது. இவ்வாக்கியங்களில் எழுவாய் 'ராமன்' இல்லாமல் 'நீ நான், நாம், நீங்கள், ஸீதை' எதுவாய் இருந்தாலும் செயப்படு பொருள் மேற்படியாக இருந்தால் வினைச் சொல்லும் அப்படியேதான் இருக்கும்.

*ஸீதா னே தோ[1] ஆம் காயே.*

*ஸீதா கோ தோ[1] ஆம் கானே பளேங்கே[1].*

இவ்விரு வாக்கியங்களிலும் செயப்படு பொருள் ஆண்பால் பன்மையாயிருப்பதால் எழுவாய் பெண் பாலாயிருப்பினும், வினைச்சொல் ஆண்பால் பன்மை யாகவே இருக்கிறது.

இந்த விசேஷம் ஹிந்தியிலும் உருதுவிலும் மட்டுமே யுண்டு. மற்ற பாஷைகளில் இல்லை. எனவே நண்பர்கள் இந்த 'நே—கோ' விதியை நன்கு உணர வேண்டும்.

ஒரு வினைப்பகுதியுடன் 'ஸக்' சேர்த்தால் 'முடியும்' என்ற அர்த்தம் விளங்கும். உதாரணம்:—

கா ஸக்தா ஹை = சாப்பிடக்கூடும், அல்லது சாப்பிட முடியும்.

தமிழில் நாம் சாதாரணமாக 'என்னால் முடியாது' 'எனக்கு முடியாது' என்று எழுவாயுடன் 'ஆல்' அல்லது 'க்கு' என்ற உருபு சேர்க்கிறோம்.

ஹிந்துஸ்தானியில் 'ஸக்' வந்தால் எக்காரணத்தைக் கொண்டும் எழுவாயுடன் யாதொரு உருபும் சேராது.

உதாரணம் :—

ராம் ரோடீ கா ஸகா.

இந்த வாக்கியத்தில் 'ஸகா' (முடிந்தது) வந்திருப்பதால் வினைச்சொல் செயப்படு பொருள் பெறக்கூடிய இறந்தகால வினையாயிருப்பினும் 'நே' சேரவில்லை.

வினைப்பகுதியுடன் 'சுக்' சேர்த்தால் வேலைப் பூர்த்தியாவது விளங்கும். பெரும்பாலும் இது இறந்த காலத்தில்தான் சேர்க்கப்படும். இது சேரும்பொழுதும் எழுவாயுடன் யாதொரு உருபும் சேராது.

வினைப்பகுதியுடன் 'னே' சேர்த்து அத்துடனும் "லக்" என்று சேர்த்தால் 'ஆரம்பிக்க' என்ற அர்த்த மாகும். இது சேரும்பொழுதும் எழுவாயுடன் எக் காரணத்தைக்கொண்டும் உருபு சேராது.

ராம் ரோட கானே லகா[1]

இதில் 'லகா'' சேர்ந்திருப்பதால் எழுவாயுடன் 'நே' சேரவில்லை.

கவனிப்பு:—இப்பகுதியைப் படித்தபிறகு மறுபடி யும் முதல் பகுதியைப் படிக்கவேண்டும்.

# மொழித் தொடர்

| | எண்கள் | | எண்கள் |
|---|---|---|---|
| ஏக் | 1 | எக்தீஸ் | 31 |
| தோ[1] | 2 | ப[1]த்தீஸ் | 32 |
| தீன் | 3 | தைந்தீஸ் | 33 |
| சார் | 4 | சௌந்தீஸ் | 34 |
| பாஞ்ச் | 5 | பைந்தீஸ் | 35 |
| சே | 6 | சத்தீஸ் | 36 |
| ஸாத் | 7 | ஸைந்தீஸ் | 37 |
| ஆட் | 8 | அள்தீஸ் | 38 |
| நௌ | 9 | உன்சாலீஸ் | 39 |
| த[1]ஸ் | 10 | சாலீஸ் | 40 |
| க்[3]யாரா | 11 | எக்தாலீஸ் | 41 |
| பா[1]ரா | 12 | ப[1]யாலீஸ் | 42 |
| தேரா | 13 | தியாலீஸ் | 43 |
| சௌதா[1] | 14 | சௌதாலீஸ் | 44 |
| பந்த[1]ரா | 15 | பைந்தாலீஸ் | 45 |
| ஸோலா | 16 | சியாலீஸ் | 46 |
| ஸத்ரா | 17 | ஸைந்தாலீஸ் | 47 |
| அட்டாரா | 18 | அள்தாலீஸ் | 48 |
| உன்னீஸ் | 19 | உன்சாஸ் | 49 |
| பீ[1]ஸ் | 20 | பசாஸ் | 50 |
| இக்கீஸ் | 21 | எக்காவன் | 51 |
| பா[1]யீஸ் | 22 | பா[1]வன் | 52 |
| தேயீஸ் | 23 | திர்பன் | 53 |
| சௌபீ[1]ஸ் | 24 | சௌவுன் | 54 |
| பச்சீஸ் | 25 | பச்பன் | 55 |
| சப்[1]பீ[1]ஸ் | 26 | சப்பன் | 56 |
| ஸத்தாயீஸ் | 27 | ஸத்தாவன் | 57 |
| அட்டாயீஸ் | 28 | அட்டாவன் | 58 |
| உந்தீஸ் | 29 | உன்ஸட் | 59 |
| தீஸ் | 30 | ஸாட் | 60 |

| | எண்கள் | | எண்கள் |
|---|---|---|---|
| எக்ஸட் | 61 | சௌரான்பே[1] | 94 |
| பா[1]ஸட் | 62 | பஞ்சான்பே[1] | 95 |
| திர்ஸட் | 63 | சான்பே[1] | 96 |
| சௌஸட் | 64 | ஸத்தான்பே[1] | 97 |
| பைங்ஸட் | 65 | அட்டான்பே[1] | 98 |
| சாஸட் | 66 | நின்னான்பே[1] | 99 |
| ஸள்ஸட் | 67 | ஸௌ | 100 |
| அள்ஸட் | 68 | ஏக் ஸௌ ஏக் | 101 |
| உனத்தர் | 69 | ஏக் ஸௌ தோ[1] | 102 |
| ஸத்தர் | 70 | ஏக் ஸௌ தீன் | 103 |
| எக்ஹத்தர் | 71 | ஏக் சௌநின்னான்பே[1] | 199 |
| ப[1]ஹத்தர் | 72 | தோ[1]ஸௌ | 200 |
| திஹத்தர் | 73 | நௌ ஸௌ | 900 |
| சௌஹத்தர் | 74 | நௌ ஸௌ நின்னா | |
| பச்ஹத்தர் | 75 | ன்பே[1] | 999 |
| சிமத்தர் | 76 | ஹஜாzர் | 1000 |
| ஸதத்தர் | 77 | ஏக் ஹஜாzர் ஏக் | 1001 |
| அடத்தர் | 78 | ஏக் ஹஜாzர் நௌ- | |
| உனாஸி | 79 | ஸௌ | 1900 |
| அஸ்ஸி | 80 | உன்னீஸ் சௌ (பத் | |
| எகாஸி | 81 | தொன்பது நூறு) | 1900 |
| ப[1]யாஸி | 82 | உன்னீஸ் ஸௌ- | |
| திராஸி | 83 | சௌந்தாலீஸ் | 1944 |
| சௌராஸி | 84 | த[1]ஸ் ஹஜாzர் | 10000 |
| பசாஸி | 85 | லாக் | 100000 |
| சியாஸி | 86 | கரோள் | 10000000 |
| ஸத்தாஸி | 87 | தஸ்[1] கரோள் | 100000000 |
| அட்டாஸி | 88 | பஹலா = முதலாவது | |
| நவாஸி | 89 | தூ[1]ஸ்ரா = இரண்டாவது | |
| நப்[1]பே[1] | 90 | தீஸ்ரா = மூன்றாவது | |
| எகான்பே[1] | 91 | சௌதா = நான்காவது | |
| பா[1]ன்பே[1] | 92 | பாஞ்ச்வாங் = ஐந்தாவது | |
| திரான்பே[1] | 93 | சடா = ஆறாவது | |

சாத்வாங்=ஏழாவது
ஆட்வாங்=எட்டாவது
நௌவாங்=ஒன்பதாவது
த[1]ஸ்வாங்=பத்தாவது
பா[1]ராவாங்=பனிரண்டாவது
அகேலா=தனிப்பட்ட
து[1]ஹறா=இரட்டைப்பங்கு
திஹறா=மூன்றுபங்கு
து[1]கு[1]ண=இரட்டை மடங்கு
திகு[1]ண=மூன்றுமடங்கு
சார்கு[1]ண=நான்குமடங்கு
பாஞ்ச்கு[1]ண=ஐந்துமடங்கு
சேகு[1]ண=ஆறுமடங்கு

பின்னங்கள்

ஆதா[1]=அரை
டேள்=ஒன்றரை
அடா[1]யீ=இரண்டரை
ஸாடே தீன்=மூன்றரை
ஸாடே சார்=நாலரை
பௌன்=முக்கால்
பௌனே தோ[1]=ஒன்றே-முக்கால்
பௌனே தீன்=இரண்டே-முக்கால்
பௌனே சார்=மூன்றே-முக்கால்
பௌனே த[1]ஸ்=ஒன்பதே-முக்கால்
பௌனே பா[1]ரா=பதி-னொன்றே முக்கால்
பாவ்=கால்
ஸவா=ஒன்றே கால்
ஸவா. தோ[1]=இரண்டே-கால்
ஸவா தீன்=மூன்றேகால்
ஸவா சார்=நாலே கால்
ஸவா த[1]ஸ்=பத்தே கால்
ஸவா பா[1]ரா=பனிரண்டே-கால்

மணி பார்க்க

ஏக் ப[1]ஜே=ஒரு மணி
ஸவா ப[1]ஜே=ஒன்றே கால் மணி
டே[1]ள் ப[1]ஜே=ஒன்றரை மணி
பௌனே தோ[1] ப[1]ஜே=ஒன்றே முக்கால் மணி
தோ[1] ப[1]ஜே=இரண்டு மணி
ஸவா தோ[1] ப[1]ஜே=இரண்டேகால் மணி
அடா[1]யீ ப[1]ஜே=இரண்டரை மணி
பௌனே தீன் ப[1]ஜே=இரண்டே முக்கால் மணி
தீன் ப[1]ஜே=மூன்று மணி

ஸவா த1ஸ் ப1ஜே=பத்தே கால் மணி [மணி
ஸாளே க்1யாரா ப1ஜே=பதினொன்றே மூக்கால்
பௌனே பா1ரா ப1ஜே=பதினொன்றை மணி
ஸவா பா1ரா ப1ஜே=பனிரண்டே கால்மணி
பௌன் ப1ஜே=பனிரண்டே மூக்கால் மணி

## பணம் (நாணயம்)

பைஸா=காலணா.
ஆதா1 ஆனா=அரையணா.
பௌன் ஆனா=மூக்கால் அணா.
ஏக் ஆனா=ஒரு அணா.
ஸவா ஆனா=ஒன்றே கால் அணா.
டே1ள் ஆனே=ஒன்றரை அணா.
பௌனே தோ1 ஆனே=ஒன்றே மூக்கால் அணா.
தோ1 ஆனே=இரண்டு அணா.
து1வன்னி=இரண்டு அணா நாணயம்.
சவன்னீ=நான்கு அணா நாணயம்.
அடன்னீ=எட்டணா நாணயம்.
ஸாளே பந்த்1ரா ஆனே=பதினைந்தரை அணா.
பௌனே ஸோலா ஆனே=பதினைந்தேமுக்கால் [அணா
ஸிக்கா=நாணயம்.
முஹர் அல்லது அஷர்பீ=ஸவரன்.
ரேச்கா1ரீ=சில்லரை.

## எடை

1 ஸேர்=80 ரூபாய் எடை.
4 பாவ்=1 ஸேர்.
4 சடாங்=1 பாவ்.
40 ஸேர்=1 மணங்கு (மன்).
பஸேரீ=5 ஸேர்.

## காய்கறி

கத்திரிக்காய்=பை[1]ங்கன். (ஆ)
வாழைக்காய் =கச்சாகேலா. (ஆ)
பாகற்காய்=கரைலா. (ஆ)
பீர்க்கங்காய்=தரோயீ. (பெ)
நுரைபீர்க்கை = நெநுவா. (ஆ)
புடலங்காய்=சசீண்டா (ஆ)
அவரைக்காய்=ஸேம். (ஆ)
கொத்தவரை = கோ[1]ர்கிபலீ (பெ)
பூசணிக்காய் = கும்ஹடா. (ஆ)
சொரக்காய்=லௌகீ (பெ)
வெள்ளரிக்காய்=கீரா. (ஆ)
பட்டாணி=மடர். (ஆ)
உருளைக்கிழங்கு=ஆலூ. (ஆ)

வெங்காயம்=ப்யாஜ். (ஆ)
சேப்பங்கிழங்கு = அருயீ. (பெ)
கருணைக்கிழங்கு = ஜமீங் கந்த்[1]. (ஆ)
சர்க்கரைவள்ளிக்கிழங்கு= ஷகர்கந்த்[1]. (ஆ)
வெண்டைக்காய்=பி[1]ண்டி[1]. (ஆ)
முருங்கக்காய்=ஸஹஜன். (ஆ)
தேங்காய்=நாரியல். (ஆ)
கீரை=பா[1]ஜீ. (பெ)
கொத்தமல்லி = கொத்மீர் (ஆ) தனியாகீபத்தி (பெ)
பச்சை மிளகாய் = ஹரா மிர்சா. (ஆ)
இஞ்சி=அத[1]ரக். (ஆ)

## பழ வகை

வாழைப்பழம்=கேலா. (ஆ)
மாம்பழம்=ஆம். (ஆ)
பலாப்பழம்=கட்ஹல். (ஆ)
நாவல்பழம்=ஜாமூன். (ஆ)
அத்திப்பழம்=அஞ்சீர் (ஆ)
கொய்மாபழம் = அம்ரூத்[1]. (ஆ)

அனாசிப்பழம் = அனன்னாஸ் (ஆ)
ஆப்பிள்=ஸேவ். (ஆ)
பேரிக்காய்=நாஸ்பாதீ (பெ)
விளாம்பழம்=கைத். (ஆ)
மாதுளம்பழம்=அனார். (ஆ)

---

குறிப்பு:—(ஆ) என்பது ஆண்பாலைக் குறிக்கும்.
(பெ) என்பது பெண்பாலைக் குறிக்கும்.

ஆரஞ்சி=மோஸம்பி. (பெ) ஸந்தாரா. (ஆ)
கிச்சிலிப்பழம் = நாரங்கி. (பெ)
எலுமிச்சம்பழம்=நீம்பூ (ஆ)
எலந்தம்பழம்=பே1ர். (ஆ)
ஸீதாபழம் = ஷரீபா1, ஸீதாபல். (ஆ)
பம்பளிமாஸ்=சகோத்ரா. (ஆ)
பச்சிதிராக்ஷப்பழம் = அங்கூ1ர். (ஆ)

## புஷ்பங்கள்

மல்லி=சமேலீ. (பெ)
ரோஜா=கு1லாப்1. (ஆ)
தாழம்பு=கேவடா1. (ஆ)
தாமரை=கமல். (ஆ)
அரளி=அடுஹல். (ஆ)
மகுழம்பூ=மௌல்ஸ்ரீ. (பெ)
மனோரஞ்சிதம் = சம்பா (ஆ)
முல்லை=பே1லா. (ஆ)
சாமந்தி=நர்கிஸ். (ஆ)

## உலோகங்கள்

இரும்பு=லோஹா. (ஆ)
வெள்ளி=சாந்தீ. (பெ)
தங்கம்=ஸோனா. (ஆ)
பித்தளை=பீதல். (ஆ)
வெண்கலம்=காங்ஸா. (ஆ)
தாமரம்=தாம்பா1. (ஆ)
தகரம்=தக1ட்1. (ஆ)
இய்யம்=ஸீஸம். (ஆ)
வெள்ளைச்செம்பு = பூல். (ஆ)

## சில மரங்கள்

மாமரம் = ஆம் கா பேட்1. (ஆ)
அத்திமரம் = கூ1லர் கா பேட்1. (ஆ)
ஆலமரம்=ப1ர் க1 த்1 கா பேட்1. (ஆ)
அரசமரம் = பீபல் கா பேட்1. (ஆ)
தென்னைமரம்=நாரியல் கா பேட்1. (ஆ)
பனைமரம் = தாட்1 கா பேட்1. [ஆ)
ஈச்சமரம் = கஜூர் கா பேட்1. (ஆ)
வேப்பமரம் = நீம் கா பேட்1. (ஆ)
கருவேலமரம்=ப1பூ1ல் கா பேட்1. (ஆ)
இலுப்பைமரம் = மஹுஏ கா பேட்1. (ஆ)

தேக்குமரம் = ஸீஸம் கா பேட்[1]. (ஆ)
புளியமரம் = இம்லீ கா பேட்[1]. (ஆ)
வாழைமரம் = கேலே கா பேட்[1]. (ஆ)
விளாமரம் = கைத் கா பேட்[1]. (ஆ)
வில்வமரம் = பி[1]ல்வ கா பேட். (ஆ)
பின்னமரம் = கதம்ப[1] கா பேட்[1]. (ஆ)

## மளிகை ஸாமான்

புளி = இம்லீ. (பெ)
உப்பு = நமக். (ஆ)
மிளகாய் வத்தல் = மிர்சா. (ஆ)
மிளகு = காலிமிர்ச். (பெ)
சுக்கு = ஸோண்ட். (ஆ)
கடுகு = ராயீ. (பெ)
சீரகம் = ஜீரா. (ஆ)
கொப்பரை = க[1]ரீ. (பெ)
வெந்தியம் = மேந்தீ. (பெ)
பெருங்காயம் = ஹீங்க்[1]. (பெ)
கடலைபருப்பு = சனே கீ தா[1]ல். (பெ)
துவரம்பருப்பு = அரஹர் கீ தா[1]ல். (பெ)
உளுத்தம்பருப்பு = உட[1]த் கீ தா[1]ல். (பெ)
பயற்றம்பருப்பு = மூங்க்[1] கீ தா[1]ல். (பெ)
கொத்துமல்லி விதை = த[1]னியா. (ஆ)
முந்திரிபருப்பு = காஜூ (ஆ)
பாதாம் = பா[1]தா[1]ம். (ஆ)
பிஸ்தா = பிஸ்தா. (ஆ)
சாரப்பருப்பு = சிரெளஞ்ஜீ. (பெ)
சர்க்கரை = சீனி. (பெ)
கற்கண்டு = மிஸ்ரீ. (பெ)
வெல்லம் = கு[1]ள். (ஆ)
உலர்ந்த திராக்ஷை = கிஸ்மிஸ். (ஆ)
உலர்ந்த பெரிய திராக்ஷை = முனக்கா. (ஆ)
பேரீச்சம்பழம் = கஜூர். (ஆ)
தேன் = ஷஹத்[1]. (ஆ)
மஞ்சள் = ஹல்தீ[1]. (பெ)
பூண்டு = லஹஸன். (ஆ)
சோம்பு = ஸெளம்ப்[. (ஆ)
லவங்கம் = லௌங்க்[1]. (பெ)
லவங்கப்பட்டை = தா[1]ல் சீனி. (பெ)
ஏலக்காய் = இலாய்ச்சி (பெ)
புகையிலை = தமாகூ. (ஆ)
பாக்கு = ஸுபாரி. (பெ)
சுண்ணம்பு = சூனா. (ஆ)
பருத்தி = ரூயீ. (பெ)

நூல்=ஸூத். (ஆ)
பஞ்சு=கபாஸ். (ஆ)
விதை=பீ1ஜ். (ஆ)
நிலக்கடலை, கடலைக்காய்= மூங்க்1பலி. (பெ)
அரிசி=சாவல். (ஆ)
கோதுமை=கே1ஹூங். (ஆ)
மைதா=மைதா1. (ஆ)
ரவை=ஸூஜீ. (பெ)
கேழ்வரகு=ராகீ1 (பெ)
சோளம்=பா1ஜ்ரா. (ஆ)
மக்காசோளம்=மகயீ,(பெ) பு1ட்டா. (ஆ)
வாஸனைப்புகை இலை = ஸூரதி. (பெ)
ஜாதிக்காய்=ஜாய்பல் (ஆ)
ஜாபத்திரி = ஜாய்பத்ரீ (பெ)
நெய்=கீ1. (ஆ)
எண்ணெய்=தேல். (ஆ)
கடுகு எண்ணெய்=கடு1வா தேல், ராயீகாதேல். (ஆ)
நல்லெண்ணெய் = மீடா தேல், தில்லிகா தேல். (ஆ)
தேங்காய் எண்ணெய் = க1ரீகா தேல், நாரியல்கா தேல் (ஆ)
கடலை எண்ணெய்=மூங்க்1 பலீகா தேல். (ஆ)
விளக்கெண்ணெய் = ரேண்டீ1கா தேல். (ஆ)
மண் எண்ணெய்=மிட்டீகா தேல். (கிரோஸின்) (ஆ)
வெண்ணெய்=மக்கன். (ஆ)
தயிர்=த1ஹீ. (ஆ)
பால்=தூ1ட்1. (ஆ)
பால் ஏடு=மலாயீ. (பெ)
திரட்டிப்பால் = கோவா. (ஆ)

## வீட்டு சம்பந்தமான சொற்கள்

கட்டிடம்=இமாரத். (பெ)
வீடு=க1ர், மகான். (ஆ)
வாசற்படி = ட்1யோடீ1. (பெ)
உள்செல்லும் பாதை=பாடக். (ஆ)
தாழ்வாரம்=வஸாரா. (ஆ)
கூடம்=ஆங்க1ன். (ஆ)
உள்=கமரா. (ஆ)
பிரஸவம்=ஜச்சா. (ஆ)
மாதவிடாய் = மாஸிக் த1ர்ம. (ஆ)
வண்டி=கா1டி. (பெ)
சக்கரம்=பஹியா. (ஆ)
சாட்டை=சாபு1க். (ஆ)
லகாம்=லகா1ம். (ஆ)
கூடை=டோக்ரீ. (பெ)
முறம்=ஸூப். (ஆ)
தூண்=கம்பா1. (பெ)
ஸ்தூபி=கு1ம்ப1ஜ். (ஆ)
கோயில்=மந்தி1ர்
கதவு=த1ர்வாஜாz. (ஆ)
சுவர்=தீ1வார். (பெ)
சமயல்=ரஸோயீ. (பெ)

அடுப்பு=சூல்ஹா. (ஆ)
கும்பட்டி=ஸிக1டீ1. (பெ)
விரகு=லக்ளீ. (பெ)
அடுப்புக்கரி=கோய்லா (ஆ)
மூட்டை=போ1ரா. (ஆ)
குழாய்=நல். (ஆ)
கிணறு=குவாங. (ஆ)
தொட்டி=ஹௌஜ் (ஆ)
மாடி=அடாரீ. (பெ)
ஜன்னல்=கிட்1கீ. (பெ)
தரை=ஜzமீன். (பெ)
துடப்பம்=ஜாடூ1 (ஆ)
கக்கூஸ் = டட்டீ. (பெ)
பாய்கானா. (ஆ)

கரண்டி=கல்சுலி. (பெ)
பெரியதட்டு= தாலி. (பெ)
சிரியதட்டு=ரகா1பீ (பெ)
டம்பிளர்=கி1லாஸ். (ஆ)
கோப்பை=ப்யாலா. (ஆ)
செம்பு=லோடா. (ஆ)
ஸ்பூன்=சம்சா. (ஆ)
அம்மிக்கல்=ஸில். (ஆ)
அம்மி மேல் குழவி=லோடா1. (ஆ)
உலக்கை=மூஸல். (ஆ)
வாணலி=கடா1யீ (பெ)
தவா=தவா. (ஆ)

## தொழிலாளர்கள்

வண்ணான்=தோ1பீ1
அம்பட்டன்=நாயீஹஜாம்
சக்கிலி=மோசீ.
பறையன்=டே1ட1.
குயவன்=கும்ஹார்.
தச்சன்=ப1ட1யீ.
நெசவாளி=ஜுலாஹா.
தட்டான்=ஸோனார்.
கருமான்=லோஹார்.
வேலைக்காரன்=நௌகர்.
கூலியாள்=மஜ்zதூர்.
கொலத்துக்காரன்=ராஜ்

சமையல்காரன்=ரஸோயியா.
தண்ணீர் சுமப்பவன் = கஹார்.
குடியானவன்=கிஸான்.
வியாபாரி=ஸௌதா1க1ர்.
மாலுமி=கலாஸீ.
படகு ஓட்டுபவன்=மல்லாஹ்
தையர்க்காரன்=தா1ஜீ.
வண்டிக்காரன்=கா1டீ1வாலா.
இடையன்=க்1லாலா.
மேய்ப்பவன்=சர்வாஹா.
தோட்டி=மேஹதர்.

## பாடசாலை சம்பந்தமாக

உபாத்தியாயர்=உஸ்தாத்[1] அத்[1]யாபக்.
மாணவன்=சேலா, ஷாகிர்த்[1]
நேரம் (ஸமயம்)=வக்த் (ஆ)
நேரம் (தாமதம்)=தே[1]ர். (பெ)
பெயர்சேர்க்க=நாம்த[1]ர்ஜ் கர்ணு.
பெயர்நீக்க=நாம்நிகால்ணு.
மார்க் (எண்கள் mark) = நம்பர்.
பரீக்ஷை=இம்திஹான், (பெ)
விடுமுறை=சுட்டி, தாதீல். (பெ)
ஓய்வு=புர்ஸத். (பெ) [ணு.
பெயர் அடிக்க=நாம் காட்
உழைப்பு=மெஹனத்(பெ)
படிப்பு=படா[1]யீ. (பெ)
கணக்கு=ஹிஸாப்[1] (ஆ)
ஆங்கிலம் = அங்க்[1]ரேஜீz. (பெ)
சரித்திரம்=தவாரீக், இதிஹாஸ். (ஆ)
ஸயன்ஸு (சாஸ்திரம்)= விஞான். (ஆ)
பூகோளம்=பூகோல். (ஆ)
மதம்=மஜ்zஹப். (ஆ)
தேகப்பயிர்ச்சி=கவாயத்[1], கஸரத். (பெ)
சம்பளம் (நாம் செலுத்தும்) =ஷுல்க். (ஆ)
சம்பளம் (நாம் பெறுவது= தனக்கா. (ஆ)
அபராதம் (Fine) = ஜுர்மாணு. (ஆ)
தண்டனை=ஸஜாz (பெ)
பிரம்பு=பே[1]ந்த். (ஆ)

## கோர்ட் சம்பந்தமாக

நீதிஸ்தலம் = (கோர்ட்) அதா[1]லத். (பெ)
ஸிவில்கேஸ் = தி[1]வானீ (பெ)
கிரிமினல் கேஸ்=பௌஜ்தா[1]ரீ. (பெ)
சாக்ஷி=க[1]வாஹ். (ஆ)
சாக்ஷியம்=கவாஹீ. (பெ)
வாக்குமூலம் (Statement)= ப[1]யான். (ஆ)
ஸமாதானம் (Explanation) கைபியத். (பெ)
சிறைச்சாலை=ஜேல்காணு, காரா க[1]ர் (ஆ)
தீவாந்தரம் (Sranporthnlion) = காலாபாணீ. (ஆ)
மரண தண்டனை=மௌத்கீ ஸஜாz (பெ)
குருக்குவிசாரணை=ஜிரஹ். (பெ)

## நோய் சம்பந்தமாக

மலச்சிக்கல்=கப்$^1$'ஜ்z (ஆ)
பேதிமருந்து = ஜுலாப்$^1$. (ஆ)
மயக்கம்=சக்கர். (ஆ)
வாந்தி=கை, (பெ) வமன்(ஆ)
தலைவலி=ஸிர்கா த$^1$ர்த்$^1$ (ஆ)
கொட்டாவி = ஜம்பா$^1$யீ. (பெ)
நோயாளி=பீ$^1$மார். (ஆ)
நோய்=பீமாரி. (பெ)
பித்தம்=பித். (ஆ)
பாண்டு=பாண்டு$^1$. (ஆ)
குஷ்டம்=கோட்$^1$. (பெ)
சொறி=காஜ். (பெ)
படை=தா$^1$த்$^1$. (ஆ)
ஜலதோஷம்=ஜுகாம். (ஆ)
ஜுரம்=பு$^1$கார். (ஆ)
க்ஷயம்=ராஜ யக்ஷ்மா. (ஆ)
காசம்=தமா. (ஆ)
பாரிசவாயு=லக்வா. (ஆ)
பேதி=த$^1$ஸத். (பெ)
அஜீர்ணம் = பத்$^1$ ஹஜ்zமீ. (பெ)
மூலம்=ப$^1$வா ஸிர். (ஆ)
சீதபேதி=அதிஸார். (ஆ)
அம்மை=மாதாஜீ. (பெ)
மூர்ச்சை=பே$^1$ ஹோஷி (பெ)
வலி=அபஸ்மார். (ஆ)
புண்=புன்ஸீ. (பெ)
கட்டி=போடா$^1$. (ஆ)

எறிச்சல்=ஜலன், (ஆ)
வியர்வை=பஸீனா. (ஆ)
தற்நாற்றம்=ப$^1$த்$^1$பூ$^1$. (பெ)
வெட்டை=ப்ரமேஹ. (ஆ)
வாந்திபேதி=ஹைஜாz. (ஆ)
மூத்திரம்=பேஷாப்$^1$ (ஆ)
மலம்=மல். (ஆ)
பத்தியம்=பரேஹஜ். (ஆ)
கபம்=கப் (ஆ)
குருடு=அந்தா. (ஆ)
நொண்டி=லங்க$^1$டா. (ஆ)
செவிடு=ப$^1$ஹரா, (ஆ)
ஊமை=கூ$^1$ங்கா. (ஆ)
வீக்கம்=ஸூஜன். (ஆ)
வெடிப்பு=பட்னா. (ஆ)
யானைக்கால்=பீல் பாவ். (ஆ)
சுளுக்கு = நஸ் சட்$^1$னா. (ஆ)
மரத்துப்போதல் = ஜுன் ஜுனீ. (பெ)
தொண்டைக்கம்மல்=க$^1$லா பை$^1$ட்னா. (ஆ)
அடி அல்லது ரணம். } =சோட்$^1$ (பெ)
மருந்து=த$^1$வா. (பெ)
மாத்திரை=கோ$^1$லி. (பெ)
சூர்ணம்=சூரண். (ஆ)
களிம்பு=மர்ஹம். (ஆ)
கஷாயம்=காட்$^1$. (ஆ)
லேஹியம்=லேஹ்ய. (ஆ)

பொட்டலம்=புடி$^1$யா (ஆ)
கட்டு (Bandagh) = பட்டி. (பெ)
ஆஸ்பத்திரி = ஆஸ்பதால் (ஆ)

## மிருகங்கள்

மிருகம் = ஜான்வர், ஹைவான். (ஆ)
பசு=கா$^1$ய். (பெ)
மாடு=பை$^1$ல். (ஆ)
காளை=ஸாண்ட். (ஆ)
குதிரை=கோ$^1$டா$^1$. (ஆ)
கழுதை=க$^1$ தா$^1$ (ஆ)
கோவேரிக்கழுதை = கச்சர். (ஆ)
எருமை=பை$^1$ன்ஸ். (பெ)
நாய்=குத்தா. (ஆ)
பூனை=பி$^1$ல்லி (பெ)
எலி=சூஹா. (ஆ)
மூஞ்ஜர்=மூஸர். (ஆ)
பன்றி=ஸூவர். (ஆ)
மான்=ஹிரன். (ஆ)
புலி=பா$^1$க்$^1$. (ஆ)
சிங்கம்=ஷேர். (ஆ)
கரடி=பா$^1$லு, ரீச். (ஆ)
சிறுத்தை=சீதா. (ஆ)
ஒட்டை=ஊண்ட். (ஆ)
யானை=ஹாதீ. (ஆ)
மீன்=மச்லீ. (பெ)
முதலை=மக$^1$ர். (ஆ)
தவளை=மேண்ட$^1$க். (ஆ)
திமிங்கலம்=திமிங்க$^1$ல். (ஆ)
குரங்கு=ப$^1$ந்த$^1$ர். (ஆ)
ஓநாய்=பே$^1$டி$^1$யா. (ஆ)
குள்ள நரி=ஸியார். (ஆ)
நரி=லோமடீ$^1$. (பெ)
அணில்=கி$^1$லஹரி. (பெ)
கீரி=மங்கூஸ். (ஆ)
முயல்=கர் கோ$^1$ஷ். (ஆ)
வவ்வால்=சம்கா$^1$த$^1$ட். (ஆ)
ஓணான்=கி$^1$ர்கி$^1$ட். (ஆ)
பல்லி=சிப் கலி. (பெ)
காண்டாமிருகம்=கை$^1$ண்டா$^1$. (ஆ)
வெள்ளாடு=ப$^1$க்ரீ. (பெ)
செம்மறியாடு=பே$^1$ட். (பெ)
கூடு = பிஞ்ஜடா$^1$ (Cage). (ஆ)

## பூச்சிகள்

கொளவி=ப$^1$ர். (ஆ)
எறும்பு=சீண்டீ. (பெ)
ஈ=மக்கீ. (பெ)
வண்ணாத்திப்பூச்சி = தித்லீ. (பெ)
ஈசல்=பதிங்கா$^1$. (ஆ)
மூட்டைப்பூச்சி = கட்மல். (ஆ)
பேன்=ஜூங். (பெ)
தேள்=பிச்சூ. (ஆ)

பாம்பு=ஸாம்ப். (ஆ)
கொசு=மச்சர். (ஆ)
அட்டை=ஜோங்க். (ஆ)
எட்டுக்கால்பூச்சி = மகடீ[1] (பெ)

## பறவைகள்

காக்கை=கவ்வா. (ஆ)
குருவி=கௌ[1]ரையா. (ஆ)
கிளி=தோதா. (ஆ)
மயில்=மோர். (ஆ)
குயில்=கோயல். (பெ)
புறா=கபூ[1]தர். (ஆ)
மைனா=மைனா (ஆ)
கொக்கு=ப[1]கு[1]லா. (ஆ)
ஆந்தை=உல்லூ. (ஆ)
கோழி = மூர்கா[1] (ஆ) (பெண்பால்—மூர்கீ[1])
வான் கோழி = ஷுதுர் மூர்கீ[1]. (பெ)
கழுகு=கி[1]த்[1]. (பெ)
கருடன்=க[1]ருட்[1], சீல். (ஆ)
வாத்து=ப[1]தக். (ஆ)
கூடு (Nest) = கோஸ்லா. (ஆ)

## ஆடைகள்

துணி=கபடா. (ஆ)
வேஷ்டி=தோ[1]தீ. (பெ)
துண்டு=துவால். (ஆ)
அங்கவஸ்திரம் = உபர்னா (ஆ)
மேல்வேஷ்டி = து[1] பட்டா (ஆ)
போர்வை=ஓட்[1]னீ. (பெ)
கம்பளி=கம்பல். (ஆ)
பட்டு=ரேஷம். (ஆ)
நூல்=ஸுத். (ஆ)
கந்தல்=சிதடா[1]. (ஆ)
ஜிப்பா (சட்டை)=குர்தா. (ஆ)
ஷர்ட் ( ,, )=கமீஜ்z (ஆ)
கால்சட்டை = பாய்ஜாமா. (ஆ)
குல்லா=டோபீ. (பெ)
புடவை=ஸாடீ. (பெ)
ரவிக்கை=சோலீ. (பெ)
பாவாடை = லஹங்கா[1]. (ஆ)
தலப்பாகை = பக[1]டீ[1]. (பெ)
பனியன் = பனியாயன். (ஆ)
சால்வை=துமாலா. (ஆ)
ஜமக்காளம்=த[1]ரீ. (பெ)
பாய்=சடாயீ. (பெ)
தலைகாணி=தகியா. (ஆ)
மெத்தை=க[1]த்[1]தா. (ஆ)
கட்டில்=காட். (ஆ)
கொசுவலை=மச்சர் தான். (ஆ)

## கடன் சம்பந்தமாக

கடன் = கர்ஜ்z, உதா[1]ர். (ஆ)
வட்டி = ஸூத்[1]. (ஆ)
தவணை = கிஸ்த். (பெ)
அடமானம் = கிர்வி, ப[1]ந்த[1]க். (பெ)
விக்ரயம் = பி[1]க்ரீ. (பெ)
ஏலம் = நீலாம். (ஆ)
கொடுக்கல் வாங்கல் = லேவாதே[1]வி. (பெ)

## உறவினர்கள்

உறவு = நாதா. (ஆ)
உறவினர்கள் = ரிஷ்தேதா[1]ர், நாதேதா[1]ர்.
தாயார் = மா.
தாயாரின் ஸகோதரன் = மாமா.
தாயாரின் ஸகோதரி = மௌஸீ.
தாயாரின் தாய் = நானீ.
தாயாரின் தகப்பனார் = நானா.
தகப்பனார் = பா[1]ப்.
தகப்பனாரின் தகப்பனார் = தா[1]தா[1].
தகப்பனாரின் தாயார் = தா[1]தீ.
தகப்பனாரின் ஸகோதரன் = சாசா, காகா.
தகப்பனாரின் ஸகோதரி = பூபி, பு[1]வா.
தகப்பனாருடைய ஸகோதரியின் கணவன் = பூபா.
மகன் = லள்கா, பே[1]டா.
மகள் = லள்கி, பே[1]டீ.
குழந்தைகள் (Children) = ஔலாத்[1].
ஸகோதரன் = பா[1]யி.
ஸகோதரி = ப[1]ஹன்.
ஸகோதரனின் மகன் = ப[1]தீஜா.
ஸஹோதரனின் மனைவி = பௌ[1]ஜாயி, பா[1]பீ[1].
ஸகோதரியின் கணவன் = ப[1]ஹனோயீ.
ஸகோதரியின் மகன் = பா[1]ஞ்ஜா.
மனைவி = பீ[1]பீ, பத்னீ, ஔரத்.
மனைவியின் அல்லது கணவனின் தகப்பனார் = ஸஸுர்.
மனைவியின் அல்லது கணவனின் தாயார் = ஸாஸ்.
மனைவியின் ஸகோதரன் = ஸாலா.
கணவன் = பதி, ஷௌஹர்
கணவனின் அண்ணன் = ஜேட்.

கணவனின் தம்பி = தே[1]வர்
கணவனின் ஸஹோதரி = நநத்[1].
கணவனுடைய அண்ணனின் மனைவி = ஜேடானீ
கணவனின் தம்பியின் மனைவி = தே[1]வரானீ.
மனைவியின் ஸஹோதரி = ஸாலீ.
மனைவியின் ஸஹோதரியின் கணவன் = ஸாடு[1].
மகளின் கணவன் = தா[1]மாத்[1] ஜமயீ.
மகனின் மனைவி = ப[1]ஹூ, பதோஹூ.
மகனின் மகன் = போதா.
மகனின் மகள் = போதீ.
மகளின் மகன் = நாதீ.
மகளின் மகள் = நாதின்.
கலியாணப் பிள்ளை = து[1]லஹா.
கலியாணப் பெண் = துலஹின்.
கலியாணப் பிள்ளையைச் சேர்ந்த விருந்தாளிகள் = ப[1]ராதீ.
சக்களத்தி = ஸௌத்.
சக்களத்தாய் = ஸௌதேலிமா.
மாமாவின் மகன் = மமேரா பா[1]யீ.
தகப்பனுடைய ஸஹோதரனின் மகன் = சசேரா பா[1]யீ.
தகப்பனுடைய ஸஹோதரியின் மகன் = புபேரா பா[1]யீ
தாயாரின் ஸஹோதரியின் மகன் = மௌஸேரா பா[1]யீ.

## அங்கங்கள்

அங்கங்கள் = அங்க்[1]. (ஆ)
உடல் = ஜிஸ்ம், ப[1]தன். (ஆ)
தலை = ஸிர். (ஆ)
மண்டை = கோபடீ[1]. (பெ)
மயிர் = பா[1]ல். (ஆ)
நெற்றி = மாதா. (ஆ)
கண் = ஆங்க். (பெ)
புருவம் = பௌ[1]ங்ஹ். (பெ)
கண் இமை = பலக். (பெ)
மூக்கு = நாக். (பெ)
கன்னம் = கா[1]ல். (ஆ)
வாய் = மூஹ். (ஆ)
முகம் = மூஹ். (ஆ)
பல் = தா[1]ந்த். (ஆ)
நாக்கு = ஜீப்[1]. (பெ)
காது = கான். (ஆ)
உதடு = ஹோண்ட். (பெ)
மோவாய்கட்டை = டுட்[1]டீ[1] (பெ)
புஜம் = கந்தா[1]. (ஆ)
கை = ஹாத். (ஆ)
முழங்கை = குஹனீ (பெ)
மணிக்கட்டு = கலயீ. (பெ)
விரல் = உங்க[1]லீ. (பெ)

மார்பு=சாதீ. (பெ)
வயிறு=பேட். (ஆ)
முதுகு=பீட். (பெ)
இடுப்பு=கமர். (பெ)
உள்ளங்கை=ஹதேலீ. (பெ)
புட்டம் = சூதட்[1] நிதம்ப்[1]. (ஆ)
தொடை=ஜாங்க்[1]. (பெ)
முழங்கால்—கு[1]ட்ணு. (ஆ)
கால் = பைர், (ஆ) டாங்க்[1]. (பெ)
குதிக்கால்=எண்டீ[1]. (பெ)
பாதம்=பாவ். (ஆ)
கட்டைவிரல்=அங்கூ[1]டா. (ஆ)
நகம்=நாகூன். (ஆ)
தோல்=சமடா[1]. (ஆ)
ரத்தம்=கூன். (ஆ)
சீ=பீப்[1]. (பெ)
நரம்பு=நஸ். (ஆ)
எலும்பு=அட்[1]டீ[1]. (பெ)
கொழுப்பு=சர்பீ[1]. (பெ)
மூளை=மக[1]ஜ்z. (ஆ)
நுரைஈரல் = பேம்படா[1] (பெ)
குடல்=ஆந்தடீ[1]. (பெ)
பித்தக்குடல் = பித்த கோஷ். (ஆ)
நோவு (Spleen) = ப்லீஹா. (ஆ)
உயிர்=ஜான். (பெ)
வயது=உமர். (பெ)
எலும்புக்கூடு=டடரீ. (பெ)
மூச்சு=ஸான்ஸ். (பெ)
தும்மல்=சீங்க். (பெ)
விக்கல்=ஹிச்கீ. (பெ)
ஏப்பம்=ட[1]கார். (பெ)
தூக்கம்=நீந்த்[1]. (பெ)
நாடி=நாடீ[1]. (பெ)
நிலம்=ஜzமீன். (பெ)
உழல்=ஜோத்ணு (ஆ)
ஏர்=ஹல். (ஆ)
விதை=பீ[1]ஜ். (ஆ)
விதைத்தல்=போ[1]ணு. (ஆ)
ஏறு=காத்[1]. (பெ)
நீர்ப்பாய்ச்சல் = ஸீஞ்ச்ணு. (ஆ)
நீர்ப்பாசனம்=ஸிஞ்சாயீ. (பெ)
விளைச்சல்=பfஸல். (பெ)
அறுவடை=கடாயீ. (பெ)
வயல்=கேத். (ஆ)

## தொழில்கள்

தைக்க=ஸீணு. (ஆ)
தையல் வேலை அல்லது தையல் கூலி = ஸிலாயீ. (பெ)
நெசவுசெய்ய=பு[1]ன்ணு (ஆ)
நெசவு வேலை அல்லது நெசவு கூலி = பு[1]ணயீ. (பெ)

(நூல்) நூற்க = காத்ணா. (ஆ)
நூற்ற கூலி = கதாயீ. (பெ)
அச்சாக = சப்ணா. (ஆ)
அச்சடிக்க = சாப்ணா. (ஆ)
அச்சுவேலை அல்லது அச்சுக்கூலி = சபாயீ. (பெ)
அச்சுக்கூடம் = சாபா காணா (ஆ)
புத்தகத்தின் அட்டை = ஜில்த்[1]. (பெ)

## வேட்டை, விளையாட்டு முதலியன

வேட்டை = ஷிகார் (ஆ)
வேட்டைக்காரன் ஷிகாரீ. (ஆ)
துப்பாக்கி = ப[1]ந்து[1]க். (ஆ)
காடு = ஜங்க[1]ல். (ஆ)
காட்டு மிருகம் = ஜங்க[1]லி ஜான்வர். (ஆ)
சுட = கோ[1]லிமார்ணா. (ஆ)
ஓட = தௌட்[1]ணா, பா[1]க்[1]ணா. (ஆ)
பிடிக்க = பகள்ணா. (ஆ)
போட்டி = ஹோட்[1]. (பெ)
குதிரைப்பந்தயம் = கு[1]ட்[1] தௌ[1]ட்[1]. (பெ)
சூதாட்டம் = ஜூவா. (ஆ)
பந்தயம் = பா[1]ஜீ. (பெ)
ஜயிக்க = ஜீத்ணா. (ஆ)
தோற்க = ஹார்ணா. (ஆ)
பந்து = கே[1]ந்த்[1] (ஆ)
விளையாட்டு = கேல். (ஆ)
குஸ்தி = குஷ்தி. (பெ)
குத்துச்சண்டை = மூஷ்டி யுத்[1]. (ஆ)
குத்து = கூ[1]ஸா. (பெ)
குத்துக்குத்த = கூ[1]ஸா மார்ணா. (ஆ)
முள் = காண்டா. (ஆ)
முள் குத்திக்கொள்ள = காண்டா சுப்[1]ணா. (ஆ)
(முள்ளால்) குத்த = (காண்டேஸே) சுபா[1]ணா. (ஆ)
துளைக்க = சேத்[1]ணா. (ஆ)
துளை = சேத்[1] (ஆ)
கிழிக்க = பாட்[1]ணா. (ஆ)
ஒடிக்க = தோட்[1]ணா. (ஆ)
தோட்டா = கார்தூஸ். (பெ)
பீரங்கி = தோப். (பெ)
வெடிமருந்து = பா[1]ரூத்[1] (பெ)
சதுரங்கம் = ஷத்ரஞ்ஜ். (ஆ)
சீட்டு = தாஸ். (ஆ)
சிரிக்க = ஹஸ்ணா. (ஆ)
அழ = ரோணா. (ஆ)
கத்த = சில்லாணா. (ஆ)

பேசாமல் இருக்க = காமோஷ் ரஹ்னா, சுப் ரஹனா. (ஆ)
பயப்பட = ட[1]ர்னா. (ஆ)
வெட்கப்பட = ஸர்மானா. (ஆ)
குதிக்க = கூத்[1]னா. (ஆ)
துள்ள = உசல்னா. (ஆ)
தாண்ட = பாந்த்[1]னா. (ஆ)

## இரும்பு சாமான்கள்

கத்தீ = சுரீ. (பெ)
பேனா கத்தி = சாகூ. (ஆ)
பட்டாக் கத்தி = தல்வார். (பெ)
ஈட்டி = பா[1]லா. (ஆ)
அம்பு = தீர். (ஆ)
ஆணி = கீல், மேக். (ஆ)
கடப்பாரை = குதாலி. (பெ)
மண்வெட்டி (மம்மட்டி) = பாவடா[1]. (ஆ)
ஊசி = ஸூயி. (பெ)
துரு = ஜங்க்[1]. (ஆ)

## பொது விஷயங்கள்

அரசியல் = ஸியாஸி. (ஆ)
புரட்சி = விப்லவ், இங்கிலாப்[1]. (ஆ)
கலவரம் = த[1]ங்கா. (ஆ)
கூட்டம் = பீ[1]ட்.[1] (பெ)
பொதுக்கூட்டம் = மஜ்லிஸ். (பெ)
உபன்யாஸம் = வியாக்யான் (ஆ), தக்ரீர் (பெ)
தேருதல் = சுனாவ் (ஆ)
தலைவர் = ஸத்[1]ர். (ஆ)
வீதி, சாலை = ஸளக். (பெ)
ஒற்றையடிபாதை = பக[1]ட[1]ண்டி[1]. (பெ)

## ஆறு, குளம், ஏரி, கடல்

ஆறு = நதி[1]. (பெ)
உற்பத்தியாக = நிகல்னா. (ஆ)
பாய (ஓட) = ப[1]ஹனா. (ஆ)
நதியின் போக்கு = ப[1]ஹாவ். (ஆ)
வெள்ளம் = பா[1]ட்[1]. (பெ)
அணை = பா[1]ந்த்[1]. (ஆ)
குளம் = தாலாப்[1]. (ஆ)
படிக்கட்டு = ஸீடீ[1]. (பெ)
பாசி = காயீ. (பெ)
ஏரி = ஜீல். (ஆ)
கடல் = ஸமுந்த[1]ர். (ஆ)
அலை = லஹர். (பெ)
கரை = கினாரா. (ஆ)

## இயற்கை

சூரியன்=ஸூரஜ். (ஆ)
சந்திரன்=சாந்த்1. (ஆ)
நக்ஷத்திரம்=ஸிதாரா. (ஆ)
ஆகாயம்=ஆஸ்மான். (ஆ)
இரவு=ராத். (பெ)
பகல்=தி1ன். (ஆ)
காலை=ஸவேரா. (ஆ)
மாலை=ஷாம் (பெ)
பருவம்=மௌஸம். (ஆ)
மத்யானம் = தோ1பஹர். (ஆ)
வெய்யில்=தூ1ப். (பெ)
நிழல்=சாஹ். (பெ)
நிலா=சாந்தி1னீ. (பெ)
மழை=பா1ரிஷ். (பெ)
இடி=பி1ஜ்லீ. (பெ)
மின்னல்=பி1ஜ்லீ. (பெ)
மேகம்=பா1தல். (ஆ)
பனி=ஓஸ். (பெ)
மூடுபனி=குஹரா (ஆ)
பனிக்கட்டி=ப1ர்ப்f. (ஆ)
கல்மழை=ஓலா. (ஆ)
நீராவி=பா1ப். (ஆ)
காற்று=ஹவா. (பெ)
காற்றுமழை=துபாfன். (ஆ)
புயல்காற்று=ஆந்தீ1. (பெ)
மலை=பஹாட்1. (ஆ)
ஊற்று=ஸோதா. (ஆ)
அருவி=ஜர்னா. (ஆ)

## வீட்டு சாமான்கள்

பானை=மட்கா. (ஆ)
குடம்=க1டா. (ஆ)
மண்கூஜா=ஸுராஹீ. (பெ)
ஜலம்=பானீ. (ஆ)
குளிர்ந்த ஜலம்=டண்டா1 பானீ. (ஆ)
வெந்நீர்=க1ரம் பானீ. (ஆ)
அடுப்பு=சூல்ஹா. (ஆ)
தாகம்=ப்யாஸ். (பெ)
தாகம்கொண்ட = ப்யாஸா.
பசி=பூ1க். (பெ)
பசிகொண்ட=பூ1கா.
மொழுவ=லீப்னாபோ1தனா.
கழுவ=தோ1னா.
தேய்க்க=மாஞ்ஜனா.
சாதம்=பா1த். (ஆ)
முட்டை=அண்டா1. (ஆ)
பருப்பு=தா1ல். (பெ)
மாம்ஸம்=கோ1ஷ்த். (ஆ)
கறி=தர்காரீ. (பெ)
பச்சடி=ராய்தா. (ஆ)
அப்பளம்=பாபட்1 (ஆ)
பூரி=பூரி. (பெ)
ரொட்டி=ரோடீ. (பெ)
ரொட்டி (Bread) = பாவ் ரோடீ. (பெ)
வடை=ப1டா1. (ஆ)

தயிர்வடை = த[1]ஹீப[1]டா[1] (ஆ)
பஜ்ஜி = ப[1]ஜியா. (ஆ)
பகோடா = பகோடீ. (பெ)
ஓமப்பொடி = ஸேம். (ஆ)
சேமியா = ஸிவயீ. (பெ)
பாயஸம் = கீர். (பெ)
உலர்ந்த = ஸூகா.
ஈரமான = பீ[1]கா[1].
ஊறுகாய் = அசார். (ஆ)
வறுக்க = பூ[1]ன்னா.
வாட்ட = ஸேக்னா.
எண்ணெயில் அமர்த்தி வேகவிட = தல்னா.
தாளிக்க = சௌங்க்னா [ல்னா
கொதிக்க வைக்க = உபா[1]
சுண்ட வைக்க = ஔடானா.
கொதிக்க = உப[1]ல்னா.

## பொதுஜன வாழ்க்கை

நகரம் = ஷஹர். (ஆ)
கிராமம் = கா[1]வ். (ஆ)
பெரிய மனிதன் = ஷரீப்f.
தலைவன் = முகியா.
சண்டை = ஜக்[1]டா[1]. (ஆ)
விரோதி = துஷ்மன். (ஆ)
சிநேகம் = தோஸ்தி. (பெ)
பஞ்சாயத்து = பஞ்சாயத். (பெ)
ஸமாதானம் = ஸம் ஜௌதா. (ஆ)
ஜாதி பஹிஷ்காரம் = ஜாத் நிகாலா. (ஆ)
பிச்சைக்காரன் = பி[1]காரீ. (ஆ)
பிச்சை = பீக் (பெ)
வழிப்போக்கன் = ராஹ்கீ[1]ர். (ஆ)
பணக்காரன் = அமீர். (ஆ)
ஏழை = க[1]ரீப்[1]. (ஆ)
கேழ்ப்பார் அற்றவன் = ஆவாரா. (ஆ)
கலியாணம் = ஷாதீ[1]. (பெ)
விதவை = ராண்ட்[1] (பெ)
கொள்ளைக்காரன் = டா[1]கூ. (ஆ)
வேசி = ரண்டீ[1]. (பெ)
குரங்காட்டி = மதாரீ. (ஆ)
கொள்ளை = டா[1]கைதீ. (பெ)
மந்திரவாதி = ஜாதூ[1]க[1]ர். (ஆ)
பூசாரி = புஜாரீ. (ஆ)
புரோஹிதர் = புரோஹித் (ஆ)
பண்டிகை = த்யோஹார். (ஆ)
சாவு = மௌத். (பெ)
தீண்டல் = சூத் (பெ)
ஜோதிடன் = ஜோதிஷி (ஆ)
வைத்தியர் = வைத்[1]ய, ஹகீம். (ஆ)
தாதீ = தா[1]யீ. (பெ) [(ஆ)
பட்டினி = உபவாஸ், பாகா.
விரதம் = ரோஜாz (ஆ)
விருந்து = தா[1]வத். (பெ)

## வர்ணங்கள்

வர்ணம்=ரங்க்$^1$. (ஆ)
வெள்ளை=ஸபேத்$^1$
கருப்பு=காலா.
நீலம்=நீலா.
மஞ்சள்=பீலா.
ஊதா=ஊதா$^1$.
பச்சை=ஹரா.
சிகப்பு=லால்.
சாம்பல் நிறம்=பூ$^1$ரா. [ணீ.
கத்திரிப்பூகலர்=பைங்க$^1$

## சுவைகள்

புளிப்பான=கட்டா.
இனிப்பான=மீடா.
கசப்பான=கடு$^1$வா.
காரமான=தீகா.
உப்பான=நம்கீன், காரா.
துவர்ப்பான=கஸைலா.
ருசி=ஸ்வாத்$^1$, ஜாzய்கா.
ருசிகரமான= ஜாzய்கே தா$^1$ர்.

## சில உரிச்சொற்கள்

நல்ல=அச்சா.
கெட்ட=பு$^1$ரா.
நெட்டையான=ஊஞ்சா.
குள்ளமான=நாடா.
திட்டமான=காபீ{.
கெட்டிக்காரன்= ஹோஷியார்.
மடையன்=பே$^1$வகூப்{.
அருகே=பாஸ், நஜ்zதீ$^1$க்.
பக்கத்தில்=பா$^1$ஜூமே.
எதிரே=ஸாம்னே.
மேலே=ஊபர்.
கீழே=நீசே.
இலேசான=ஹல்கா.
பளுவான=பா$^1$ரீ.
கடினமான=முஷ்கில்.
எளிதான=ஆஸான்.
விலையுயர்ந்த=கீம்தீ.
கிராக்கியான=மஹங்கா$^1$.
மலிந்த=ஸஸ்தா.
படித்த=படா$^1$லிகா.
பருமனான=மோடா.
மெலிந்த=பதலா.
பலஹீனமான= கம்ஜோzர்.
ஆரோக்யமான = தந்துருஸ்த்.
முன்னால்=ஆகே$^1$.
பின்னால்=பீசே.
இன்று=ஆஜ்$^1$.
நாளை=கல்.
நேற்று=கல்.
நாளைபொறுத்து = பர்ஸோங்
மூந்தாநாள்=பர்ஸோங்.

சென்ற வருஷம் = பிச்லே ஸால்.
சென்ற மாதம் = பிச்லே மஹீனே.
சென்றவாரம் = பிச்லே ஹாப்fதே.
அடுத்தநாள் = அக$^1$லே தி$^1$ன்

## நகைகள்

நகை = க$^1$ஹனா. (பெ)
காப்பு = கடா. (ஆ)
மூக்குத்தி = பே$^1$ஸர். (ஆ)
தாலிக்கயிறு = கண்ட. (பெ)
கடுக்கன் = கரன்பூல். (ஆ)
வளையல் = சூட$^1$. (ஆ)
வைரம் = ஹீரா. (ஆ)
சிகப்புக்கல் = லால் (ஆ)
நீலக்கல் = நீலம். (ஆ)
ஒட்டியாணம் = கர்த$^1$னீ.
மாலை = மாலா, (பெ) ஹார். (ஆ)
பச்சைக்கல் = மாணிக். (ஆ)
முத்து = மோதி. (ஆ)
பூ = பூல். (ஆ)
பூமாலை = பூலோகங்கா ஹார். (ஆ)
மோதிரம் = அங்கூட, மூந்த$^1$ரீ. (பெ)
பேஸ்திரி (பேஸர்) = பே$^1$ஸர். (ஆ)
கம்மல் = கர்ணபூல். (ஆ)
மகுடம் = முகுட். (ஆ)
அரைஞாண்கயிறு = கர்த$^1$னீ.

## நாட்கள்

ஞாயிற்றுக்கிழமை = ரவிவார், ஐத்வார்.
திங்கக்கிழமை = ஸோம்வார், பீர்.
செவ்வாய்க்கிழமை = மங்கல், மங்கல்வார்.
புதன்கிழமை = பு$^1$த$^1$ வார், சார்ஷம்ப$^1$.
வியாழக்கிழமை = குருவார், பெ$^1$ஹஸ்பைf, ஜும்மேராத்.
வெள்ளிக்கிழமை = ஶுக்ரவார், ஜும்மா.
சனிக்கிழமை = ஶனிவார், ஹப்fதா.

## திக்குகள்

கிழக்கு = பூரப்$^1$, மஷ்ரீக்.
மேற்கு = பச்சிம். மக்$^1$ரிப்$^1$.
தெற்கு = தக்ஷின், ஜுனூப்$^1$
வடக்கு = உத்தர் — ஶுமால்.
திக்கு = திசா, தரப்f.

## அரசாங்கம்

வரி = கர். (ஆ)
ஆட்சி = ஶாஸன், (ஆ) ஹுகூமத். (பெ)
அரசன் = ராஜா, பா1த்ஷா. (ஆ)
ராணி = ரான், பே1க1ம். (பெ)
அரண்மனை = மஹல். (ஆ)
அந்தப்புரம் = அந்தஹ்புர், ஜZனானா. (ஆ)
ராஜகுமாரன் = ராஜ்குமார், ஷாஹ்ஜாZதா1. (ஆ)
ராஜ்யம் = ராஜ்ய, (ஆ) ஸல்தனத். (பெ)
மந்திரி = தீ1வான், வஜிZர்.
கீழ்படிந்த = மாதஹத்.
லஞ்சம் = ரிஷ்வத். (பெ)
பொக்கிஷம் = கஜானா. (ஆ)
ராணுவம் = பௌfஜ். (பெ)
வேலைநிறுத்தம் = ஹட1தால்.

## எழுத்துச் சம்பந்தமான சொற்கள்

கட்டுரை = லேக், மஜ்மூன். (ஆ)
கதை = கிஸ்ஸா, கதா. (ஆ)
சிறுகதை = கஹானீ. (பெ)
நாவல் = உபன்யாஸ். (ஆ)
நாடகம் = நாடக். (ஆ)
எழுத்தாளர் = லேகக். (ஆ)
பிரசுரிப்பவர் = ப்ரகாஶக். (ஆ)
விலை = தா1ம், (ஆ) கீமத் (பெ)
கூலி = மஜூரீ. (பெ)
பத்திரிகை = அகபா1ர் (ஆ)
ஆசிரியர் = ஸம்பாத1க். (ஆ)

## சில மிருகங்களின் கூவுதல்

நாய் குலைக்கிறது = குத்தா போ1ங்க்தா ஹை.
யானை கத்துகிறது = ஹாதீ சிக்1காட்1தா ஹை.
சிங்கம் கர்ஜிக்கிறது = ஷேர் க1ரஜ்தா ஹை
கழுதை கத்துகிறது = க1தா1 ரேங்க்தா ஹை.
பூனை கத்துகிறது = பி1ல்லீ ம்யாவ்கர்தீ ஹை.
பசு கூப்பிடுகிறது = கா1ய் ரம்பா1தீ ஹை.
இடிஇடிக்கிறது = பி1ஜ்லீ கரஜ்தீ ஹை.
மின்னல் மின்னுகிறது = பி1ஜ்லீ சமக்தீ ஹை.
குதிரை கனைக்கிறது = கோ1டா1 ஹின்ஹினாதா ஹை

## சில பொது வஸ்துக்கள்

மேஜை=மேஜ்z (ஆ)
நாற்காலி=குர்ஸீ (பெ)
தொட்டில்=பாலு. (ஆ)
பேனா=கலம். (பெ)
விளக்கு=தி1யா (பெ)
திரி=ப1த்தீ (பெ)
வியாபாரம்=வ்யாபார், (ஆ) திஜாரத். (பெ)
லாபம்=முனாfா. (ஆ)
நஷ்டம்=நுக்ஸான். (ஆ)
முதல்=பூஞ்ஜீ (பெ)
பங்கு=ஹிஸ்ஸா. (ஆ)
பாகஸ்தர்=ஹிஸ்ஸேதார். (ஆ)
முதலாளி=மாலிக் (ஆ)
லேவாதேவி=லேவா தே1வி. (பெ)
வாடிக்கைக்காரர்=கி1ராஹக. (ஆ)
ஈடு செய்ய=சுக்தா கர்னா (ஆ)
பங்கிட (வினியோகிக்க) = பா1ண்டனா. (ஆ)
இருப்பு=ப1சத். (பெ)
மொத்த வியாபாரம் = தோக். (ஆ)
சில்லரை வியாபாரம்=புட்கர்.
தபால்=டா1க் (பெ)
தபால்காரன்=டா1கியா, டாக்வாலா. (ஆ)
தபால் ஆபீஸ் = டா1க் கானா. (ஆ)
தபால்பெட்டி = டா1க்கீ பேடீ. (பெ)
பெட்டி=ஸந்தூ1க் (ஆ)
தந்தி=தார். (ஆ)
வரவு=ஆம்த1னீ (பெ) ஜமா. (ஆ)
செலவு=கர்ச். (ஆ)
நிலுவை=பா1கீ (பெ)
மிச்சம்=ப1சத். (பெ)
ஸமாசாரம்=கப1ர் (பெ)
கடிதம்=கத். (ஆ)
சீட்டு=புர்ஜா. (ஆ)
ரசீது=ரசீத்1. (ஆ)
ஒப்புக்கொள்ள=மஞ்ஜூர் கர்னா.

முற்றுப்பெற்றது.

திருமகள் விலாச அச்சு நிலையம் சென்னை:—1, 1954

# உங்களுக்கு வேண்டிய நூல்கள்

1. பகவான் அரவிந்தர்

பத்தினியாருக்கு எழுதிய கடிதங்கள் 0-8-0

அரவிந்தர் பல ஆண்டுகளுக்கு முன்னர் தமது பத்தினியாருக்கு எழுதிய அரிய கடிதங்களை புத்தக வடிவில் வெளியிட் டிருக்கின்றன. இவை அரவிந்தர் பெருமையை விளக்குவதுடன், மக்கள் கடமையையும் விளக்குகின்றனவாதலால் எவரும் படித்துப் பயன் பெறத் தக்கனவாகும்.

2. சிவானந்தர் உபதேசமாலை 0-12-0

இமயமலையில் தவம் புரியும் பெரியாரான சுவாமி சிவானந்தர் எழுதிய அரிய உபதேசங்கள் அடங்கியது. குழந்தைகளுக்கும் விளங்கும் எளிய நடை

3. மகாத்மா இந்தி ஆரம்ப பாடம் 0-5-0

தமிழ் தெரிந்தவர்கள் உபாத்தியாயர் இன்றி சுலபமாக ஹிந்தியை கற்றுக் கொள்ளலாம்.

கிடைக்குமிடம் :

B. இரத்தின நாயகர் அண்டு ஸன்ஸ்,
புத்தக வியாபாரிகள்,
மின்ட். போஸ்டு, சென்னை—1.